Follow us

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 477 பிலவ வருடம், மாசி மாதம் 28ஆம் திகதி சனிக்கிழமை (12.03.2022) ஹிஜ்ரி - 1444, ஷஃபான் - 08, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30


## மருந்துகளின் விலை 29 வீதத்தால் அதிகரிப்பு



02 பக்கம்

## இலங்கை - இந்திய மீனவர்கள் கச்சதீவில் பேச்சு

• கச்சதீவிலிருந்து யோ. தர்மராஜ்

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த திருவிழாவில் கலந்துகொள்வதற்காக தமிழகத்திலிருந்து வருகைதந்திருந்த மீனவர்களை இலங்கை மீனவர்கள்...

02 பக்கம்

## எரிபொருளின் விலையை அதிகரித்தது ஐ.ஓ.சி.



எரிபொருள் விலை

| | முன்னைய விலை | அதிகரித்த விலை | 11.03.2022 தற்போதைய விலை | தற்போதைய விலை |
|---|---|---|---|---|
| ஒக்டேன் 92 | ரூ. 204 | ரூ. 50 | ரூ. 254 | ரூ. 177 |
| ஒக்டேன் 95 | ரூ. 233 | ரூ. 50 | ரூ. 283 | ரூ. 207 |
| யூரோ 3 பெற்றோல் | ரூ. 213 | ரூ. 50 | ரூ. 263 | - |
| ஓட்டோ டீசல் | ரூ. 139 | ரூ. 75 | ரூ. 214 | ரூ. 121 |
| சுப்பர் டீசல் | ரூ. 174 | ரூ. 75 | ரூ. 249 | ரூ. 159 |
| எக்ஸ்ட்ரா மைல் டீசல் | ரூ. 145 | ரூ. 75 | ரூ. 220 | - |
| மண்ணெண்ணெய் | - | - | - | ரூ. 87 |

06.03.2022 IOC நிறுவனம் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையை 3 ரூபாவாலும் டீசல் லீற்றர் ஒன்றின் விலையை 7 ரூபாவாலும் அதிகரித்தது.

25.02.2022 IOC நிறுவனம் பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலையை 20 ரூபாவாலும் டீசல் லீற்றர் ஒன்றின் விலையை 15 ரூபாவாலும் அதிகரித்தது.

© THAMILAN GRAPHIC DESK

INFOGRAPHIC : UDESH SELVARAJ

02 பக்கம்

# தேசிய அரசா நான் அவுட்டா?

### கட்டுக்கதை என்கிறார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோட்டாவுடன் பேசுவதற்கும் வரவேற்பு

### தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களிடம் மனந்திறந்தார்



• நமது நிருபர்

தேசிய அரசாங்கமொன்று அமைவது குறித்து வெளிவந்துகொண்டிருக்கும் செய்திகளை நேற்று திட்டவட்டமாக நிராகரித்தார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

தமிழ்ப் பத்திரிகைகளின் ஆசிரியர்களை நேற்றுக்காலை அலரிமாளிகையில் சந்தித்து கலந்துரையாடியபோதே...

02 பக்கம்

## கோதுமை மாவின் விலை அதிகரிப்பு



## விமான சீட்டுகளின் விலை உயர்ந்தது



## பாணின் விலை அதிகரித்தது



## உணவுப் பொதியின் விலை உயர்ந்தது



02 பக்கம்

### கமெண்ட் கந்தர்..



மருந்து விலைகள கூட்டுறாங்களாம்... இனி மனிதருக்கு வரும் நோய்களுக்கு டெக்ஸ் அடிச்சாலும் அடிப்பாங்கள் ...

## நேரம் வரும்வரை காத்திருப்போமா...?



ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட மாநாடு, அக்கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்ரிபால சிறிசேன தலைமையில் கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது, அவருடன், தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் கலந்துரையாடுவதை படத்தில் காணலாம். (படப்பிடிப்பு: சமன் அபேசிறிவர்தன)

## எதிரணியின் நிபந்தனையற்ற ஆதரவு தேவை

### அமைச்சர் எஸ்.பி.

• க.கிஷாந்தன்

"தேசிய அரசு என்பதற்கு அப்பால், தற்போதைய சூழ்நிலையில் எதிரணிகள் நிபந்தனையற்ற ஆதரவை அரசுக்கு வழங்க வேண்டும்" - என்று கைத்தொழில் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

» 02 பக்கம்

## “பெசிலை வரச்சொல்லுங்கள்” சபையில் நேற்றும் காரசாரமான பேச்சு

### லக்ஷ்மன், நளின், அநுர கடும் எதிர்ப்பு



•நா.தினுஷா

நாட்டின் நிதி நிலைமை குறித்து நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தில் தெளிவுபடுத்த வேண்டுமென, எதிர்க்கட்சிகள் சபையில் நேற்று இரண்டாவது நாளாகவும் கோரிக்கைவிடுத்ததால் ஆளும், எதிர்த்தரப்புக்கு மத்தியில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

02 பக்கம்

### உஷ்



விமல், உதய, வாசுவை சந்திக்க எண்ணிய பிரதமர் மஹிந்த அவர்களை இரவு நேர சாப்பாட்டுக்கு அழைத்தாராம்.

யாருக்குமே தெரியாமல் ஒழுங்குசெய்யப்பட்ட இந்த நிகழ்வுக்கு மேற்படி மூவரும் வரத் தயாரானபோது ஊடகமொன்று அமைச்சர் விமலை தொடர்புகொண்டு இந்த சந்திப்பு குறித்து வினவியதாம்.

யாருக்கும் தெரியாமல் மிகவும் இரகசியமாக ஒழுங்கு செய்யப்பட்ட இந்த சந்திப்பு, ஊடகங்களுக்கு எப்படி கசிந்தது என்றெண்ணிய மூவரும் அப்படியே திரும்பி வீடுகளுக்கு சென்றுவிட்டனராம்.

இதனால் பிரதமர் தரப்பு அதிருப்தியில் இருப்பதாக தகவல்.

## நூற்றுக்கணக்கானோரின் கண்ணீருக்கு மத்தியில் பதுளை மாணவியின் பூதவுடல் நல்லடக்கம்

06 பக்கம்

## பேரீச்சம்பழ இறக்குமதிக்கு தடை விதிக்கவேண்டாம்!

### திறைசேரி செயலருக்கு பிரதமர் பணிப்பு

•நமது நிருபர்

இஸ்லாமியர்களின் நோன்புக்காலம் வருவதால் அவர்களுக்குத் தேவையான பேரீச்சம்பழங்களை இறக்குமதிசெய்வதற்கு அனுமதியளிக்குமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேற்று திறைசேரியின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகலவுக்கு பணிப்புரை விடுத்தார்.

தமிழ் ஊடகங்களின் ஆசிரியர்களை நேற்றுக்காலை பிரதமர் சந்தித்தபோது, அத்தியாவசியமற்ற பொருட்கள் இறக்குமதி பட்டியலில் பேரீச்சம்பழம் இருப்பது குறித்தும், இதனால் இஸ்லாமியர்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்தும் 'தமிழன்' பத்திரிகையின் ஆசிரியர் பிரதமரிடம் சுட்டிக்காட்டினார். 02 பக்கம்

## இலங்கையின் அபிவிருத்திக்கு தொடர்ந்து ஒத்துழைப்பு

### ஆசிய அபிவிருத்தி வங்கியின் தலைவர் ஜனாதிபதியிடம் உறுதி



02 பக்கம்

# சபையில் பேசும் உரிமை மறுக்கப்பட்டது

## கம்மன்பில கவலை

நா. தினுஷா

எரிபொருள் நெருக்கடி குறித்து நாடாளுமன்றத்தில் பேசுவதற்கு அனுமதி கேட்டபோதிலும், அதற்கான அனுமதி வழங்கப்படவில்லை - என நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் விளக்கமளித்து நேற்று (11) தனது ட்விட்டர் கணக்கில் பதிவொன்றினூடாக இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் நெருக்கடி தொடர்பில் உரையாற்றுவதற்கு நேற்று முன்தினம் நேரத்தை ஒதுக்கித் தருமாறு கோரியிருந்தேன். எனது அமைச்சிலிருந்து நான் நீக்கப்பட்டுள்ளதால் கடந்த 07ஆம் திகதி எழுத்து மூலமாக நாடாளுமன்ற செயலகத்திடம் இந்த விடயத்தைக் கோரியிருந்தேன்.

ஆனால், பேசுவதற்கான நேரத்தை ஒதுக்க முடியாது என்று கடந்த 08ஆம் திகதி நாடாளுமன்ற செயலகத்தால் எனக்கு அறிவிக்கப்பட்டது.

அதன்பின்னர் இதுதொடர்பில் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவிடம் பேசினேன். பார்ப்போம் என்று தெரிவித்தார். எரிசக்தி அமைச்சிலிருந்து கடந்த 03ஆம் திகதி பதவி நீக்கப்பட்டிருந்தபோதிலும், நேர ஒதுக்கீடு பட்டியல் நடவடிக்கைகள் நிறைவடைந்துவிட்டதால் நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய அலுவலகம் எனக்கு பின்னர் அறிவித்தது.

இந்த விடயத்தில் எனக்கு நீதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் முறைப்பாடு செய்துள்ளேன்.

ஒரு இலட்சத்து 36 ஆயிரத்து 331 வாக்குகளை பெற்றே ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் சார்பில் நாடாளுமன்றத்துக்கு தெரிவுசெய்யப்பட்டேன். நாடாளுமன்றத்தில் பேசுவதற்கான எனது உரிமையை மறுப்பதென்பது, எனக்கு வாக்களித்த மக்களின் நிலைப்பாட்டை வெளிப்படுத்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மறுப்பதென்பதாகும்.

நாடாளுமன்றத்தில் கருத்து வெளியிடும் எனது உரிமையை சபாநாயகர் பாதுகாக்க வேண்டும் என்று நான் மரியாதையுடன் எதிர்பார்க்கிறேன்.

# பஸ் கட்டணங்களை அதிகரிக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது

## தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம்



இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் கட்டணத்தை அதிகரித்தால் பஸ் கட்டணங்களை அதிகரிக்கவேண்டிய நிலையேற்படும் என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எரிபொருள் விலையை அதிகரித்தால் நாங்கள் பஸ் கட்டணங்களை அதிகரிப்போம் என தனியார் பஸ் உரிமையாளர் சங்கமும் மாகாணங்களிற்கு இடையிலான தனியார் பஸ் உரிமையாளர் சங்கமும் தெரிவித்துள்ளன.

அத்தியாவசியப் பொருட்கள் விலை அதிகரிப்பிற்கு அரசாங்கம் உடனடி தீர்வை காணவேண்டும் என அந்தச் சங்கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

டீசல் விலை அதிகரித்துள்ளதால் ஐஓசியின் எரிபொருள் நிரப்பு நிலையங்களை தங்களால் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுவதாக தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் டீசல் விலையை அதிகரித்தால் பஸ் கட்டணங்களை 50 வீதம் அதிகரிக்கவேண்டிய நிலையேற்படும் என தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

## இலங்கை - இந்திய...





அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்றுமாலை சந்தித்தனர். இருநாட்டு மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டது.

இந்திய மீனவர்களின் விசைப்படகுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென இலங்கை மீனவர்கள் சார்பில் இதன்போது கோரிக்கை விடுக்கப்பட்டது. எனினும் சுமார் இரண்டாயிரத்து 500 படகுகள் காணப்படுவதாகவும் உடனடியாக அவற்றை நிறுத்துவதால் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனவும் தமிழக மீனவர்கள் சுட்டிக்காட்டினர்.

ஆதலால், கால அவகாசம் வேண்டுமெனவும் எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள அடுத்த கட்ட பேச்சுவார்த்தையில் இதற்கான சாதகமான முடிவை வழங்க எதிர்பார்ப்பதாகவும் தமிழக மீனவர்கள் சார்பில் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், இந்திய - இலங்கை மீனவர் பிரச்சினை தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினும் கலந்துரையாட வேண்டுமென்ற கோரிக்கை இருதரப்பிலும் முன்வைக்கப்பட்டது. அதனை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஏற்றுக்கொண்டார்.

இந்திய மீனவர்களின் படகுகள் இலங்கையில் ஏலம் விடப்பட்ட விவகாரம் தம்மை கவலையடையச் செய்ததாக தமிழக கடற்றொழிலாளர்கள் அமைச்சரிடம் தெரிவித்தனர். இலங்கை கடற்பரப்பில் கையகப்படுத்தப்பட்ட மீன்பிடிப் படகுகளை ஏலத்தில் விடாமல் தமக்கே கையளிக்குமாறு இந்திய மீனவர்கள் சார்பில் கோரப்பட்டது.

அந்தக் கோரிக்கை அடங்கிய மகஜர், இந்திய விசைப்படகு உரிமையாளர்கள் சங்கத்தினரால் அமைச்சர் டக்ளஸிடம் கையளிக்கப்பட்டது.

இதேவேளை இந்த சந்திப்பு தொடர்பான விபரங்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு வருவதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்திய மீனவர்களிடம் இதன்போது தெரிவித்தார்.

# சஷி வீரவங்ச மீதான இரு வழக்குகள் தொடர்பிலான தீர்ப்பு மே 6இல்

இராஜதந்திர கடவுச்சீட்டை முறையற்ற விதத்தில் பெற்றுக்கொண்டமை, அதனை உடன் வைத்திருந்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் விமல் வீரவங்சவின் மனைவி சஷி வீரவங்சவிற்கு எதிராக தொடரப்பட்டுள்ள இரு வழக்குகளின் தீர்ப்பு எதிர்வரும் மே 06ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்குகள் கொழும்பு பதில் பிரதான நீதவான் சந்திம லியனகே முன்னிலையில் விசாரணைக்கு நேற்று (11) எடுக்கப்பட்டது. இதன்போது தீர்ப்புக்கான திகதி வைக்கப்படுவதாக நீதவான் அறிவித்தார்.

இவ்வழக்குகளின் தீர்ப்பு நேற்றையதினம் வழங்கப்படவிருந்தது. இந்நிலையில் அவ்வழக்கை விசாரித்த கொழும்பு பிரதான நீதவான் தற்போது மேல் நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்வு பெற்றுள்ள நிலையில், அவரே அந்த தீர்ப்பினை அறிவிக்கும் வகையில் இவ்வாறு தீர்ப்புக்கான திகதி ஒத்திவைக்கப்பட்டது.

## மருந்துகளின் விலை...

டொலருக்கான ரூபாவின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் காரணமாக மருந்துகளின் விலையை 29 வீதத்தினால் அதிகரிக்க தேசிய ஔடத கூட்டுத்தாபனத்தின் விலை கட்டுப்பாட்டுக் குழுவில் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன நாடாளுமன்றத்தில் நேற்று (11) தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை, இலங்கையில் உளவியல் ஆலோசனைகள், உளவியல் சிகிச்சையாளர்களை ஒழுங்குறுத்தல்கள் பற்றிய விவாதத்தின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மருந்துகளின் விலை நிர்ணயத்தை கையாள இறக்குமதியாளர்கள், வியாபாரிகள் மற்றும் விற்பனையாளர்களுக்கு வாய்ப்புகளை ஏற்படுத்திக்கொடுத்துள்ளதாக போலியான தகவல்கள் பரவுகின்றன.

இது முற்றுமுழுதாக பொய்யான செய்தியாகும்.

இலங்கையில் மருந்துகளின் விலை நிர்ணயம் குறித்த சட்டபூர்வமான அதிகாரம் தேசிய ஔடத கூட்டுத்தாபனத்திடமே உள்ளது. கூட்டுத்தாபனத்திடம் விலை கட்டுப்பாட்டுக் குழுவொன்று உள்ளது. அந்தக் குழுவில் 13 உறுப்பினர்கள் உள்ளனர். பாலித அபேகோன் அவர்களே இதன் தலைமைத்துவத்தை வகிக்கின்றார். அதேபோல் பல்வேறு நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நிபுணர்கள் உள்ளனர். இவர்கள் மூலமாகவே காலத்திற்கு காலம் மாறும் டொலர் பெறுமதி மாற்றங்கள் மற்றும் ஏனைய மாற்றங்கள் குறித்து கவனம் செலுத்தி மருந்துகளின் விலை அதிகரிப்பதா, குறைப்பதா என்பது குறித்து தீர்மானம் எடுக்கப்படும்.

இன்று (நேற்று) நண்பகல் 12 மணிக்கு இந்தக் குழு கூடியது. இப்போது டொலர் பெறுமதியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை கருத்திற்கொண்டு மருந்துகளின் விலையை எவ்வாறு அதிகரிக்க முடியும் என்ற பரிந்துரை ஒன்றினை முன்வைத்துள்ளனர். அதனையே எம்மாலும் நடைமுறைப்படுத்த முடியும்.

அரசாங்கத்திடமும் தேவையான மருந்துகள் உள்ளன. எனினும், தற்காலிக பிரச்சினைகள் சில உள்ளன.

அதனை விரைவாக தீர்ப்போம். மேலும், மருந்துகளின் விலையில் மாற்றம் ஏற்படும் எனக் கருதி சிலர் மருந்துகளை பதுக்கியுள்ளனர். எவ்வாறு இருப்பினும் இன்று (நேற்று) கூடிய விலை கட்டுப்பாட்டு குழு மருந்துகளின் விலையை 29 வீதத்தினால் அதிகரிக்க முடியும் என அறிவித்துள்ளது - என்றார்.

## எதிரணியின் நிபந்தனையற்ற...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக சந்தையில் இன்று பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. கொள்கலன்களுக்கான போக்குவரத்துக் கட்டணமும் அதிகரித்துள்ளது. இவற்றின் தாக்கம் இலங்கையிலும் எதிரொலிக்கின்றது.

பெரும் நஷ்டத்துக்கு மத்தியிலேயே எரிபொருள் விநியோகிக்கப்படுகின்றது. நஷ்டத்தை அரசு தாங்கிவருகின்றது. இவ்வாறான நெருக்கடி நிலையில் இருந்து கட்டங்கட்டமாகவே மீள வேண்டும்.

இன்னும் ஒரு வாரத்துக்குள் மின்சாரம் மற்றும் எரிபொருள் நெருக்கடி தீரும். ஆடைக் கைத்தொழில்மூலம் வருமானம் வரத் தொடங்கியுள்ளது. சுற்றுலாத்துறையும் எழுச்சி கண்டுவருகின்றது. வெளிநாடுகளில் தொழில் புரிபவர்கள் பணம் அனுப்புகின்றனர்.

இது நெருக்கடியான காலகட்டம். எனவே, தேசிய அரசு என்பதற்கப்பால் எதிரணிகள் அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்க வேண்டும். பிரிட்டன் போன்ற நாடுகளில் அவ்வாறு நடக்கின்றன. பிற நாடுகளில் அரச ஊழியர்களின் சம்பளம் குறைக்கப்பட்டது. ஆனால், நாம் அவ்வாறு செய்யவில்லை. எனவே, நெருக்கடி நிலைமையை நாம் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

நாட்டின் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமைக்கு நல்லாட்சி அரசும் பொறுப்புக்கூறவேண்டும்" - என்றார் எஸ்.பி.திஸாநாயக்க.

## கோதுமை மாவின்...

**கோதுமை மாவின் விலை அதிகரிப்பு**

ஐ.ஓ.சி. நிறுவனம் எரிபொருளின் விலையை அதிகரித்ததையடுத்து ப்ரீமா, செரண்டிப் ஆகிய நிறுவனங்கள் கோதுமை மாவின் விலையையும் அதிகரிப்பதாக நேற்று (11) அறிவித்தன.

அதன்பிரகாரம் கோதுமை மா ஒன்றின் விலையை 35 ரூபாவால் அதிகரிப்பதாக செரண்டிப் நிறுவனம் அறிவித்ததுடன், 40 ரூபாவாக அதிகரிப்பதாக ப்ரீமா நிறுவனம் அறிவித்தது.

**விமான சீட்டுகளின் விலை உயர்ந்தது**

இலங்கையில் வழங்கப்படும் அனைத்து விமான பயணச்சீட்டுகளின் விலைகளும் 27 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை ரூபாவுக்கு நிகரான அமெரிக்க டொலரின் பெறுமதி 260 ரூபாவாக அதிகரிக்கப்பட்டமையையடுத்து சிவில் விமான சேவைகள் அதிகாரசபையினால் இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் நேற்று (11) முதல் விமான பயணச் சீட்டுகளின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக சிவில் விமான சேவைகள் அதிகாரசபையின் தலைவர் ஹசித திலகரத்ன தெரிவித்துள்ளார்.

**பாணின் விலை அதிகரித்தது**

எரிபொருள் விலை அதிகரிப்பையடுத்து பாண் உள்ளிட்ட பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகளை அதிகரிப்பதாக பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. பாண் ஒன்றின் விலை 30 ரூபாவால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும் பேக்கரி உற்பத்திப் பொருட்களின் விலைகள் 10 ரூபாவால் அதிகரிக்கப்படும் எனவும் பேக்கரி உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

**உணவுப் பொதியின் விலை உயர்ந்தது**

நாட்டில் உணவுப் பொதியொன்றின் விலையை 20 முதல் 30 ரூபா வரை அதிகரிப்பதற்கு இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அதனடிப்படையில் நேற்றிரவு முதல் இந்த விலை அதிகரிப்பு அமுலுக்கு வரவுள்ளது.

**கொத்துரொட்டியின் விலையும் உயர்வு**

எரிபொருள் மற்றும் கோதுமை மா ஆகியவற்றின் விலை அதிகரிப்பு காரணமாக கொத்துரொட்டியின் விலையை அதிகரிப்பதற்கும் சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் தீர்மானித்துள்ளனர். அதன் பிரகாரம் கொத்துரொட்டியொன்றின் விலை 10 ரூபா முதல் 15 ரூபா வரை அதிகரிக்கப் படவுள்ளது.

## பேரீச்சம்பழ இறக்குமதிக்கு...

இதனையடுத்து உடனடியாக திறைசேரியின் செயலாளர் ஆட்டிகலவை தொலைபேசியூடாக தொடர்புகொண்ட பிரதமர், பேரீச்சம்பழ இறக்குமதிக்கு வரையறை விதிக்க வேண்டாமெனவும் அதனை அனுமதிக்குமாறும் பணித்தார்.

பிரதமரின் உத்தரவையடுத்து அத்தியாவசியமற்ற உணவுப் பொருட்கள் இறக்குமதி பட்டியலில் இருந்து பேரீச்சம்பழத்தினை நீக்கி அதனை தாராளமாக இறக்குமதி செய்ய அனுமதிக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## எரிபொருளின் விலையை...

நா. தினுஷா

அனைத்து வகையான டீசல் மற்றும் பெற்றோல் ஆகியவற்றின் விலைகளை நேற்றுமுன்தினம் (10) நள்ளிரவு முதல் அதிகரித்துள்ளாக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதற்கமைய ஒரு லீற்றர் டீசல் 75 ரூபாவாலும், ஒரு லீற்றர் பெற்றோல் 50 ரூபாவாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக லங்கா ஐ.ஓ.சி. நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதனபடிப்படையில் பெற்றோலின் புதிய விலை 254 ரூபாவாகவும் டீசல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 214 ரூபாவாகவும் அதிகரிப்பட்டுள்ளது.

லங்கா இந்தியன் ஒயில் நிறுவனம் கடந்த மாதம் இரண்டு தடவைகள் எரிபொருள் விலையை அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## தேசிய அரசா? நான் அவுட்டா?...

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்து இந்தச் சந்திப்பில் பேசப்பட்டது.

தேசிய அரசொன்று அமையலாம் என்பது வெறும் பேச்சுதான். இருக்கும் அரசு பலமானதாக இருக்க வேண்டும். இப்படியொன்று நடக்கிறதா என்பது எனக்குத் தெரியாதே? அப்படியென்றால் நான் அவுட்டா? (சிரிக்கிறார்). சிலவேளை ரணிலுக்கு மனதில் ஆசை இருக்கலாம். அதற்கு நாம் என்ன செய்ய முடியும்" - என்றார் மஹிந்த.

அரசாங்கம் இப்போது ரணிலிடம்தான் ஆலோசனைகளை கேட்பதாக செய்திகள் கூறுகின்றனவே என்ற கேள்விக்கு பதிலளித்த பிரதமர், வங்கியொன்றை கொள்ளையிட வேண்டுமானால் ரணிலிடம் ஆலோசனை கேட்கலாம். அரசியல் ஆலோசனைகளை அவரிடம் கேட்குமளவுக்கு அரசாங்கம் இன்னும் தாழ்ந்துவிடவில்லை - என்றார்.

விமல் வீரவங்ச, உதய கம்மன்பில ஆகியோர் மீண்டும் அரசுக்குள் வரும் வாய்ப்பு இருக்கிறதா? என்ற கேள்விக்குப் பதிலளித்த பிரதமர் மஹிந்த, அவர்கள் வெளியில் தனியாக நின்று என்ன செய்ய முடியும்? தேர்தலொன்று வந்தால் அவர்கள் ஏதாவது பிரதான கட்சியுடன்தான் ஒட்டவேண்டும். ஐக்கிய மக்கள் சக்தியோ அல்லது ஐக்கிய தேசியக் கட்சியோ அவர்களை அரவணைக்காது. கடந்த தேர்தலில் அவர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டிருந்தனர். எனவே, தேர்தலொன்று வருமாயின் எங்களிடம் அவர்கள் வரவேண்டி வரும் - என்றார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் ஜனாதிபதி கோட்டாபய எதிர்வரும் 15ஆம் திகதி நடத்தவுள்ள பேச்சு குறித்து செய்தியாளர் ஒருவர் கேள்வியெழுப்பினார்.

அவர்கள் ஜனாதிபதியுடன்தான் பேச வேண்டும். அப்போதுதான் கிடைக்கக் கூடியவற்றை பெறலாம். அபப்டி பேச்சு நடத்த அவர்கள் முன்வருவது நல்லது - என்றார் மஹிந்த.

மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடக்குமா? என்று கேள்விக்கு பதிலளித்த அவர், ஆம். நடக்கும். கூடிய விரைவில் நடக்கும். எந்த முறைமையின் கீழ் தேர்தலை நடத்துவதென விரைவில் தீர்மானிக்கப்படும் - என்றார்.

இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்கு உதவுவதில் இந்தியா முக்கிய பங்கினை வகிப்பதாக குறிப்பிட்ட மஹிந்த, உக்ரைனில் ஏற்பட்டுள்ள மோதல் நிலைமை இலங்கைக்கும் தாக்கத்தை ஏற்படுத்துமெனவும், சுற்றுலாப்பயணிகள் வருகை, இலங்கையின் ஏற்றுமதி என்பன பாதிக்கப்படுமெனவும் தெரிவித்தார்.

## இலங்கையின் அபிவிருத்திக்கு...

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒத்துழைப்புடன் இந்நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட திட்டங்கள், குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அதன் தலைவர் மசட்சுகு அசகாவா, இலங்கையில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குவதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போதே மசட்சுகு அசகாவா இவ்வாறு தெரிவித்தார்.

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் மற்றும் தனியார்துறையின் தொழில் முனைவோர் வளர்ச்சிக்கு ஒத்துழைப்பு வழங்குவதில் விசேட கவனம் செலுத்தப்படும் என்றும் தலைவர் தெரிவித்தார். ஆசிய அபிவிருத்தி வங்கி, கடந்த வருடம் 750 மில்லியன் டொலர் சலுகைக் கடன்களை வழங்கியது. இந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களுக்கு 02 பில்லியன் டொலர் கடன் உதவி ஒதுக்கப்படும் என்று மசட்சுகு அசகாவா குறிப்பிட்டார்.

கொவிட் தொற்றுப்பரவல் காரணமாக பின்னடைவைச் சந்தித்த இலங்கையின் சுற்றுலாத் துறையின் மேம்பாட்டிற்கும், மனிதவள அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பு வழங்குவதாக தலைவர் மேலும் தெரிவித்தார்.

கொவிட் தொற்றுநோயின் விளைவுகளைத் தணிக்க, இலங்கைக்கு கிட்டத்தட்ட 600 மில்லியன் அமெரிக்க டொலர் கடன்கள் மற்றும் நிதி உதவிகளை வழங்கியதற்காக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

பசுமை விவசாயம், புதுப்பிக்கத்தக்க வலுசக்தி உற்பத்தி மற்றும் கைத்தொழில் வலயங்களில் நேரடி வெளிநாட்டு முதலீட்டுக்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டார்.

மொத்த வலுசக்தி உற்பத்தியில் 70 சதவீதங்களைப் புதுப்பிக்கத்தக்க மூலங்களிலிருந்து பெறுவதை அரசாங்கம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 55ஆவது வருடாந்த மாநாடு, எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 05ஆம் திகதிமுதல் 08ஆம் திகதிவரை கொழும்பில் நடைபெறவுள்ளது. இதற்காக இலங்கையைத் தெரிவு செய்தமை தொடர்பில் மகிழ்ச்சியைத் தெரிவித்த ஜனாதிபதி, அதனைச் சிறப்பாக நடத்துவதற்கு தாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஆலோசகர் ஹருதோ தகிமுரா, வதிவிடப் பணிப்பாளர் சென் சென், பணிப்பாளர் நாயகம் கெனெச்சி யோகொயாமா, செயலாளர் முஹம்மட் எஹ்சான் கான், பிரதி வதிவிடப் பணிப்பாளர் உத்சவ் குமார், ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அஜித் அபேசேகர ஆகியோரும் இச்சந்தர்ப்பத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

## "பெசிலை வரச்சொல்லுங்கள்"...

நாடாளுமன்றம் சபாநாயாகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்றுக்காலை 10 மணிக்கு ஆரம்பமானது. அதன்போது சிறுப்புரிமை கேள்வியொன்றை முன்வைத்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார, நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ நேற்று (நேற்றுமுன்தினம்) நாடாளுமன்றத்துக்கு வந்தார். ஆனாலும் கருத்து தெரிவிக்கவில்லை. நாட்டின் நிதி நிலைமை குறித்து அவர் தெளிவுபடுத்த வேண்டும் என சபாநாயகரிடம் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திசாநாயக்க கருத்து வெளியிடுகையில், அமெரிக்க டொலர் இரு நாட்களில் 200 ரூபாவிலிருந்து 260 வரை உயர்வடைந்துள்ளது. இது பொருளாதாரத்தை எந்தளவுக்கு பாதிக்கும் என்பதை நாம் அறிவோம். அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. நாட்டின் நிதி நிலைப்பாடு அல்லது நாட்டில் என்ன நடக்கிறது என்பதை ஆளுந்தரப்பில் உள்ளவர்களும் அறிந்துகொள்ள ஆவலாக இருக்கிறார்கள்.

பெசிலின் முகத்தைப் பார்க்கவோ, அவர் நாடாளுமன்றத்தில் இருப்பதை பார்க்கவோ எமக்கு எந்தத் தேவைப்பாடும் இல்லை. அவர் நிதி நிலைமை குறித்து இந்த உயரிய சபைக்கு தெளிவுபடுத்த வேண்டும். பொறுப்புள்ள அமைச்சர் என்றால் அவர் நாடாளுமன்றத்தில் இந்த விடயங்களை முன்வைக்க வேண்டும்.

அண்ணன் ஜனாதிபதியாகவும் மற்றுமொரு அண்ணன் பிரதமராகவும் மற்றுமொரு அண்ணன் அமைச்சராகவும் இருக்கும்போது கடைசித் தம்பி விளையாட்டுப் பிள்ளையாக இருக்க ஆசைப்படலாம். அது குடும்பமொன்றுக்கு சில சந்தர்ப்பங்களில் பொருத்தமாக இருக்கலாம். ஆனால், நாடாளுமன்றத்தில் பொறுப்பாக நடந்துகொள்ள வேண்டும். ஆதலால் நாடாளுமன்றத்தில் நாட்டின் நிலைமை குறித்து தெளிவுபடுத்துமாறு சபாநாயகராகிய நீங்கள் அமைச்சர் பெசிலுக்கு பணிப்புரை வழங்க வேண்டும் எனக் கோரினார்.

இது தொடர்பில் விவாதம் ஒன்றை கோரினால் அது குறித்து பரிசீலனை செய்ய நாம் தயார் என அமைச்சர் தினேஷ் குணவர்தன அதற்குப் பதிலளித்தார்.

இதன்போது, எழுந்த லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி., நாட்டின் நிதி நிலைமை குறித்து நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கும் பொறுப்பு பெசில் ராஜபக்ஷவுக்கு உண்டு எனத் தெரிவித்தார்.

இந்த வாதப்பிரதிவாதங்களை செவிமடுத்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, அமைச்சர்களுக்கு பணிப்புரை வழங்கும் அதிகாரம் தனக்குக் கிடையாது - என்றார்.

# அரச நிறுவனங்களின் பணிப்பாளர் சபையின் தீர்மானங்களால் அரசாங்க நிதிக்கு பாதிப்பு!

## கோப் தலைவர் சரித ஹேரத் சுட்டிக்காட்டு

அரச நிறுவனங்களின் பணிப்பாளர் சபைகளில் சேவையாற்றும் அதிகாரிகளால் காலத்துக்குக் காலம் எடுக்கப்படும் தீர்மானங்களால் அரச நிதிக்கு பாரிய இழப்புகள் ஏற்படுவதாக அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (கோப்) தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் சரித ஹேரத் தெரிவித்தார்.

2017 மற்றும் 2018ஆம் ஆண்டுகளுக்கான அபிவிருத்தி லொத்தர் சபையின் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கைகள் மற்றும் தற்போதைய நிலைமைகள் பற்றி ஆராயும் வகையில் கோப் குழு நாடாளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று முன்தினம் (10) கூடியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அபிவிருத்தி லொத்தர் சீட்டிழுப்பு நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவுசெய்யும் நோக்கில் 38.75 மில்லியன் ரூபா செலவுசெய்து நிர்மாணிக்கப்பட்ட கலையகத்தை உரிய நோக்கத்திற்காக 2015 முதல் இதுவரை பயன்படுத்தாமை தொடர்பில் குழுவின் அவதானம் செலுத்தப்பட்டது. மேலும், இதே நோக்கத்திற்காக அவ்வாறான நிகழ்ச்சிகளை ஒளிப்பதிவு செய்வதற்கு இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்திற்கு குறித்த காலப்பகுதியில் 2146.82 மில்லியன் ரூபா பணம் செலுத்தியமை தொடர்பிலும் குழு கேள்வி எழுப்பியிருந்தது.

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தினால் மானிய விலையில் ஒளிப்பதிவு செய்வதால் இந்தக் கலையகம் தேவையில்லை எனவும் அதனை கேட்போர் கூடமாக அபிவிருத்திசெய்ய எதிர்பார்ப்பதாகவும் அபிவிருத்தி லொத்தர் சபையின் அதிகாரிகள் இங்கு தெரிவித்தனர்.

இதன்போது கோப் குழுவின் தலைவர் கருத்துத் தெரிவிக்கும்போது, வெவ்வேறு தலைவர்கள் மற்றும் பணிப்பாளார் சபைகளின் தேவைக்கேற்ப இவ்வாறான திட்டங்களை ஆரம்பிப்பதால் பாரிய நிதி முறைகேடாக பயன்படுத்தப்படுவதாகவும் அவ்வாறான திட்டங்கள் முறையாக உள்வாங்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் முறையான அறிக்கையொன்றை அமைச்சின் செயலாளர் ஊடாக குழுவுக்கு சமர்ப்பிக்குமாறும் தலைவர் தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக வொக்ஷோல் வீதியில் இலக்கம் 234 எனும் கட்டடத்தை வாடகை அடிப்படையில் சபைக்கு பெற்றுக்கொள்வதற்கான ஒப்பந்தத்தை அபிவிருத்தி லொத்தர் சபையினால் ஒருதலைப்பட்சமாக மீறியதால் சபைக்குக் கிடைக்கவேண்டிய 57,00,000 ரூபா நிதியை 14 ஆண்டுகளாக அறவிட முடியாமல் இருப்பது தொடர்பிலும் குழுவின் அவதானம் செலுத்தப்பட்டது.

அபிவிருத்தி லொத்தர் சபை வர்த்தக அமைச்சின் கீழ் இருந்தபோது மேற்படி கட்டடம் வர்த்தக அமைச்சினால் வாடகைக்கு எடுக்கப்பட்டதாகவும் தமது சபைக்கு கட்டடம் தேவைப்படுவதால் மேற்படி கட்டடத்தை பெற்றுக்கொள்ளுமாறு அமைச்சு அறிவித்ததாகவும் சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.



அதன்படி அமைச்சின் இடைக்கால குத்தகையின் கீழ் இந்தக் கட்டடத்துடன் ஒப்பந்தம் கைச்சாத்திட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர். சபையினால் இந்தக் கட்டடத்தை பயன்படுத்தும் போது மேலதிக நிதி செலவிடப்படுவதால் ஒப்பந்தத்தை இரத்துச்செய்ததாகவும் கட்டடத்துக்கான அடிப்படை கட்டணம் வர்த்தக அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் இங்கு புலப்பட்டது.

அதற்கமைய உரிய நிதியை பெற்றுக்கொள்வது தொடர்பில் அமைச்சின் செயலாளரின் அவதானிப்புகளை கோரியுள்ளதாகவும் இதற்காக அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரைகள் தற்பொழுது கிடைத்துள்ளதாகவும் இங்கு தெரிவிக்கப்பட்டது.

2015 மே மதம் 25ஆம் திகதி இலக்கம் பி.ஈ.டி/01/2015 எனும் அரசாங்க முயற்சியாண்மை சுற்றுநிருபத்துக்கமைய தகைமைகளை பூர்த்தி செய்யாத போக்குவரத்து உரிமையற்ற அதிகாரிகள் 08 பேருக்கு உத்தியோகபூர்வ வாகனங்களை ஒதுக்கியமை மற்றும் எரிபொருள் மணியத்துக்காக 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் 25,90,545 ரூபா நிதி வழங்கியமை தொடர்பில் கோப் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

அபிவிருத்தி லொத்தர் சபை ஜனாதிபதி செயலகத்தின் கீழ் இருந்தபோது வழங்கப்பட்ட அனுமதியின் அடிப்படையில் வாகனங்கள் வழங்கப்பட்டதாகவும் பின்னர் அவ்வாறான வாகனங்களை வழங்குவதை நிறுத்துமாறு அமைச்சு கடிதம் மூலம் அறிவித்துள்ளதாவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் முறையான விசாரணைகளை நடத்தி உரிய அனைத்து ஆவணங்களுடன் அறிக்கையொன்றை குழுவிற்கு அனுப்புமாறு கோப் குழுவின் தலைவர்,நிதி அமைச்சின் செயலாளருக்கு அறிவித்தார்.

2008ஆம் ஆண்டில் முகவர் நிறுவனம் ஒன்றின் ஊடாக 80,95,000 ரூபா பெறுமதியான கெப் வாகனமொன்றை சபையின் தலைவரால் பெற்று அதனை சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டிருந்தாலும் அன்றுமுதல் அந்த வாகனம் காணாமல் போயுள்ளமை தொடர்பில் கோப் குழு நீண்டநேரம் வினவியது.

அந்த வாகனத்துக்காக முகவர் நிறுவனத்துக்கு கொடுப்பனவு செய்யாமை காரணமாக அந்த நிறுவனம் வழக்கு தொடர்ந்ததால் அபிவிருத்தி லொத்தர் சபையினால் அந்நிறுவனத்துக்கு சுமார் 1,61,90,000 ரூபா செலுத்தவேண்டி ஏற்பட்டது. இந்த வழக்குக்காக சபையினால் மேற்கொள்ளப்பட்ட சட்டத்தரணிகள் கொடுப்பனவு உள்ளிட்ட 2018 டிசம்பர் 31 ஆம் திகதிவரையான முழு நட்டம் 2,66,34,185 ரூபாவாகும்.

சட்ட மா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைக்கமைய இந்த நட்டத்தை அறவிடுவதற்கு சிவில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக இதன்போது சபையின் தலைவர் தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர்களான சரத் வீரசேகர, மஹிந்த அமரவீர, இராஜாங்க அமைச்சர் நாலக்க கொடஹேவா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சுசில் பிரேமஜயந்த உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# பொல்கஹவெலவில் தடம்புரண்ட உதயதேவி புகையிரதம்!





மட்டக்களப்பிலிருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த உதயதேவி விரைவு புகையிரதம் பொல்கஹவெல மற்றும் வலகும்புர புகையிரத நிலையங்களுக்கு இடையில் நேற்று முன்தினம் (10) தடம் புரண்டுள்ளது.

இதனால் ரயில் பாதையும் கடுமையாக சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அந்த புகையிரத பாதையை புனரமைக்கும் பணிகள் இராணுவத்தினரால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

# கிளிநொச்சி மேல் நீதிமன்றுக்கு தேவையான ஆளணி நியமனம்

**(யாழ் நிருபர்)**

கிளிநொச்சி மேல் நீதிமன்றை ஆரம்பிக்கும் முதல் கட்ட ஆளணி நியமனத்தை நீதிச் சேவை ஆணைக்குழு வழங்கியுள்ளது.

கிளிநொச்சியில் மேல் நீதிமன்றக் கட்டடத் தொகுதி கடந்த ஜனவரி மாதம் நீதி அமைச்சரினால் திறந்துவைக்கப்பட்டது.

மேல் நீதிமன்ற நீதிபதி சகாதீன், கிளிநொச்சி மேல் நீதிமன்ற நீதிபதியாக நீதிச் சேவை ஆணைக்குழு நியமித்தது.

இந்நிலையில், நீதிச் சேவை ஆணைக்குழு நேற்று (11) வெளியிட்டுள்ள பதிவாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்கான இடமாற்றம் பட்டியல்களை உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிட்டுள்ளது.

அவற்றில் கிளிநொச்சி மேல் நீதிமன்றுக்கு பதிவாளர் மற்றும் உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மேல் நீதிமன்றுக்கு சிற்றூழியர் நியமனங்களை நீதி அமைச்சு வழங்கவேண்டும். மேல் நீதிமன்ற பணிகள் விரைவில் ஆரம்பமாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இறக்குமதிசெய்யப்பட்ட ரயில் பெட்டிகளில் கோளாறு;

## போக்குவரத்தில் இணைக்கும் பணிகள் கைவிடப்பட்டன

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள ரயில் பெட்டிகளை போக்குவரத்தில் இணைக்கும் நடவடிக்கைகள் கைவிடப்பட்டுள்ளன.

பெட்டிகளை ஒன்றோடொன்று இணைக்கும் பகுதியில் காணப்பட்ட கோளாறு காரணமாக கடந்த 04ஆம் திகதிமுதல் குறித்த ரயில் பெட்டிகளை போக்குவரத்தில் இணைக்கும் செயற்பாடுகள் கைவிடப்பட்டுள்ளதாக Locomotive operator பொறியிலாளர் சங்கத்தின் செயலாளர் இந்திக்க தொடங்கொட தெரிவித்துள்ளார்.

ரயில் பயணிகள் மற்றும் ரயில் போக்குவரத்துடன் தொடர்புடைய அதிகாரிகளின் பாதுகாப்பை கருத்திற்கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் ரயில் போக்குவரத்து அத்தியட்சகர் காமினி செனவிரத்னவிடம் வினவியபோது, சாரதிகள் மற்றும் ஒழுங்குபடுத்தல் சங்கங்கள் என்பன குறித்த ரயில் பெட்டிகளை போக்குவரத்தில் இணைக்காதிருப்பதற்கு தீர்மானித்துள்ளதாக அவர் கூறினார். இது தொடர்பிலான அறிக்கை பொறியியலாளர்கள் சங்கத்தினால் இதுவரை தமக்கு வழங்கப்படவில்லையென ரயில் போக்குவரத்து அத்தியட்சகர் காமினி செனவிரத்ன தெரிவித்தார்.

# ஹெரோயினுடன் ஒருவர் கைது

**(அநுராதபுரம் செய்தியாளர்)**

ஹெரோயின் போதைப்பொருளினை வைத்திருந்த சந்தேக நபர் ஒருவரை அநுராதபுரம் வலய போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலொன்றுக் கமைய நேற்று முன்தினம் அநுராதபுரம் நகரில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

சந்தேகநபரிடமிருந்து, 7 கிராம் 600 மில்லிகிராம் நிறையுடய ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

அநுராதபுரம் குருந்தங்குளம் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடய நபரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளமை ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் வலய போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். சந்தேக நபரை அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர்படுத்தவும் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் 76 இந்தியர்கள் பங்கேற்பு



**(மன்னார் நகர் நிருபர்)**

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா நேற்று (11) ஆரம்பமானாது. நேற்று ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 76 பக்தர்கள் மூன்று விசைப்படகுகள் மற்றும் ஒரு நாட்டுப்படகில் கச்சதீவு நோக்கி பயணமாகி உள்ளனர்.

கச்சதீவு செல்லும் இந்திய பக்தர்களை ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் வைத்து சுங்கத்துறை, காவல்துறை மற்றும் சுகாதாரத்துறையினர் முழுமையாக சோதனை செய்த பின் படகுகளில் செல்ல அனுமதித்துள்ளனர்.

பின்னர் மத்திய, மாநில உளவுத்துறை அதிகாரிகள் கச்சதீவு செல்லும் விசைப்படகுகளை முழுமையாக சோதனை செய்த பின் ராமநாதபுரம் மாவட்ட வருவாய் அலுவலர் காமாட்சி கணேசன் கொடியசைத்து பயணத்தை தொடங்கிவைத்தார்.

மேலும், ராமேஸ்வரத்திலிருந்து புறப்படும் பக்தர்கள் இரண்டு தவணை கொரோனா தடுப்பூசி செலுத்தி இருக்கவேண்டும், கொரோனா பரவல் தடுப்பு விதிமுறைகளை பின்பற்றி கச்சதீவு ஆலய திருவிழாவில் கலந்துகொள்ள வேண்டும் என ராமநாதபுரம் மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் நேற்று யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தின்கீழ் உள்ள நெடுந்தீவில் பங்குத்தந்தை வசந்தம் தலைமையில் இலங்கை பக்தர்கள் 50 பேர் திருவிழாவில் கலந்து கொள்கின்றனர்.

கச்சதீவு திருவிழாவில் கலந்துகொள்ள செல்லும் இலங்கை - இந்திய மீனவர்களை ஒன்றிணைத்து மீனவர் பிரச்சினை குறித்து இலங்கை மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் ஆலோசனைக் கூட்டமொன்று நடத்தப்பட உள்ளதால் இந்திய மீனவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவையொட்டி பாதுகாப்பு நலன்கருதி இரு தினங்களுக்கு நாட்டுப் படகு மற்றும் விசைப்படகு மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு செல்லக்கூடாது என ராமேஸ்வரம் மீன் வளத்துறையினர் அறிவித்துள்ளனர்.

இதனால் ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்தில் உள்ள சுமார் 800இற்கும் மேற்பட்ட விசைப் படகுகளும், 300இற்கும் மேற்பட்ட நாட்டு படகுகளும் கடலுக்கு மீன்பிடிக்க செல்லாமல் கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளது.

# குழந்தையுடன் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்ய முயற்சித்த தாய்!

## சிசு பரிதாபமாக பலி

(அநுராதபுரம் செய்தியாளர்)

வன்னியங்குளம் பகுதியில் தனது குழந்தையுடன் கிணற்றில் குதித்து தாய் ஒருவர் தற்கொலை செய்ய முயற்சித்துள்ளார்.

இந்தச் சம்பவத்தில் குழந்தை பரிதாபமாக உயிரிழந்துள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று அநுராதபுரம் பொலிஸ் பிரிவிலுள்ள வன்னியங்குளம் பகுதியில் இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் அநுராதபுரம் வன்னியங்குளம் பகுதியை வசிப்பிடமாகக்கொண்ட ஒரு வயதும் மூன்று மாதமும் வயதுடைய குழந்தையொன்றே இவ்வாறு உயிரிழந்துள்ளது என தெரியவந்துள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த தாய் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த குழந்தையின் சடலம் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சகல பாடசாலைகளும் திங்கள் முதல் வழமைக்கு

சகல பாடசாலை மாணவர்களையும் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் (14) வழமை போன்று கற்றல் நடவடிக்கைகளுக்கு அழைக்குமாறு கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.


அதற்கமைய, இதுதொடர்பிலான சுற்றறிக்கை கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேராவினால் வெளியிடப்பட்டுள்ளது.

உயர்தரப் பரீட்சை காரணமாக ஒரு மாத காலம் பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டிருந்த நிலையில், கடந்த 07ஆம் திகதி மீண்டும் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதுடன், இந்த காலப்பகுதிக்குள் பகுதி அடிப்படையிலேயே மாணவர்கள் பாடசாலைக்கு அழைக்கப்பட்டிருந்தார்கள்.

கொரோனா தொற்றினால் ஏதேனும் சிக்கல் நிலை ஏற்பட்டால் வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் நடவடிக்கை எடுக்கமாறும், இதுதொடர்பாக சுற்றறிக்கை மாகாண பிரதான செயலாளர்கள் மற்றும் மாகாண ஆளுநரின் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் கல்வி அமைச்சின் செயலாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கோதுமை மாவின் விலை அதிகரிப்பால் மலையக மக்கள் பெரிதும் பாதிப்பு





**(க.கிஷாந்தன்)**

நாட்டில் பொருட்களின் விலைகள் தொடர்ச்சியாக அதிகரித்துவரும் சூழ்நிலையில், இன்றுமுதல் கோதுமை மாவின் விலையும் எகிறியுள்ளதால் மலையக மக்கள் பெரிதும் பாதிக்கப்படக்கூடும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மலையகத்தில் நகர்ப்புறங்கள் மற்றும் பெருந்தோட்டப் பகுதிகளில் வாழும் மக்களுள் பெரும்பாலானவர்கள், தமது உணவுத் தேவையைப் பூர்த்திசெய்வதற்கு கோதுமை மாவை பயன்படுத்தி வருகின்றனர். பெரும்பாலான வீடுகளில் இருவேளை ரொட்டியே உண்ணப்படும்.

இதனால் மாதாந்தம் அதிகளவு கோதுமை மாவை அம்மக்கள் கொள்வனவு செய்வார்கள். இந்நிலையில், கோதுமை மாவின் விலை 35 முதல் 40 ரூபாவரை அதிகரித்துள்ளதால் அது அவர்களின் வாழ்க்கைச்சுமையை மேலும் அதிகரிக்க வைக்கும்.

ஏற்கனவே பெருந்தோட்ட மக்களுக்கு உரிய வகையில் சம்பளம் வழங்கப்படுவதில்லை. தோட்டப்பகுதிகளில் நாட்சம்பளத்துக்கு வேலை செய்பவர்களின் சம்பளமும் அதிகரிக்கப்படவில்லை. இதனால் கோதுமை மா விலை அதிகரிப்பு அவர்களுக்கு பெரும் தாக்கமாக அமையும் என பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அரசால் மாதாந்தம் 15 கிலோ கோதுமை மா பெருந்தோட்டத்தில் வேலை செய்யும் பதிவுசெய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு மாத்திரமே வழங்கப்படுகின்றது. அதுகூட அவர்களுக்கு போதுமானதாக இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவிலிருந்து இலங்கைக்கான அதிசொகுசு கப்பல்சேவை ஆரம்பம்

தமிழகத்திலிருந்து இலங்கைக்கான அதிசொகுசு உல்லாச கப்பல் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை அறிவித்துள்ளது.

இந்தியாவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த சேவை இலங்கைக்கான முதலாவது உல்லாச கப்பல் சேவை என சுற்றுலா சபையின் தலைவர் கிமார்லி பெர்னாண்டோ குறிப்பிட்டார்.

இந்த சேவையின் முதலாவது பயணம் சென்னையிலிருந்து ஆரம்பிக்கப்படவுள்ளதுடன், குறித்த கப்பல் தங்கும் அறை வசதிமுதல் பயணிகளின் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை பூர்த்திசெய்யக்கூடியவாறு வடிவமைக் கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலில் பயணிக்க விரும்பும் பயணிகள், இரண்டு கொரோனா



தடுப்பூசிகளையும் பெற்றிருப்பது அவசியம் எனவும் தொற்று ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்தும் பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கையை பயணிகள் வைத்திருக்க வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, மார்ச் 12ஆம் திகதி, சனிக்கிழமை

# வலிமையான தலைமையை வலியுறுத்திய இந்தியத் தேர்தல்

இந்தியாவில் கடந்த இரண்டு மாதங்களாக நடந்துவந்த தேர்தல் பரப்புரைகளின் பரபரப்பு ஓய்ந்து, ஐந்து மாநிலங்களின் சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியாகிவிட்டன. அவற்றில் உத்தரப்பிரதேசம், உத்தரகாண்ட், கோவா, மணிப்பூர் ஆகிய நான்கு சட்டமன்றங்களை அம்மாநிலங்களின் ஆளுங்கட்சியான பா.ஜ.க. தக்கவைத்துக்கொண்டிருக்கிறது. இவற்றில், மணிப்பூரில் மட்டும் பா.ஜ.க. தலைமையிலான கூட்டணி ஆட்சியில் இருந்தது. எனினும், கூட்டணிக் கட்சிகளைத் தவிர்த்து பா.ஜ.க. தனித்தே அங்கு களம் கண்டது. உத்தரப்பிரதேசத்தில் மிகப்பெரும் வெற்றியைப் பெற்றுள்ள பா.ஜ.கட்சி, பிரதான போட்டியாளராக இருந்த சமாஜ்வாதி கட்சியின் எதிர்பார்ப்பைத் தகர்த்திருக்கிறது.

அடுத்த இரண்டாண்டுகளில் மக்களவைத் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், இந்தத் தேர்தல் முடிவுகள் நாடு முழுவதும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டன. மத்தியில் ஆளும் பா.ஜ.க. தனது செல்வாக்கைத் தொடர்ந்து தக்கவைத்துக்கொண்டுள்ளது என்பதை இத்தேர்தல் முடிவுகள் உணர்த்தும் அதேவேளை, தேசிய அரசியலில் காங்கிரஸின் இடம் கேள்விக்குறியாக மாறியிருப்பதையும் தெரிவிக்கின்றன. உத்தரப்பிரதேசத்தில் படுதோல்வியைச் சந்தித்துள்ள காங்கிரஸ், தாம் ஆட்சியிலிருந்த பஞ்சாப் மாநிலத்தை ஆம் ஆத்மி கட்சியிடம் இழந்துவிட்டது.

பஞ்சாபில் மட்டுமே பா.ஜ.க. போட்டியில் பின்தங்கிப்போனது. ஆனால், பா.ஜ.க. மீதான விவசாயிகளின் அதிருப்தியென்பது, அங்கு ஆளுங்கட்சியாக இருந்த காங்கிரஸுக்கு ஆதரவாக மாறவில்லை. காங்கிரஸ் வெற்றிபெற வாய்ப்புள்ளது என்று எதிர்பார்க்கப்பட்ட உத்தரகாண்ட், கோவா சட்டமன்றங்களிலும் அக்கட்சியால் வெற்றிபெற முடியவில்லை. கோவாவில் பா.ஜ.கவும், ஆம் ஆத்மியும் தங்களது முதல்வர் வேட்பாளர்களை அறிவித்துப் பிரசாரத்தை நடத்தியபோது, காங்கிரஸ் அப்படி யாரையும் முன்னிறுத்துவதற்குத் தயாராகவில்லை. அத்துடன், திரிணாமுல் காங்கிரஸும் போட்டியில் கலந்துகொண்ட நிலையில், பெரும் எண்ணிக்கையிலான சுயேச்சை வேட்பாளர்களுடனும் சேர்ந்து காங்கிரஸ் போராட வேண்டியதாகிவிட்டது.

கடந்த 2019 மக்களவைத் தேர்தலுக்குப் பிறகு நடந்த 10 மாநிலங்கள் மற்றும் 2 ஒன்றியப் பிரதேசங்களுக்கான சட்டமன்றத் தேர்தல்களில் பா.ஜ.கவால் 4 சட்டமன்றங்களை மாத்திரமே கைப்பற்ற முடிந்தது. இந்நிலையில், தற்போது நான்கு மாநிலங்களில் பா.ஜ.க. ஆட்சியில் தொடர்வது அக்கட்சிக்கு ஒரு புத்துணர்வை அளிக்கக்கூடியதாக மாறும். மேலும், பா.ஜ.கவுக்கு எதிராகப் பிராந்தியக் கட்சிகள் அனைத்தையும் ஒருங்கிணைத்து, அவற்றுக்குத் தலைமையேற்கலாம் என்ற காங்கிரஸின் வியூகத்தை இத்தேர்தல் முடிவுகள் தவிடுபொடியாக்கிவிட்டன.

காங்கிரஸ் தன்னை ஒரு தீவிர சுயபரிசோதனைக்கு உள்ளாக்கிக்கொள்ள வேண்டும் என்ற பாடத்தைத்தான் இம்முடிவுகள் உணர்த்துகின்றன. அதே நேரத்தில், எதிர்க்கட்சிகள் தனித்தனியாகப் போட்டியிட்டதன் காரணமாக வாக்குகள் சிதறியதும் தாம் வெற்றிபெறுவதற்கு ஒரு வாய்ப்பை வழங்கியது என்பதையும் பா.ஜ.க. கருத்தில்கொள்ள வேண்டும். சட்டமன்றத் தேர்தல் முடிவுகளும், மக்களவைத் தேர்தல் முடிவுகளும் ஒன்றையொன்று பிரதிபலிப்பதில்லை என்பதே சமீபகால அரசியல் நிலைவரம்.

காங்கிரஸ் இரண்டே இரண்டு இடங்களில் மாத்திரமே வெற்றி பெற்றிருக்கிறது. பிரியங்கா வதேராவின் தீவிர பிரசாரம் கூட காங்கிரஸைக் காப்பாற்றவில்லை. அதேபோல், முன்னாள் முதல்வர் மாயாவதி தலைமையிலான பகுஜன் சமாஜ் கட்சியும் இரண்டு இடங்களில் மட்டுமே வென்று இத்தேர்தலில் படுதோல்வியை சந்தித்திருக்கிறது. காங்கிரஸின் வாக்குவங்கியும், பகுஜன் சமாஜ் கட்சியின் வாக்குவங்கியும், பா.ஜ.கவை நோக்கி நகர்ந்திருப்பதை தேர்தல் முடிவுகள் உணர்த்துகின்றன.

பஞ்சாபில் காங்கிரஸ் தோல்வியை சந்திக்கும் என்பதை அமரீந்தர் சிங் மாற்றப்பட்டபோதே அரசியல் நோக்கர்கள் கணித்துவிட்டனர். ஆம் ஆத்மி கட்சி காங்கிரஸுக்கு மாற்றாக உயரக்கூடும் என்பதும் எதிர்பார்க்கப்பட்டதே.

பஞ்சாப் பேரவையிலுள்ள 117 இடங்களில், கடந்த முறை 20 இடங்களில் மட்டுமே வெற்றிபெற்றிருந்த ஆம் ஆத்மி கட்சி, இந்த முறை 92 இடங்களைக் கைப்பற்றியிருப்பது அசாத்திய வெற்றி. அதே நேரத்தில் காங்கிரஸ் மட்டுமல்ல, அகாலி தளம், அமரீந்தர் சிங்கின் லோக் தந்திரிக் காங்கிரஸ், பா.ஜ.க. போன்ற கட்சிகள் கடுமையான பின்னடைவை எதிர்கொண்டிருப்பதும், ஆம் ஆத்மி கட்சி முன்னாள் காலிஸ்தானிய ஆதரவாளர்களின் ஆதரவைப் பெற்றிருப்பதும் அச்சத்தை ஏற்படுத்துகின்றன.

பஞ்சாபில் ஆம் ஆத்மி கட்சியின் வெற்றிக்கு முந்தைய அகாலி தளம், காங்கிரஸ் ஆட்சிகளின் மீது மக்களுக்கு ஏற்பட்டிருந்த வெறுப்பும், சலிப்பும் காரணங்கள். போதைப்பொருள் விற்பனை, படித்த இளைஞர்கள் மத்தியில் வேலையில்லாத் திண்டாட்டம், நலிந்துவரும் விவசாயம் ஆகியவை பஞ்சாப் தேர்தல் முடிவுகளில் எதிரொலித்திருப்பதைக் காணமுடிகிறது.

உத்தரகாண்ட் பேரவைத் தேர்தலில் மொத்தமுள்ள 70 இடங்களில் பா.ஜ.க. 46 இடங்களில் வென்று ஆட்சியைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது. கடந்த 2017 தேர்தலோடு ஒப்பிடுகையில், பா.ஜ.கவுக்கு இம்முறை இடங்கள் குறைவாகக் கிடைத்திருப்பதும், காங்கிரஸ் 17 இடங்களை வென்று தனது இருப்பைத் தக்கவைத்துக்கொண்டிருப்பதும் இன்னொரு செய்தியையும் தெரிவிக்கிறது.

கடந்த 2017 தேர்தலின்போதும் சரி, இப்போதைய தேர்தலின்போதும் சரி பஞ்சாபைத் தவிர, இதர மாநிலங்களில் மக்கள் வலிமையான மத்திய தலைமைக்கு வாக்களித்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள முடிகிறது. ஏனைய நான்கு மாநிலங்களில் விலைவாசி உயர்வு, வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பிரச்சினைகள் இருந்தும்கூட தலைமையின் மீதான நம்பிக்கை தேர்தல் முடிவுகளில் பிரதிபலிப்பதைக் காணமுடிகிறது.

வலிமையான தேசியத் தலைமையை மக்கள் விரும்புகிறார்கள் என்பதைத்தான் தேர்தல் முடிவுகள் பிரதிபலிக்கின்றன. எதிர்கால இலங்கைக்கும் இதில் ஒரு பாடம் இருக்கிறது. அரசியல் புரிந்தவர்களுக்கு அது புரியும்.

# வெள்ளி விழாவைக் கடந்து பயணிக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம்!

## மீடியா போரத்தின் வரலாற்றுப் பயணத்தின் சில நினைவுகள்

இலங்கை முஸ்லிம்களின் ஊடகத்துறை மேம்பாட்டைக் கருத்திற் கொண்டு 39 அங்கத்தவர்களுடன் தோற்றுவிக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம், இன்று 1000இற்கும் மேற்பட்ட அங்கத்தவர்களுடன் தனது பயணத்தில் இரு தசாப்தங்களைப் பூர்த்தி செய்திருக்கிறது. இக்காலப்பகுதியில் ஊடகத்துறையில் மாத்திரமன்றி, சமூகத்தின் மேம்பாடு கருதிய பல்வேறு வேலைத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்தியுள்ளது. அவற்றுள் குறிப்பிடத்தக்க சிலவற்றை மாத்திரம் இங்கு நினைவூட்ட விரும்புகிறோம்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம்.அஷ்ரப், பிரபல பௌத்த மதகுருவான சோம தேரருடன் விவாதம் ஒன்றுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டபோது இவ்விவகாரம் அக்காலத்தில் தேசிய ரீதியாக பெரும் பரபரப்பை தோற்றுவித்ததுடன், இனங்களுக்கிடையே பதற்றம் ஒன்றையும் உருவாக்கியிருந்தது. இந்நிலையில், இதன் பாரதூரத்தை உணர்ந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் உடனடியாக சகல முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஒரே மேசைக்குக் கொண்டுவந்து கலந்துரையாடல் ஒன்றை நடத்தியதுடன், அதன் சாதக பாதகங்கள் குறித்து


டலஸ் அழகப்பெரும
(ஊடகத்துறை அமைச்சர்)


நவாஸ் கனி
(இந்திய நாடாளுமன்ற உறுப்பினர்)


என்.எம்.அமீன்
(தலைவர் - ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம்)

ஆராய வழியமைத்தது. இதன் பின்னரே அமைச்சர் அஷ்ரப், குறித்த விவாதத்தில் பங்கேற்று சோம தேரரின் குற்றச்சாட்டுகளை முறியடித்தார்.

அதேபோன்றுதான் 2004இல் சுனாமி அனர்த்தம் ஏற்பட்டபோது, அதிகம் பாதிப்புக்குள்ளான முஸ்லிம் மக்களுக்குத் தேவையான உதவிகளையும், நிவாரணங்களையும் பெற்றுக்கொடுக்கும் வகையில் நாட்டிலுள்ள பிரதான முஸ்லிம் சிவில் நிறுவனங்களை ஒன்று சேர்ப்பதிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் காத்திரமான பங்களிப்பைச் செய்தது. இதன் விளைவாகவே 54 அமைப்புகளின் கூட்டமைப்பான முஸ்லிம் கவுன்சில் ஒவ் ஸ்ரீலங்கா தோற்றுவிக்கப்பட்டது.

இவை மாத்திரமன்றி, எப்போதெல்லாம் இலங்கை முஸ்லிம் சமூகம் நெருக்கடிகளை சந்தித்ததோ அப்போதெல்லாம் உடனுக்குடன் அரசியல், மார்க்க மற்றும் சிவில் தலைமைகளை ஒன்றுதிரட்டி, கலந்துரையாடல்களை நடத்தித் தீர்வுகளைக் காண்பதற்கான முயற்சிகளை தனது ஊடகப்பணிக்கு அப்பாலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் மேற்கொண்டு வந்துள்ளமை இந்த இடத்தில் குறிப்பிட்டுக் காட்டப்பட வேண்டியதாகும்.

அதேபோன்று இலங்கையில் ஊடகத்துறையில் ஆர்வம்கொண்ட இளைஞர், யுவதிகள் ஊடகத்துறையில் மேற்படிப்பைத் தொடரவும், அங்கீகரிக்கப்பட்ட தகைமைகளைப் பெற்றுக்கொள்ளவும் போதிய வாய்ப்புகள் இல்லை எனும் குறைபாட்டை உணர்ந்ததன் விளைவாக, ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் கொழும்பு பல்கலைக்கழகத்திடம் ஊடக டிப்ளோமா கற்கைநெறியொன்றை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்தது. இதன்பின்னரே கொழும்பு பல்கலைக்கழகத்தில் மும்மொழிகளிலுமான ஊடக டிப்ளோமா கற்கைநெறி ஆரம்பிக்கப்பட்டது. இதன்மூலம் இன்றுவரை சுமார் 600இற்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்த ஊடக டிப்ளோமா கற்கைநெறியைப் பூர்த்திசெய்து, இன்று இலங்கையில் ஊடகத்துறைக்கு பங்களிப்புச் செய்து வருகின்றனர்.

அது மாத்திரமன்றி, இக்கற்கைநெறியை தொடரும் மாணவர்களில் பொருளாதார உதவிகளை வேண்டிநிற்கும் தெரிவுசெய்யப்பட்ட சிலருக்கு, இலங்கையிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தின் உதவியுடன் வருடாந்தம் புலமைப்பரிசில்களை ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் வழங்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. இலங்கையில் முஸ்லிம்களுக்கான தனியான தினசரிப் பத்திரிகைகளின் அவசியம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் தொடர்ச்சியாகக் குரல் கொடுத்து வந்திருக்கிறது. இதனடிப்படையில் இன்று இலங்கை முஸ்லிம்களுக்காக தமிழ்மொழி மூலம் இரண்டு தினசரிப் பத்திரிகைகள் வெளிவருகின்றமை மகிழ்ச்சிக்குரியதாகும்.

அதேபோன்றுதான் ஏனைய பத்திரிகைகள், வானொலிகள் தொலைக்காட்சிகள் மற்றும் சமூக ஊடகங்களின் வளர்ச்சிக்கும் முஸ்லிம் மீடியா போரமும், அதன் உறுப்பினர்களும் காத்திரமான பங்களிப்புகளை வழங்கி வருகின்றனர்.

முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் ஊடகத்துறையில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில், குறிப்பாக, பாடசாலை மாணவர்களை இலக்காகக்கொண்டு "21ஆம் நூற்றாண்டில் ஊடகம்" எனும் தலைப்பில் மீடியா போரம் இதுவரை நாட்டின் பல்வேறு பகுதகிளிலும் 48 முழுநாள் கருத்தரங்குகளை நடத்தியுள்ளது.

அதேபோன்றுதான் பிராந்திய செய்தியாளர்களுக்கு பற்றாக்குறை நிலவும் பிரதேசங்களை இனங்கண்டு அப்பகுதிகளில் ஊடகத்துறையில் ஆர்வமுடையவர்களுக்கான செயலமர்வுகளையும் மீடியா போரம் நடத்தி வருகின்றது. குறிப்பாக, பொலன்னறுவை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் இவ்வாறான செயலமர்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

தமிழ் மொழியில் மாத்திரமன்றி சிங்கள மொழியிலும் முஸ்லிம் ஊடகவியலாளர்கள் உருவாக்கப்பட வேண்டும் எனும் அவசியம் உணரப்பட்டதன் விளைவாக, குருநாகல் மாவட்டத்தில் சிங்கள மொழி மூல ஊடக செயலமர்வு ஒன்றும் மீடியா போரத்தினால் நடத்தப்பட்டது. எதிர்காலத்திலும் இவ்வாறான செயலமர்வுகளை தொடராக நடத்துவதற்கு உததேசிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று இன்று முஸ்லிம் சமூகத்தின் மத்தியில் அதிகரித்துள்ள சமூக ஊடகப் பாவனை தொடர்பில் உரிய வழிகாட்டல்களையும் பயிற்றுவிப்புகளையும் வழங்கும் வகையில் மட்டக்களப்பு, புத்தளம், கண்டி மற்றும் கொழும்பு ஆகிய மாவட்டங்களில் இருநாள் வதிவிட கருத்தரங்குகளையும் மீடியா போரம் நடததியமை குறிப்பிட்டுச் சொல்லத்தக்கதாகும்.

இவ்வாறு இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கொரு முறை நாட்டின் ஏதாவதொரு பகுதியில் மீடியா போரத்தினால் ஊடகக் கருத்தரங்குகளும், பயிற்சிப்பட்டறைகளும் தொடராக நடத்தப்பட்டே வருகின்றன.

மீடியா போரத்தின் செயற்குழு உறுப்பினர்கள் தொழில்சார் உத்தியோகத்தர்களாக பல்வேறு நிறுவனங்களிதும் முக்கிய பொறுப்புகளில் பதவி வகித்துக்கொண்டே தமது வேலைப்பளுவுக்கு மத்தியிலும் தமது காலத்தை ஒதுக்கி இவ்வாறான செயலமர்வுகளை நடத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் முஸ்லிம் சமூகத்தின் ஊடக மேம்பாட்டைக் கருத்திற்கொண்டு உருவாக்கப்பட்ட அமைப்பு என்கின்ற போதிலும், இந்த நாட்டில் வாழ்கின்ற ஏனைய சமூகங்களுக்காகவும் குரல் கொடுத்து வருகின்றது.

குறிப்பாக, இலங்கையில் செயற்படும் முன்னணி ஐந்து ஊடக அமைப்புகளில் ஒன்றாக ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் விளங்குகிறது. கடந்த காலங்களில் ஊடகங்கள் அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்டபோதும், ஊடகவியலாளர்கள் அச்சுறுத்தல் களுக்குள்ளாக்கப்பட்டபோதும், மீடியா போரம் அவற்றுக்கு எதிராக ஏனைய ஊடக அமைப்புகளோடு இணைந்து பல்வேறு போராட்டங்களை நடத்தியுள்ளமை கவனிக்கத்தக்கதாகும்.

இவ்வாறு ஊடகத்துறையில் மாத்திரமன்றி, பல்வேறு சமூகப் பணிகளிலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரம் கால் பதித்து கடந்த இரு தசாப்தங்களாக சேவையாற்றி வருகின்றது.

இப்பணிகளை வெற்றிகரமான முறையில் முன்னெடுக்க உதவிய வல்ல அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதுடன், எமது பணிகளுக்கு உறுதுணையாக இருக்கின்ற சகல தரப்பினருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.


எம்.ஏ.எம்.நிலாம்
சிரேஷ்ட ஊடகவியலாளர்

## தவக்கால சிந்தனை

# இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்!




உனக்கு அடுத்திருப்பவரிடம் அன்பு கூர்வாயாக! பகைவரிடம் வெறுப்புக் கொள்வாயாக எனக் கூறியிருப்பதைக் கேட்டிருக்கிறீர்கள். ஆனால், நான் உங்களுக்குச் சொல்கிறேன், உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள்; உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள். இப்படிச் செய்வதால் நீங்கள் உங்கள் விண்ணகத் தந்தையின் மக்கள் ஆவீர்கள். ஏனெனில், அவர் நல்லோர் மேலும், தீயோர் மேலும் தம் கதிரவனை உதித்தெழச் செய்கிறார்.

நேர்மையுள்ளோர் மீதும், நேர்மையற்றோர் மீதும் மழை பெய்யச் செய்கிறார். உங்களிடத்தில் அன்பு செலுத்துவோரிடமே நீங்கள் அன்பு செலுத்துவீர்களானால் உங்களுக்கு என்ன பிரதிபலன் கிடைக்கும்? வரிதண்டுவோரும் இவ்வாறு செய்வதில்லையா? நீங்கள் உங்கள் சகோதர, சகோதரிகளுக்கு மாத்திரமே வாழ்த்துக் கூறுவீர்களானால் நீங்கள் மற்றவருக்கும் மேலாகச் செய்துவிடுவதென்ன? பிற இனத்தவரும் இவ்வாறு செய்வதில்லையா? ஆதலால், உங்கள் விண்ணகத் தந்தை நிறைவுள்ளவராக இருப்பதுபோல் நீங்களும் நிறைவுள்ளவர்களாக இருங்கள்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக மருதானையில் கையெழுத்து திரட்டும் போராட்டம்!








பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக கையெழுத்து திரட்டும் நடவடிக்கை நேற்று (11) கொழும்பு மருதானை பகுதியில் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

முஸ்லிம் இடதுசாரி முன்னணியின் ஏற்பாட்டில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தலைமையில் குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான ரிஷாட் பதியுதீன், முஜிபுர் ரகுமான், மனோ கணேசன் ஆகியோர் இதுதொடர்பான ஆவணத்தில் கைச்சாத்திட்டிருந்தனர்.

அத்துடன், அரசியல் செயற்பாட்டாளர் விக்ரமபாகு கருணாரத்ன உள்ளிட்ட சிவில் சமூக பிரதிநிதிகளும் பெருமளவிலான பொதுமக்களும் இதன்போது கையெழுத்திட்டிருந்தனர்.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை நீக்குமாறு வலியுறுத்தி இலங்கை தமிழரசுக் கட்சியின் ஏற்பாட்டில் கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரிப்பு

டெங்கு நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையை கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில், இவ்வருடத்தின் கடந்த இரண்டு மாதங்களில் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது என்று தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தின் முதல் இரண்டு மாதங்களில் 4 ஆயிரத்து 911 டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்தனர். இதேவேளை, இவ்வருடத்தின் கடந்த இரண்டு மாதங்களில் 10 ஆயிரத்து 688 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானோர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர். அவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து309 ஆகும். அத்துடன், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, இரத்தினபுரி, புத்தளம் மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகி வருவதாகவும் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு மேலும் குறிப்பட்டுள்ளது.

# வவுனியாவில் இடம்பெற்ற விபத்தில் சம்பவ இடத்திலேயே முதியவர் பலி!

## விபத்துடன் சம்பந்தப்பட்ட நபர் வாகனத்தில் தப்பியோட்டம்!




(வவுனியா நிருபர்)

வவுனியா, பாரதிபுரம் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் முதியவரொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன், விபத்துடன் தொடர்புடைய வாகனம் ஒன்று தப்பிச்சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வவுனியா, நெளுக்குளம் - செட்டிகுளம் வீதியில் பாரதிபுரம் 50 வீட்டுத் திட்ட சந்திக்கு அண்மையிலுள்ள தம்பனை புளியங்குளம் பகுதியில் நேற்று (11) இந்த விபத்து இடம்பெற்றது. இவ்விபத்து குறித்து மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, நெளுக்குளம் பகுதியிலிருந்து செட்டிகுளம் நோக்கிச் சென்ற பெண் ஒருவரின் மோட்டார்சைக்கிள் ஒன்று பாரதிபுரம் 50 வீட்டுத்திட்ட சந்திக்கு அண்மித்த தம்பனை புளியங்குளம் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்தபோது எதிர்த்திசையில் வந்த முதியவர் ஒருவரின் மோட்டார்சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இதன்போது, குறித்த விபத்துக்குள்ளான முதியவர் மீது வீதியால் வந்த பிறிதொரு வாகனம் அவரது தலைப்பகுதியில் மோதிச் சென்றமையால் அவர் சம்பவ இடத்திலேயே தலை சிதறிப் பலியானார். குறித்த விபத்துடன் சம்பந்தப்பட்ட வாகனம் குறித்த பகுதியில் இருந்து சென்றுள்ள நிலையில் சம்பவ இடத்திற்கு வருகை தந்த வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் நெளுக்குளம் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், தடயவியல் பொலிஸாரும் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

குறித்த விபத்தில் மோட்டார்சைக்கிளில் பயணித்த வவுனியா, விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த 64 வயதுடைய தர்மராஜா என்ற முதியவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்துள்ளதுடன், எதிர்த்திசையில் பயணித்த மோட்டார்சைக்கிள் சாரதியான பெண் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்தில் உயிரிழந்த முதியவரின் பின்னால் இராணுவத்தினரது வாகனம் ஒன்று வந்ததாகவும், விபத்து இடம்பெற்ற பகுதியில் பாரிய சத்தம் கேட்டதாகவும், இராணுவத்தினரது வாகனம் நிறுத்திவிட்டு, பின்னர் உடனடியாக அங்கிருந்து குறித்த வாகனம் சென்றுவிட்டதாகவும் விபத்து இடம்பெற்ற பகுதியில் நின்ற மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# பிரதமர் தலைமையில் இடம்பெற்ற இளம் இலங்கை தொழில் முனைவோர் பேரவையின் 23ஆவது ஆண்டு நிறைவு விழா




இளம் இலங்கை தொழில்முனைவோர் பேரவையின் 23ஆவது ஆண்டு நிறைவு விழா பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று முன்தினம் (10) கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் இடம்பெற்றது.

500இற்கும் மேற்பட்ட இலங்கை வணிகங்களை உள்ளடக்கிய இளம் இலங்கை தொழில்முனைவோர் பேரவை உள்ளூர் தொழில்முனைவோரை முதன்மையாக கொண்ட பேரவையாகும்.

இப்பேரவையின் ஆரம்பக் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கலந்துகொண்டிருந்தமை விசேட அம்சமாகும்.

அதன் பின்னர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பல தடவைகள் பேரவையின் ஆண்டு நிறைவு விழாக்களில் கலந்துகொண்டுள்ளார்.

இளம் இலங்கை தொழில்முனைவோர் பேரவையின் 23ஆவது ஆண்டு நிறைவையொட்டி



நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் 2022/2023 ஆண்டிற்கான புதிய தலைவராக திமுத் சங்கம சில்வா தெரிவுசெய்யப்பட்டார்.

குறித்த சந்தர்ப்பத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன, இராஜாங்க அமைச்சர்களான விதுர விக்ரமநாயக்க, தயாசிறி ஜயசேகர மற்றும் தூதுவர்கள், தூதுவப் பிரதிநிதிகள், முன்னாள் அமைச்சர்கள், இளம் இலங்கை தொழில்முனைவோர் பேரவையின் முன்னாள் தலைவர் சாரங்க குணவர்தன உள்ளிட்ட இளம் தொழில்முனைவோர் பலர் கலந்துகொண்டிருந்தனர்.




கச்சதீவு, புனித அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த திருவிழாவில் கலந்துகொள்வதற்காக இராமேஸ்வரத்திலிருந்து யாத்திரிகர்கள் நேற்று (11) கச்சதீவுக்கு வருகை தந்தபோது....

# வவுனியா பல்கலைக்கழக மாணவர்களுக்கு 05 நாட்கள் தலைமைத்துவ மேம்பாட்டு பயிற்சி முகாம் ஆரம்பம்



வவுனியா பல்கலைக்கழகத்தை சேர்ந்த மாணவர்களுக்கான 05 நாள் தலைமைத்துவ மேம்பாட்டு பயிற்சி முகாம் எம்பிலிப்பிட்டியவிலுள்ள தலைமைத்துவ மேம்பாட்டுக்கான தேசிய மையத்தில் நேற்று (11) சம்பிரதாயபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தெரிவுசெய்யப்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள மாணவர்கள் 200 பேர் வவுனியாவில் இருந்து புகையிரதம் மூலமாக தலைமைத்துவ மேம்பாட்டுக்கான தேசிய மையத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

இந்நாட்டின் பல்கலைக்கழக வரலாற்றில் முதலாவது சமூக நல்லிணக்க மையம் வவுனியா பல்கலைக்கழகத்தில்தான் அமைக்கப்பட்டுள்ளது.

அதேபோல தலைமைத்துவ மேம்பாட்டுக்கான தேசிய மையத்தின் 35 வருட கால வரலாற்றில் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சி வழங்கப்படுகின்ற முதலாவது சந்தர்ப்பமும் இதுவே ஆகும்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவி வகித்த காலப்பகுதியில் சமூக நல்லிணக்க விவகாரத்துக்கான செயலாளராக விளங்கியவர் பேராசிரியர் நந்தன சாந்தி விஜயசிங்க.

இவருடைய சிந்தனையில்தான் வவுனியா பல்கலைக்கழகத்தில் சமூக நல்லிணக்க மையம் உருவாக்கப்பட்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் கடந்த மாதம் திறந்துவைக்கப்பட்டது.

அதேபோல் இன்றைய பல்கலைக்கழக மாணவர்கள் நாளைய தலைவர்கள் என்கிற தொனிப்பொருளிலான இப்பயிற்சி முகாமும் இவருடைய சிந்தனையில் உதயமாகி இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கூட்டு பங்களிப்புடன் முன்னெடுக்கப்படுகின்றது.

சம்பிரதாயபூர்வ ஆரம்ப விழாவில் இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் அனுராத விஜயகோன், பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் சமூக நல்லிணக்க விடயங்களுக்கான தலைவர், தலைமைத்துவ மேம்பாட்டுக்கான தேசிய மையத்தின் பணிப்பாளர் ஏ.பி.எம்.அஷ்ரப் உள்ளிட்ட பேராளர்கள் கலந்துகொண்டு மங்கள விளக்கேற்றி உரையாற்றினார்கள்.

வவுனியா பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் கலாநிதி ரி. மங்களேஸ்வரன் இணைய வழி தொழில்நுட்பம் மூலமாக சிறப்புரை ஆற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இரத்தினக்கல் அகழ்ந்த 6 பேர் கைது

(ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பலாங்கொடை நொன்பேரியல் பிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் இரத்தினக்கல் அகழ்ந்த 06 பேரை நொன்பேரியல் வனப்பாதுகாப்பு அதிகாரிகள் நேற்று (11) கைது செய்துள்ளனர்.

இவ்வனத்தின் பாதுகாப்பு அதிகாரிகள் வழமையான பாதுகாப்பு ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது இவர்கள் தப்பியோட முயற்சித்தபோதே மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளனர். இரத்தினக் கல் அகழ்வதற்காக பயன் படுத்தப்பட்ட உபகரணங்களுடன் இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்செய்வதற்காக பொலிஸாரிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வனத்தில் கள்ளத்தனமாக இரத்தினக்கல் அகழ்வுகள், காடழிப்பு, வேட்டையாடுதல் ஆகிய சட்டவிரோத செயற்பாடுகள் அதிகரித்து வருவதனால் இங்கு பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு வருவதாக வனப்பாதுகாப்பு அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

# இலங்கை - இந்தியா மோதும் இரண்டாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்



சுற்றுலா இலங்கை அணிக்கும், இந்திய அணிக்கும் இடையிலான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி இன்று பகலிரவு டெஸ்ட் போட்டியாக பெங்களூர் சின்னசுவாமி மைதானத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

இந்தியாவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி முதல் தொடரான மூன்று போட்டிகள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரை 3-0 என்ற அடிப்படையில் இழந்த நிலையில், இரு அணிகளுக்கும் இடையிலான அடுத்த தொடரான இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் போட்டி கடந்த 4ஆம் திகதி மொஹாயிலில் ஆரம்பமாகி மூன்றே நாட்களில் நிறைவுக்கு வந்தது. இந்தப் போட்டியில் இலங்கை அணியின் துடுப்பாட்ட வீரர்களின் சொதப்பல் காரணமாக இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 222 ஓட்டங்களினால் அபார வெற்றி பெற்றது.

இந்நிலையிலேயே இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி இன்று ஆரம்பமாகிறது. இலங்கை அணி முன்னதாக இருபதுக்கு 20 சர்வதேச தொடரை இழந்த நிலையில் டெஸ்ட் தொடரின் முதல் போட்டியிலும் தோல்வியை தழுவியது. அந்த வகையில் இன்று ஆரம்பமாகும் இரண்டாவது டெஸ்ட் போட்டி இலங்கை அணிக்கு மிக முக்கிய போட்டியாக அமைகிறது.

# நூற்றுக்கணக்கானோரின் கண்ணீருக்கு மத்தியில் லிதியாவின் பூதவுடல் உடுவரவில் நல்லடக்கம்



## குற்றவாளிக்கு கடுமையான தண்டனை அவசியமென பொதுமக்கள் வலியுறுத்து







(ஹாலி-எல, பதுளை நிருபர்கள்)

ஹாலி -எல உடுவர பிரதேசத்தில் கடந்த 08ஆம் திகதி கோடரியால் வெட்டி படுகொலை செய்யப்பட்ட தர்மராஜா லிதியாவின் சடலம் பொலிஸ் விசாரணைகளின் பின்னரும் மரண பரிசோதனையின் பின்னரும் நேற்று முன்தினம் (10) மாலை லிதியாவின் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது. அவரது இறுதிக்கிரியை உடுவர 7ஆம் கட்டை வலஸ்பெத்த பொதுமயானத்தில் நேற்று (11) பிற்பகல் மூன்று மணியளவில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

பதுளை கிறிஸ்தவ மெதடிஸ்ட் தேவாலய போதகர்கள் மூவர் அடங்கியோரால் லிதியாவின் இறுதிக்கிரியைகள் மேற்கொள்ளப்பட்டன.

லிதியாவின் படுகொலையை கண்டித்து பாடசாலை ஆசிரியர் சமூகத்தினரால் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

லிதியாவின் இறுதிக்கிரியைகளின்போது பெற்றோர், பாடசாலை சமூகத்தினர், தோட்டப் பொது மக்கள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர். குறித்த இடத்தில் இருந்த மாணவி கல்வி கற்ற பாடசாலை ஆசிரியர் ஒருவர் கருத்து தெரிவிக்கையில்,

மாணவி லிதியாவின் இழப்பு அவரது பெற்றோருக்கும் பாடசாலை சமூகத்துக்கும் ஓர் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். இந்த மரணமே தமிழ் சமூகத்தில் குறிப்பாக பெருந்தோட்டத்தில் நடக்கும் கடைசி சம்பவமாக இருக்கவேண்டும். எமது தமிழ் சமூகம் குறித்து பொலிஸாரும், சம்பந்தப்பட்ட அதிகாரிகளும், சமூக ஆர்வலர்களும் கவனம் செலுத்தி இளைஞர் யுவதிகளை சரியான பாதையில் வழிபடுத்தவேண்டும்.

அத்துடன், எமது பெருந்தோட்ட இளைஞர்கள் போதைக்கு அடிமையாகா வண்ணமும் பாதுகாக்க வேண்டும். படுகொலை செய்யப்பட்ட மாணவி லிதியா மற்றும் சந்தேக நபரான திபாகரன் ஆகிய இருவருமே எமது பாடசாலையிலே கல்விகற்றவர்களே. சந்தேக நபரான திபாகரனின் இக்கொடூர எண்ணத்துக்கு வழிவகுக்க அவர் ஏதேனும் போதைப்பொருள் உபயோகத்தாரா எனவும் விசாரணை நடத்த வேண்டும். மேலும், இவ்வாறான விஷமச் செயற்பாடுகள் சமூகத்திலிருந்து அழிக்கப்படவும் ஒழிக்கப்படவும் வேண்டும்.

இவ்வாறான சம்பவம் பெருந்தோட்டத்தில் நடந்திருப்பது பெரும் கவலைக்குரிய செயற்பாடாகவே எம்மால் பார்க்கப்படுகின்றது. இதுபோன்று ஓர் சம்பவம் இனியும் நடைபெறாமலிருக்க பொலிஸார் உரிய பாதுகாப்பை எமது சமூக பெண்களுக்கு வழங்க முன்வர வேண்டும். இதுவே எனது வேண்டுகோள். மேலும், பெற்றோரும் தமது பிள்ளைகள் குறித்து கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

இறுதிக்கிரியையின்போது அங்கு கூடியிருந்தவர்கள், 'சந்தேக நபரை கொலை செய்ய வேண்டும், கடுமையான தண்டனை வழங்கப்பட



வேண்டும், நீதி ஒருதரப்பினருக்கு சார்பானதாக இருக்கக்கூடாது, லிதியாவின் கொலைக்கு நீதி பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும், எதிர்கால சமூகமும் இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபட இடமளிக்கக்கூடாது" என்றவாறு கோஷம் எழுப்பினர்.

பெருந்திரளான பொதுமக்கள் கலந்துகொண்ட இவ்வேளையில், மேலும் அசம்பாவிதங்கள் நடைபெறாவண்ணம் ஹாலி-எல பொலிஸ் பொறுப்பதிகாரி ருவன் குணதிலக உள்ளிட்ட பொலிஸ் குழுவினர் பாதுகாப்பை வழங்கியிருந்தனர்.



# நுவரெலியாவில் கர்ப்பிணிகளுக்கு சத்துணவுப் பொருட்கள் வழங்கும் பிரேரணை நிறைவேற்றம்

(மஸ்கெலியா நிருபர்)

மலையகத்தில் காணப்படும் மந்த போஷணையைக் கருத்திற்கொண்டு, நுவரெலியா பிரதேச சபைக்குட்பட்ட வட்டாரங்களிலுள்ள கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 5 மாத காலத்துக்கு மாதாந்தம் சத்துணவுப் பொருட்களை வழங்க சபையின் ஊடாக நிதி ஒதுக்கீடு செய்து அதனை வழங்குவது தொடர்பான தவிசாளரினால் கொண்டுவரப்பட்ட பிரேரணை சபை உறுப்பினர்களால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

நேற்று 11ஆம் திகதி நடைபெற்ற நுவரெலியா பிரதேச சபையின் மாதாந்த சபை அமர்வின்போதே இப்பிரேரணை நிறைவேற்றப்பட்டதாக சபை தவிசாளர் வேலு யோகராஜ் தெரிவித்தார்.

சபை தவிசாளர் தலைமையில் நடைபெற்ற அமர்வின்போது உரையாற்றுகையில், நுவரெலியா பிரதேசத்தில் கொவிட் தொற்று முழுமையாக நீங்காதமையினால் அதனை கட்டுப்படுத்தும் செயற்றிட்டமாக நுவரெலியா பிரதேசத்தில் விரைவில் பூஸ்டர் தடுப்பூசியை கட்டாயமாக அனைவரும் செலுத்தியிருக்க வேண்டும் என தவிசாளர் கேட்டுக்கொண்டார்.

மேலும் கொரோனா தடுப்பு குறித்து தெளிவுபடுத்தும் பிரசார நடவடிக்கையும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்



அவர் தெரிவித்தார்.

கந்தப்பளை கோயில் கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் நடமாடும் சேவையும் ஆயர்வேத சிகிச்சை முகாமும் நடைபெற்றன. அதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அனைவருக்கும் தனது நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு குறித்த சேவைகள் அனைத்தும் எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன் பூர்த்தியடைய வேண்டும் என்பதனால் சபை உறுப்பினர்கள் அனைவரும் அந்தந்தப் பகுதிகளிலுள்ள தத்தமது வேலைகளை முடிக்க ஏற்பாடுகளை செய்யுமாறும் கேட்டுக் கொண்டார்.

அத்துடன், அரசாங்கம் உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலத்தை ஒரு வருடத்துக்கு மேலும் நீடித்துள்ளதோடு, சபையின் அனைத்துக் கடமைகளையும் சரிவர நிறைவேற்ற இந்த வருடமும் அனைவரும் தமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் தவிசாளர் கேட்டுக்கொண்டார்.




சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மஸ்கெலியா பிரதேச சபைக்குட்பட்ட கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சத்துணவுப் பொதி வழங்கும் நிகழ்வு மாவட்ட வைத்திய அதிகாரி ஐ.ஈர்ஜாட் தலைமையில் நேற்று நடைபெற்றது. மஸ்கெலியா பிரதேச சபையின் தவிசாளர் கோவிந்தன் செம்பகவள்ளியினால் 35 கர்ப்பிணித் தாய்மார்களுக்கு 96 ஆயிரம் ரூபா மதிப்புள்ள சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. நிகழ்வில் மஸ்கெலியா பிரதேச சபை செயலாளர், உறுப்பினர்கள், மாவட்ட வைத்தியர்கள், உத்தியோகத்தர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (மஸ்கெலியா நிருபர்)

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# எரிகாயங்களுடன் முதியவரின் சடலம் மீட்பு

(பதுளை நிருபர்)

மடூல்சீமை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிட்டமாறுவ பகுதி வீடொன்றிலிருந்து எரிகாயங்களுடன் முதியவர் ஒருவரது சடலம் உருக்குலைந்த நிலையில் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளது.87 வயதுடைய முதியவர் ஒருவரின் சடலமே நேற்று 11ஆம் திகதி இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது.

குறித்த முதியவரின் மகன் தொழிலுக்குச் சென்று வீடு திரும்பிவந்து பார்க்கும்வேளையில், தனது தந்தை எரிகாயங்களுடன் கருகிய நிலையில் சடலமாக கிடப்பதை அவதானித்து உடனடியாக மடூல்சீமை பொலிஸாருக்கு அறிவித்ததைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு விரைந்த மடூல்சீமை பொலிஸார் எரிகாயங்களுடன் கிடந்த முதியவரின் சடலத்தை மீட்டுள்ளனர்.

குறித்த சடலம் தனது தந்தையினது என மகன் அடையாளம் காட்டியதைத் தொடர்ந்து சடலம் தற்போது பதுளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. குறித்த மரணம் கொலையா, தற்கொலையா என மடூல்சீமை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கண்டியில் போதைப்பொருள் கடத்த முயற்சித்தவர் கைது

(கண்டி நிருபர்)

மிகவும் நுணுக்கமான முறையில் தபால் சேவையின் கொரியர் மூலம் ஹெரோயின் போதைப்பொருள் கடத்திய சந்தேக நபர் ஒருவரை நேற்று முன்தினம்(10) கண்டி பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

மேற்படி சம்பவத்தில் 05 கிராம் போதைப் பொருளை கடித உறையில் மறைக்கப்பட்ட நிலையில் அனுப்பப்பட்டபோது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து கண்டியிலுள்ள ஒருவருக்கு அதனை அனுப்புவதாகவும் அதில் தவறாக முகவரியிடப்பட்டு அனுப்பப்படுவதாகவும்



பின்னர் அதிலுள்ள தொலைபேசி அழைப்புக்கு தொடர்புகொண்டு உரிய நபர் வந்து பெற்றுக் கொள்வதாகவும் பொலிஸாரின் விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது.

# விவசாய அபிவிருத்தி வலயமாக ரஜவக்க பிரதேசம் மேம்படுத்தப்படும்

## சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ




(இரத்தினபுரி நிருபர்)

பலாங்கொடை ரஜவக்க பிரதேசத்தில் அமைந்துள்ள விவசாய பரிசோதனை நிலையத்தை அண்மித்த பகுதி விவசாய அபிவிருத்தி வலயமாக (Agro tourism zone) அபிவிருத்தி செய்யப்படும் - என்று சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார்.

பலாங்கொடை ரஜவக்க பிரதேசத்தில் அமைந்துள்ள விவசாய பரிசோதனை நிலையத்தை கடந்த 09ஆம் திகதி நேரில் சென்று பார்வையிட்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேற்படி விவசாய பரிசோதனை நிறுவனம் அமைந்துள்ள இடமானது, 1980ஆம் ஆண்டு காலப்பகுதியில் பலாங்கொடை சமனல மின் உற்பத்தி நிலையத்துக்காக பயன்படுத்தப்பட்டதாகும். இதன் ஒரு பகுதியை சப்ரகமுவ மாகாண விவசாயத் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டதையடுத்து, கடந்த 23 ஆண்டுகளுக்கு முன்பு ரஜவக்க விவசாய பரிசோதனை நிலையம் ஒன்று அவ்விடத்தில் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி விவசாய பரிசோதனை நிலையத்தினால் விவசாயத்துறை உத்தியோகத்தர்கள் மற்றும் விவசாயிகள், பாடசாலை மாணவர்கள் உட்பட விவசாயத்துறை சம்பந்தமானவர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

மேற்படி பலாங்கொடை ரஜவக்க பிரதேசத்தில் அமைந்துள்ள விவசாய பரிசோதனை நிலையத்தை அண்மித்த பகுதியை விவசாய அபிவிருத்தி வலயமாக மாற்றியமைப்பதற்கு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதன்போது சப்ரகமுவ மாகாண ஆளுநரின் பிரத்தியேக செயலாளர் மஞ்சுலா இதிகாவெல, மாகாண விவசாயத்துறை பணிப்பாளர் தனஞ்ஜனி பண்டார, மாகாண விவசாயத்துறை அமைச்சின் திட்டமிடல் பிரிவு பணிப்பாளர் எஸ்.கே.வீரசேகர உட்பட அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.



# தூய்மையான ஆட்சியை நிலைநாட்ட அரசியல்வாதிகள் ஆர்வம் காட்டுவதில்லை

## மார்ச் 12 இயக்க செயலமர்வில் முன்னாள் எம்.பி. திலகராஜ்

(தலவாக்கலை நிருபர்)

தூய்மையான அரசியலை முன்னெடுக்க வேண்டும் என அரசியல்வாதிகளை நோக்கிப் பேசும் அளவுக்கு தூய்மையான ஆட்சி முறைமையையும் நிலைநாட்டுவதற்கு ஆர்வம் காட்டப்படுவதில்லை. பாரபட்சமான முறையிலே அரச ஆணையை முன்னெடுக்கும் அரசினைக் கண்டிப்பதும் அதனைச் சீர்செய்யக் கோரி அரசாங்கத்தை வலியுறுத்துவதும் கூட தூய்மையான அரசியலை வலியுறுத்தும் ஏற்பாடுகள்தான் - என நுவரெலிய மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மயில்வாகனம் திலகராஜ் தெரிவித்துள்ளார்.

தூய்மையான அரசியலை முன்னெடுப்பதை வலியுறுத்தும் மார்ச் 12 இயக்கத்தின் (M2M) செயலமர்வு தலவத்துகொட மொனாக் இம்பீரியல் மண்டபத்தில் நேற்று முன்தினம் (10) இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மார்ச் 12 இயக்கம் ஆண்டுக்கு ஒருமுறை மார்ச் மாதத்தில் ஒன்றுகூடி தூய்மையான அரசியலை முன்னெடுப்பதைப் பற்றிய உரையாடலைச் செய்யும் அமைப்பாக மாத்திரம் இருந்துவிடக்கூடாது. தூய்மையான அரசியல் என்பதனை உரையாடல்களோடு மட்டுப்படுத்தாமல் செயற்பாடாகவும் முன்னெடுப்பதை உறுதி செய்ய வேண்டும். தூய்மையான அரசியலை முன்னெடுப்பதைப் பற்றி பேசும் பலரும் தனிப்பட்ட அரசியல்வாதி ஒருவர் முன்னெடுக்கப்பட வேண்டிய தூய்மையான அரசியலுக்குரிய பிரமாணங்களையே பேசுகின்றனர். அது தேவையானதுதான். அதேநேரம் தனிப்பட்ட அரசியல்வாதிகளை மட்டுமல்லாது, தூய்மையான அரசியலை முன்னெடுக்கும் அரசு ஒன்று குறித்த வலியுறுத்தலையும் செய்யவேண்டியுள்ளது.

பாரபட்சமான முறையிலே அரச ஆணையை முன்னெடுக்கும் அரசினைக் கண்டிப்பதும் அதனைச் சீர்செய்யக்கோரி அரசாங்கத்தை வலியுறுத்துவதும் கூட தூய்மையான அரசியலை வலியுறுத்தும் ஏற்பாடுகள்தான். ஒரே வர்த்தமானியில் வெளியான நுவரெலியா, காலி, இரத்தினபுரி மாவட்ட பிரதேச செயலக அதிகாிப்பு பிரகடனத்தை காலி, இரத்தினபுரி மாவட்டத்துக்கு வழங்கி விட்டு நுவரெலியாவுக்கு வழங்காமல் விடுவதும் மாறாக உப செயலகங்களை வழங்குவதும் கூட தூய்மையான அரசியல் இல்லை.

தனிப்பட்ட அரசியல்வாதிகளின் தூய நடத்தை மூலம் தூய அரசியலை கட்டி எழுப்பலாம் என கற்பனை செய்வதுபோலவே பாரபட்சம் இல்லாத அரசியல் முறைமையை வலியுறுத்துவதும் கூட தூய்மையான அரசியலை வலியுறுத்தும் வழிமுறையே என்றும் தெரிவித்தார்.






மஸ்கெலியா மொக்கா வின்னர்ஸ் பாடசாலையில் அமைக்கப்பட்ட மலசலகூடங்கள் வன்னி ஹோப் நிறுவனத்தின் தலைவர் ரஞ்சன் சிவஞானசுந்தரம் மற்றும் பணிப்பாளர் வைத்தியர் மாலதி வரன் ஆகியோரால் திறந்துவைக்கப்பட்டது. வன்னி ஹோப் மற்றும் ரோட்டரி ஹில்ஸ் கெல்லிவில்லி ஆகிய நிறுவனங்களின் நிதி அனுசரணையில் அமைக்கப்பட்ட குறித்த மலசலகூடங்களை திறந்துவைக்கும் நிகழ்வில் பாடசாலை சமூகத்தினர் கலந்துகொண்டனர். (படங்கள்: தலவாக்கலை நிருபர்)

# அம்பாறை மாவட்டத்தில் வலசைப் பறவைகளின் வருகை அதிகரிப்பு





வீடியோவைக் காண...

(பாறுக் ஷிஹான்)

காலநிலை மாற்றத்தின் காரணமாக வெளிநாட்டுப் பறவை இனங்கள் சஞ்சரிப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

அம்பாறை மாவட்டத்தில் தற்போது மருதமுனை, பொத்துவில், அக்கரைப்பற்று, அட்டாளைச்சேனை, சம்மாந்துறை, நாவிதன்வெளி, மத்தியமுகாம், சவளக்கடை, நற்பிட்டிமுனை ஆகிய பிரதேசங்களில் உள்ள நீர் நிலைகளை நாடி வெளிநாட்டுப் பறவை இனங்கள் வருகை தருகின்றன.

குறித்த பறவை இனங்களை ரசிப்பதற்காக அப்பகுதிகளுக்கு பலரும் வருவதோடு அங்கு புகைப்படம் எடுப்பதிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர்

இம்மாதக் கடைசியில் அம்பாறை மாவட்டத்தில் பல நாட்டுப் பறவைகளும் இங்கு வந்து தங்குகின்றன. இங்கு டிசம்பர் மாதம் வரும் வெளிநாட்டுப் பறவைகள் ஜனவரி, பெப்ரவரி மாதம் கூடுகட்ட துவங்கும். மேற்குறித்த பறவைகள் 2000 மைல் தூரம் பறந்து செல்லும் வல்லமை படைத்தவை. அவுஸ்திரேலியா, சுவிட்சர்லாந்து, ரஷ்யா, ஜேர்மனி, பிலிப்பைன்ஸ், நைஜீரியா, சைபிரியா ஆகிய நாடுகளிலிருந்து பறவைகள் இங்கு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் செங்கால்நாரை, பூநாரை, கூழைக்கடா, கடல்காகம், கடல்ஆலா, பாம்புத்தாரா, சாம்பல்'நாரை, வெட்டிவாயன், கரன்டிவாயன், வெள்ளை அரிவாள் மூக்கன், நாரை இனங்கள், அன்னப்பறவை உள்ளிட்ட கொக்கு இனங்கள் வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இப்பகுதிக்கு விதவிதமான பறவைகள், இங்கேயே கூடுகட்டி தங்கி, முட்டையிட்டு, குஞ்சு பொறித்து, குஞ்சுகளுக்கு பறக்க கற்றுக்கொடுத்து, மார்ச் மாத இறுதியில் புதிய குடும்பமாய் சொந்த நாடுகளுக்கு பயணம் மேற்கொள்வதும் வழமையாகிவிட்டது.

மேலும் இப்பறவைகள் யாவும் இயற்கைச் சூழலை பாதுகாப்பதிலும் வேளாண்மை செய்கைக்கு விவசாயிகளுக்கு உதவுவனவாகவும் செயற்படுகின்றன. சில இடங்களில் சட்டவிரோதமாக இப்பறவைகள் வேட்டையாடப்பட்டு கூடிய விலைகளில் விற்பனையாகி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# அம்பாறையில் அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதில் மக்கள் முண்டியடிப்பு

(நிந்தவூர் நிருபர்)

அரசாங்கம் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதிசெய்யும் சில பொருட்களுக்கு கட்டுப்பாடு விதித்ததைத் தொடர்ந்து அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் அத்தியாவசியமான பொருட்களையும், உணவுப்பொருட்களையும் கொள்வனவு செய்வதிலும் அதனை சேமித்து வைப்பதிலும் பொதுமக்கள் அதிக அக்கறை செலுத்தி வருகின்றனர்.

குறிப்பாக பால்மா, அரிசி, சீனி, பருப்பு, பயறு, மீன் ரின், நூடில்ஸ், நொறுக்குத்தீன், தேங்காய் எண்ணெய், மரக்கறி எண்ணெய் போன்ற உணவுப் பொருட்களையும், மெழுகுதிரி, சோப், பேஸ்ட், நெருப்புப்பெட்டி போன்ற தினசரி பாவனைப் பொருட்கள் போன்றவற்றையுமே இவ்வாறு மக்களால் அதிகம் கொள்வனவு செய்யப்படுகின்றன.

இதற்கிடையில் அடுத்த மாதம் புனித நோன்பு ஆரம்பமாகவிருப்பதால் பேரீச்சம்பழத்திற்கு அதிக கிராக்கி நிலவுவதுடன் தட்டுப்பாடாகவும் உள்ளது. தற்போது சந்தையில் இருப்பது கூட அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

நேற்று (11) பிரதான வீதிகளிலுள்ள இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின்கீழ் இயங்கும் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காலையிலிருந்தே நீண்ட வரிசையில் வாகனங்கள் காணப்பட்டபோதிலும் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் எரிபொருட்கள் வழங்கப்பட்டன.

# அச்சுறுத்தல்களைக் களைய முயற்சிக்கின்றோம்

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் சிரேஷ்ட ஆய்வாளர் லயனல் குருகே தெரிவிப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

ஊடகவியலாளர்களும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளும் தமது நடவடிக்கைகளின்போது எதிர்கொள்ளும் அச்சுறுத்தல்களை மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் கவனத்தில் எடுத்துக்கொண்டுள்ளதாக அதன் சிரேஷ்ட ஆய்வாளர் லயனல் குருகே தெரிவித்தார்.

இது விடயமான செயலமர்வு மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. நிலையத்தில் கடந்த புதன்கிழமை 09.03.2022 இடம்பெற்றது.

நிகழ்வில் ஊடகவியலாளர்களும் சமூக நிறுவனங்களின் செயற்பாட்டாளர்களும் கலந்துகொண்டனர். அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஆய்வாளர் லயனல் குருகே, ''யுத்தம் நிறைவடைந்ததன் பின்னர் நெருக்கடிகள் குறையும் என எதிர்பார்த்திருந்தபோதும் அது நடக்கவில்லை. சுதந்திரமாக கருத்துத் தெரிவிப்பது, சுதந்திரமாக செயற்படுவது, சுதந்திரமாக வாழ்வது இப்படி எதுவும் நெருக்கடி இல்லாத ஒன்றாக இல்லை. அதிலும் குறிப்பாக ஊடகவியலாளர்களும் செயற்பாட்டாளர்களும் சுதந்திரமாக செயற்படமுடியவில்லை என்ற நிலைப்பாடு உள்ளது.



எனவே, இந்த விடயத்தைச் சீர்தூக்கிப் பார்த்து அந்த நெருக்கடிகளைச் சந்திப்போருக்கு நாம் உதவ முயற்சிக்கின்றோம். வடக்கு, கிழக்கு உட்பட நாட்டின் மத்திய பகுதியிலும் தென்பகுதியிலும் இத்தகைய விழிப்புணர்வு வேலைத் திட்டங்களை நாம் மேற்கொண்டு வருகின்றோம்.

முன்னதாக நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்த விடயங்களை நாம் ஆவணப்படுத்துவதோடு அது பற்றி நாம் சர்வதேச மட்டம்வரை வெளிப்படுத்துவோம்.

எனவே, இந்த விடயத்தில் ஊடகவியலாளர்களும் சமூக சேவைகளில் ஈடுபடும் அரச சார்பற்ற நிறுவனங்களும் மனித உரிமைச் செயற்பாட்டாளர்களும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்துடன் இணைந்து பணியாற்றி நிலைமையைச் சீர் செய்வது அவசியமாகும்" - என்றார்.

இந்நிகழ்வில் சிரேஷ்ட ஊடகவியலாளரும் ஆய்வாளருமான ஜயசிறி ஜயசேகர உட்பட இன்னும் பல துறைசார்ந்த செயற்பாட்டாளர்களும் கலந்துகொண்டனர்.

# அம்பாறையில் அன்னாசி விலை சிகரம் தொட்டது



.(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் அன்னாசிப்பழம் என்றுமில்லாதவாறு மிகவும் கூடுதலான விலையில் விற்கப்படுகின்றது.

பழமொன்று 350 ரூபா முதல் 400 ரூபாவரை விற்பனையாகின்றது.

கடந்த காலங்களில் 100 ரூபா முதல் 150 ரூபா விலையிலேயே சந்தைகளில் விற்பனைசெய்யப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# உலகில் முதல் பெண் பிரதமரை அறிமுகப்படுத்திய நாட்டில் பெண் தலைமைத்துவம் குறைவாக உள்ளது

## மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் தெரிவிப்பு!







(கல்லடி நிருபர்)

உலகில் முதல் பெண் பிரதமரை அறிமுகப்படுத்திய நாடாக இலங்கை உள்ளபோதிலும் அரசியல் ரீதியாக பெண் தலைமைத்துவம் மிகவும் குறைந்த அளவிலேயே உள்ளதாக மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் தெரிவித்தார்.

பெண்களின் உற்பத்திக் கண்காட்சியும், கௌரவிப்பு நிகழ்வும் நேற்று (11) மட்டக்களப்பு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் வி.வாசுதேவன் தலைமையில் நடைபெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் மேலும் குறிப்பிட்டதாவது,

இலங்கையானது உலகத்திற்கு முதன்முறையாக பெண் பிரதமரை அறிமுகப்படுத்திய நாடாகும். ஆனாலும் அரசியல் ரீதியாக பெண் தலைமைத்துவத்தின் அளவு குறைவாகவே உள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் எட்டு சதவீதமான பெண்களே அரசியல் ரீதியாகச் செயற்படுபவர்களாயுள்ளனர். அரசியல் ரீதியாக முன்னேற வேண்டிய தேவை எமக்குண்டு.

இன்று தினமும் பெண்களுக்கெதிரான வன்முறைகள் நடைபெற்றே வருகின்றன. தினமும் நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்குகளை எடுத்து நோக்கினால் அதிகமான வழக்குகள் குடும்ப வன்முறைகள் சார்ந்த வழக்குகளாகவே உள்ளன.

இந்தக் குடும்ப வன்முறைகளைக் குறைப்பதற்கு ஆண்கள் அனைவரும் பெண்களுடன் இணைந்து பணியாற்ற வேண்டியவர்களாகவுள்ளோம். இந்தக் குடும்ப வன்முறைகள் கல்வியறிவு மற்றும் பொருளாதாரம் குறைந்த குடும்பங்களிலேயே அதிகளவில் நடைபெறுகின்றன.

இதன்போது பிரதேச செயலக வளாகத்தில் ஜனாதிபதியின் சுபீட்சத்தின் நோக்கு வேலைத் திட்டத்திற்கமைவாக முன்னெடுக்கப்பட்ட உற்பத்திப் பொருட்களின் கண்காட்சி திறந்துவைக்கப்பட்டது. இதில் சேதனப் பசளையினால் உற்பத்தி செய்யப்பட்ட பல பொருட்கள் காட்சிப் படுத்தப்பட்டிருந்தன.

அத்தோடு பெண்களுக்கெதிரான வன்முறைகள், அவற்றைத் தடுப்பதற்குமான வழிமுறைகள் தொடர்பில் சூரியா பெண்கள் அமைப்பினால் வீதி நாடகமும் அரங்கேறியது. இதன்போது சர்வதேச சாதனை விருதினைப் பெற்ற பெண் பிரதேச செயலாளரான சிவப்பிரியா வில்வரெட்ணமும் கௌரவிக்கப்பட்டார். இவற்றோடு சிறந்த உற்பத்தியாளராகத் தெரிவுசெய்யப்பட்ட பெண்கள் மற்றும் வனிதாபிமான போட்டிகளில் வெற்றிபெற்ற பெண்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி நவரூபரஞ்சனி முகுந்தன் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட சென் ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் தலைவர் மீராசாகிப் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# கல்முனையில் மாணவத் தலைவர்களுக்கு தலைமைத்துவப் பயிற்சிப் பட்டறை




(நிந்தவுர் நிருபர்)

கல்முனை கல்வி வலயத்திற்குட்பட்ட சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம். அஷ்ரப் வித்தியாலயத்தில் மாணவத் தலைவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சி பாசறையும், சத்தியப்பிரமாணம் செய்தல் மற்றும் சின்னம் சூட்டுதல் நிகழ்வும் நேற்றுமுன்தினம் (10) பாடசாலை வளாகத்தில் பாடசாலை அதிபர் எம்.ஐ.சம்சுதீன் தலைமையில் நடைபெற்றது.

சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எல்.சம்சுதீன் பிரதம அதிதியாக கலந்துகொண்டு, மாணவத் தலைவர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்கி வைத்ததுடன், தலைமைத்துவம் தொடர்பான கருத்துரைகளும் வழங்கினார்.

இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்வி அலுவலக ஆசிரிய ஆலோசகர் ஏ.றாசிக் கௌரவ அதிதியாக கலந்துகொண்டு தலைமைத்துவப் பண்புகள் தொடர்பாக மாணவர்களுக்கு சிறப்புரை ஆற்றினார்.

இந்நிகழ்வினை பாடசாலையின் ஒழுக்காற்று குழுவினர் ஒழுங்குசெய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அதிபர் சேவையிலிருந்து செய்னம்பு ஹமீட் ஓய்வு


(கல்குடா நிருபர்)

ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தில் பிரதி அதிபராக கடமையாற்றிய திருமதி செய்னம்பு ஹமீட் அதிபர் சேவையில் இருந்து ஓய்வுபெற்றார்.

2004ஆம் ஆண்டு தொடக்கம் 2006ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஓட்டமாவடி பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முதலாவது பெண் இயக்குனராகவும் 2007ஆம் ஆண்டு சங்கத்துக்கு தேர்தல் மூலம் தலைவியாகவும் தெரிவுசெய்யப்பட்டார். அகில இலங்கையிலேயே பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கு தெரிவான முதலாவது முஸ்லிம் பெண் தலைவி எனும் பெருமையும் இவருக்கு உரியதாகும்.

மேலும் 1983ஆம் ஆண்டு ஓட்டமாவடி பல்நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் முதலாவது முஸ்லிம் பெண் இலிகிதராக தனது கடமையை பொறுப்பேற்றுள்ளார். அதேநேரம், 1987ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற ஆசிரியர் தெரிவுக்கான போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்று 1988ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி தொடக்கம் ஆசிரிய சேவையில் சேர்ந்து தனது பணியை சிறப்பாக ஆற்றிய பின் 1991 தொடக்கம் 1992 வரையான காலப்பகுதியில் அலுத்கம ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியர் பயிற்சியை முடித்து மீண்டும் 1993ஆம் ஆண்டு தொடக்கம் ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மகாவித்தியாலயத்தில் தனது ஆசிரியப் பணியை தொடர்ந்தார். ஓட்டமாவடி பாத்திமா பாலிகாவில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் இவரது வகுப்பில் இருந்தே முதன்முதலாக நான்கு மாணவிகள் சித்தி பெற்றுள்ளனர். இதனையடுத்து பல வருடங்களாக இவரது வகுப்பிலிருந்து மாணவிகள் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் தொடர்ச்சியாக சித்திபெற்று வந்தமையினால் கல்வி அதிகாரிகளின் பாராட்டுகளையும் பெற்று வந்தார்.

அத்தோடு இப்பாடசாலையிலிருந்து 2000ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் ஓட்டமாவடி ஹிஜ்ரா வித்தியாலயத்துக்கு இடமாற்றம் பெற்றுக்கொண்டு சிறந்த ஆசிரியையாக கடமையாற்றியதுடன் 2006ஆம் ஆண்டு அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட அதிபர் சேவைக்கான போட்டிப் பரீட்சையில் சித்தி பெற்றதுடன் கல்குடாத் தொகுதியின் முதலாவது சித்தியடைந்த முஸ்லிம் பெண் அதிபர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



2007ஆம் ஆண்டு தொடக்கம் 2019ஆம் ஆண்டு மார்ச் மாதம் 18ஆம் திகதிவரை ஓட்டமாவடி ஹிஜ்ரா வித்தியாலயத்தில் அதிபராகவும் கடமையாற்றியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து 2019 மார்ச் மாதம் தொடக்கம் 2021.11.22ஆம் திகதிவரை ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலயத்தில் பிரதி அதிபராக கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ளார்.

திகதி 10.03.2022 வியாழக்கிழமை www.nlb.lk
உத்தியோகபூர்வ முடிவுகள்
NLB
மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4702
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 14,711,930.00
ஆங்கில எழுத்து X
வெற்றி இலக்கங்கள் 5 8 3 5 3 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 12,174,201.00
Mega POWER
மெகா பவர்
ஜோதி 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1050
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 14,648,380.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு
ரூ. 240,689,862.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00
J 13 10 39 40 58
தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 732
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,652,420.00
H 04 19 54 66
ஆங்கில எழுத்து
வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 101,637,649.60
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 374 374
பெக்ஸ்: 0114 669 416

# ஆசிரியர் முகாமைத்துவம் குறித்த விபரங்களடங்கிய தரவுத்தள கட்டமைப்புடனான முதல் மாகாணம் கிழக்கு

## ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவிப்பு

(கந்தளாய் நிருபர்)

மாகாண வரலாற்றில் ஆசிரியர் முகாமைத்துவம் தொடர்பான விபரங்களடங்கிய தரவுத்தள கட்டமைப்பு ஏற்படுத்தப்பட்ட முதலாவது மாகாணமாக கிழக்கு மாகாணம் இன்று வரலாற்றில் பதிவாகியதாக கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண கல்வியமைச்சு ஏற்பாடு செய்த ஆசிரியர் முகாமைத்துவம் தொடர்பான தரவுக்கட்டமைப்பை நேற்று முன்தினம் (10) உத்தியோகபூர்வமாக திறந்துவைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



கிழக்கு மாகாண கல்வியமைச்சில் இந்நிகழ்வு நடைபெற்றது.

திருகோணமலையில் அமைந்துள்ள இதன்மூலம் கிழக்கு மாகாணத்தில் சேவையாற்றும் ஆசிரியர்களின் விபரங்கள், கடமையாற்றும் பாடசாலை, ஆசிரியர் வெற்றிடங்கள், மாணவர்களின் எண்ணிக்கை, வகுப்பறைகள் உட்பட பல விடயங்களை உடன் அறியக்கூடியதாக அமையும். அத்துடன், உரிய விபரங்களை மையமாக வைத்து ஆக்கபூர்வமான தீர்மானங்களை கல்விசார் விடயங்களில் எட்டுவதற்கு இத்தரவுத்தளம் ஏதுவாக அமையும்.

நிகழ்வில் கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித்த பி.வணிகசிங்க, ஆளுநரின் செயலாளர் எல்.பி.மதநாயக்க, கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம்.டபிள்யு.ஜி. திஸாநாயக்க, மாகாண கல்விப் பணிப்பாளர், கல்வி அதிகாரிகள், வலயக்கல்விப் பணிப்பாளர் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

## போடியார் புலம்பல்!



367, பொருட்கள இறக்குமதி செய்யத்தடையாம். இனி கொஞ்ச பொம்பிளயலிட மொகத்த பார்க்க ஏலாதுபோல...

அண்ணன் தம்பி சித்தப்பா மகன்ட பொஞ்சாதிமாருக்கு நைட்கிறீம் உதட்டுச்சாயம் இல்லாம என்ன செய்வாங்களோ..

நாடே ஏற்கனவே இருட்டு..

வெளிநாட்டு சாமானுகள் இல்லை எண்டா இனி ஆக்களிட மூஞ்சே இருட்டாகத்தான் இருக்கப்போகுது.. மன்னரிட முகறகட்டயப்போலத்தான் மக்களிட முகங்களுக்கும் கரி பூசிப்போட்டாரே !

# கல்லடி வேலூர் பத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த திருச்சடங்கு!



(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு, கல்லடி, வேலூர் அருள்மிகு ஸ்ரீ பத்திரகாளியம்மன் தேவஸ்தான வருடாந்த திருச்சடங்கு நேற்று (11) திருக்கும்பம் வைத்தலுடன் ஆரம்பமாகி, எதிர்வரும் 18ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு இடம்பெறவுள்ள தீ மிதித்தல் வைபவத்துடன் ஆலய உற்சவம் நிறைவுபெறவுள்ளது.

இதன்போது 13ஆம் திகதி விசேட பூசை ஆராதனையும், 14ஆம் திகதி ஊர்காவல் பண்ணுதலும், 16ஆம் திகதி கன்னிமார் சடங்கும், 17ஆம் திகதி நெல்குற்றுதல் மற்றும் சக்தி மகா யாகம் ஆகியன நடைபெறவுள்ளன.

ஆலய உற்சவக் கிரியைகள் யாவும் ஆலய பிரதம பூசகர் கு.கிருஷ்ணகுமாரின் தலைமையில் உதவிப் பூசகர்களான சீ.சுவேந்திரன், செ.கருணாகரன், இ.லக்ஷ்மன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அரசியலமைப்புக்கு முரணான பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்குவதே இன்றைய தேவை!

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அரியநேத்திரன்

(வீரமுனை நிருபர்)

அரசியலமைப்புக்கு முரணான பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக நீக்குவதே இன்றைய தேவை - என மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச்சட்டமூலத்தின் சில சரத்துகள் அரசியலமைப்புக்கு விரோதமானவை என தெரிவிக்கப்பட்ட கருத்து தொடர்பாக வினவியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

தற்காலிக ஏற்பாடான பயங்கரவாத சட்ட மூலத்திற்கெதிராக பல்வேறு தரப்பினர் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தபோதும், மனுக்களின் விசாரணை அடிப்படையில், பயங்கரவாதத் தடைச் சட்டமூலத்தின் சில சரத்துகள் அரசியலமைப்புக்கு முரணானதென உயர்நீதிமன்றம் வியாக்கியானம் அளித்துள்ளது.

பயங்கரவாத தடைச்சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியமாவதால் பெரும்பான்மையை திரட்டி கொடூர சட்டத்தை நீக்கக்கூடிய அக்கறை ஆளும் தரப்புக்கோ எதிர்க்கட்சிகளுக்கோ உள்ளதா என்பது இன்றைய நிலையில் கேள்விக்குறியான விடயமே. எனவே, இந்தச் சட்டத்தில் எந்த திருத்தங்களும் கொண்டுவராமல் முழுமையாக சட்டத்தை நீக்குவதற்கான முழு முயற்சிகளை ஆளும் தரப்பும் எதிர்த்தரப்பும் இணைந்து மேற்கொள்ள வேண்டும்.

ஐரோப்பிய ஒன்றியமும் சர்வதேச அழுத்தங்களும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும் என்பதை தொடர்ச்சியாக வலியுறுத்துகிறது.



எனவே பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்ற மூவின மக்களின் நியாயமான கோரிக்கையினை தற்போதைய அரசு ஏற்று, பயங்கரவாதத் தடைச்சட்டத்தை முழுமையாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும். அதற்கு ஆளும், எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் முழுமையாக ஆதரவு வழங்க வேண்டுமெனவும் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கு மௌனத்தை கலைத்து ஒத்துழைக்க வேண்டும் எனவும் மேலும் கூறினார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சமுர்த்தி திணைக்களத்தின் பல்வேறு வேலைத்திட்டங்கள் கிழக்கு மாகாணத்தில் ஒரே நாளில் முன்னெடுப்பு








(கல்குடா நிருபர்)

ஜனாதிபதியின் சௌபாக்கியா வேலைத் திட்டத்தின்கீழ் சமுர்த்தி திணைக்களத்தினால் பல்வேறு வேலைத்திட்டங்கள் நாடளாவிய ரீதியில் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலகப் பிரிவில் சமுதாய அடிப்படை அமைப்பு அலுவலகம் திறப்பு, சௌபாக்கியா வீடு கையளிப்பு, வாழ்வாதாரத்தினை மேம்படுத்த உதவிகள், சமுதாய அடிப்படை அமைப்பினருக்கு அலுவலக பைகள் வழங்கும் நிகழ்வு என்பன செயலகத்தில் இடம்பெற்றன.

கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் எஸ்.எச்.முஸ்ஸமில் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன், செயலக உதவிப் பிரதேச செயலாளர் திருமதி எம்.ஏ.சி.றமீசா, மாவட்ட சமுர்த்தி சிரேஷ்ட முகாமையாளர் ஜே.எவ்.மனோகிதராஜ், மாவட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளுக்குப் பொறுப்பான முகாமையாளர் கே.பகீரதன், பிரதேச செயலக சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளரும் தலைமையக முகாமையாளருமான எஸ்.ஏ.எம்.பஸீர், சமுர்த்தி வங்கி முகாமையாளர் எஸ்.ரவிச்சந்திரன், சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

இதன்போது தியாவட்டவானின் அந்நூர் பிரதேச சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு அலுவலகம் திறந்துவைக்கப்பட்டதுடன், சௌபாக்கியா விசேட வீடமைப்புத் திட்டத்தின் வாழைச்சேனை 206டீ பிரதேசத்தில் பயனாளி மற்றும் மக்கள் பங்களிப்புடன் ஏழு இலட்சம் ரூபா பெறுமதியில் கட்டடப்பட்ட வீடு உரிய பயனாளியிடம் கையளிக்கப்பட்டது.

அத்தோடு 2021ஆம் ஆண்டு தெரிவுசெய்யப் பட்ட சமுர்த்தி பயனாளிக்கு பால் கறக்கும் பசுக்கள் வழங்கப்பட்டதுடன், சமுதாய அடிப்படை அமைப்புகளுக்கான உறுப்பினர்களுக்கான அலுவலக பைகள் வழங்கப்பட்டன. சமுர்த்தி பெறும் இரண்டு பயனாளிகள் வாழ்வாதாரம் உயர்வடைந்த நிலையில் சமுர்த்தி கொடுப்பனவு அட்டையை தாமாக முன்வந்து ஒப்படைத்ததுடன், சமுர்த்தி திணைக்களத்தினால் கௌரவிக்கப்பட்டனர்.

சமுர்த்தி வங்கியின் புதிய மாற்றங்களுக்கு அமைவாக தற்போதைய காலத்தில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்கள் பலம் பொருந்திய ஒரு அமைப்பாக செயற்படுகின்றன. இந்த சமுதாய அடிப்படை அமைப்புகள் ஒரு கிராம சமுர்த்தி வங்கியாகவும் தற்போது செயற்படுகின்றன. அந்தளவிற்கு இந்த சமுதாய அடிப்படை அமைப்புகளுக்கு பல அதிகாரங்களை சமுர்த்தி திணைக்களம் வழங்கியுள்ளது. இதனடிப்படையில் கிராம மக்களின் உடனடி தேவைகளுக்காக பணத்தினை கிராமத்திலேயே இந்த சமுதாய அடிப்படை அமைப்புகள் வழங்குகின்றன. இது அநியாய வட்டிக்காரர்களுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட ஒரு பாரிய திட்டமாகும். எனவே, இந்த சமுதாய அடிப்படை அமைப்புகளை பலப்படுத்த கிராமங்கள்தோறும் அலுவலகங்கள் திறக்கப்பட்டும், அலுவலக பைகளும் வழங்கப்பட்டு ஊக்குவிக்கப்படுகின்றன.

# திருமலையில் மூன்று வருடமாக நபரொருவரைக் காணவில்லை

## பொலிஸில் முறைப்பாடு செய்தும் பலனளிக்கவில்லையென அவரது மனைவி கவலை

(கல்குடா நிருபர்)



திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அம்மன்நகர் எனும் கிராமத்தில் வசித்துவந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான கிருபைராசா சத்தியரூபன் என்பவர் கடந்த 2018.06.29ஆம் திகதி திருகோணமலை கன்னியா என்ற இடத்திற்கு வேலைக்கு சென்ற வேளையில் காணாமல் போயிருந்தார்.

இந்நிலையில் மூன்று வருடங்கள் கடந்தும் இன்னும் வீடு திரும்பவில்லை என இவரது மனைவி சத்தியரூபன் கஸ்தூரி தெரிவித்தார்.

இவர் தொடர்பாக சம்பூர் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. எனினும், இதுவரை எந்தவித தகவலும் கிடைக்கவில்லையென அவரது மனைவி கஸ்தூரி கவலை தெரிவிக்கின்றார்.

எனவே இவரை பார்த்தாலோ அல்லது இவரைப் பற்றி தகவல் அறிந்தாலோ பின்வரும் இலக்கத்திற்கு 0779896137 அறியத்தருமாறு மனைவி சத்தியரூபன் கஸ்தூரி கேட்டுக்கொண்டுள்ளார்.

# மூதூர் களப்புக் கடற்கரையில் கண்டல் தாவரங்கள் நாட்டிவைப்பு





(மூதூர் நிருபர்)

மூதூர் களப்பு கடற்கரையில் நேற்று (11) காலை கண்டல் இனத் தாவரங்கள் நட்டு வைக்கப்பட்டன.


"இயற்கை அனர்த்தங்களிலிருந்து மூதூரின் சுற்றுச்சுழலை பாதுகாப்போம்" எனும் திட்டத்தின்கீழ் ஜனநாயக இடதுசாரி கட்சியின் திருகோணமலை மாவட்ட மகளிர் அமைப்பாளர் திருமதி றைசா றியாஸ் தலைமையில் இக்கண்டல் தாவரங்கள் மூதூர் களப்பு கடற்கரையோரத்தில் நட்டு வைக்கப்பட்டன.



இதில் மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எம்.ஏ.அரூஸ், இந்து, இஸ்லாமிய, பௌத்த, கிறிஸ்தவ சர்வமத் தலைவர்கள், பாடசாலை மாணவ மாணவிகள், மூதூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு கண்டல் தாவரங்களை நட்டுவைத்தமை குறிப்பிடத்தக்கது.

# சுயதொழில் முயற்சியாளரை ஊக்குவிக்கும் வேலைத்திட்டம் இறக்காமத்தில் ஆரம்பம்





(மாளிகைக்காடு நிருபர்)

ஜனாதிபதியின் சிந்தனையில் உருவான சௌபாக்கிய வேலைத்திட்டத்தின் கீழ் வாழ்வாதார உதவிகள் இறக்காமம் பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்டது. நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் ஜனாதிபதியின் "சௌபாக்கிய வாழ்வாதார உற்பத்தித்திறனை மேம்படுத்தும் வேலைத்திட்டம்" எனும் கருப்பொருளின்கீழ் பிரதேச செயலக பிரிவில் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவதன் ஊடாக சுயதொழில்களை வலுவூட்டி அவர்களின் சுயதொழில் முயற்சிகளின் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் வேலைத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின், விதாதா வள நிலையத்தின் "ஒரு கிராமத்தில் ஒரு சுயதொழில் முயற்சியாளரை ஊக்குவித்தல்" நிகழ்ச்சி திட்டத்தினூடாக தெரிவுசெய்யப்பட்ட சுயதொழில் முயற்சியாளர்களின் உற்பத்தித்திறனை மேலும் மேம்டுத்தும் நோக்கில் அனைத்து கிராம சேவக பிரிவுகள் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு இந்த உதவிகள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலாளர் எம்.எஸ்.எம்.ரஷ்ஷான் (நளீமி) தலைமையில் பிரதேச இவ்வாழ்வாதார உதவிகள் வழங்கிவைக்கும் நிகழ்வு இடம்பெற்றது. மேலும் இந்நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அஹமட் நஸீல் உட்பட கணக்காளர் றிம்ஷியா அர்சாட், பிரதி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.ஹம்சார், சிரேஷ்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் யூ.எல். ஆஹிர், விதாதாள வள நிலையத்திற்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஜி.கே.முஹம்மட், விதாதா நிலைய கள உத்தியோகத்தர் ஏ. ஜனூஸ் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# நேர்மையான உழைப்பே உயர்வைத் தரும்!

## சாய்ந்தமருது பரீட் ஹாஜியார்

**சுனாமியால் உயிர்கள், உடைமைகள் இழந்த அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேச மக்களின் மிக முக்கிய தேவையாக இருந்த காணி பிரச்சினைக்குத் தீர்வை பெற்றுக்கொடுத்தவரும், தரம் 05 வரை மட்டுமே கற்றிருந்தாலும் தனது 15 பிள்ளைகளை சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் உயர்த்திய தந்தையாகவும் கடின உழைப்பால் உயர்ந்த வியாபாரியாகவும், தனது செல்வத்தில் ஏழை மக்களுக்கு வாரிவழங்கும் ஒருவராகவும் தன்னை நிரூபித்த பிரதேச மக்களினால் பரீட் ஹாஜியார் என அறியப்படும் அகமதுலெவ்வை அப்துல் பரீட் 'தமிழன்' வார இதழுக்கு வழங்கிய செவ்வி !**

**உங்களை பற்றிய அறிமுகத்தைக் கூறுங்கள்:**

சாய்ந்தமருதைச் சேர்ந்த பிரபல ஆயுர்வேத வைத்தியர் (பிரதேச மக்களினால் பரிசாரி என அழைக்கப்பட்டவர்) உதுமாலெப்பை அகமதுலெவ்வைக்கும் சேகு இஸ்மாயில் ஆமினா உம்மாவுக்கும் பிறந்த ஐந்து பிள்ளைகளில் மூத்த பிள்ளையாக பிறந்த அகமதுலெவ்வை அப்துல் பரீட் ஆகிய எனக்கு தற்போது 55 வயதாகின்றது. எனக்கு பௌசியா, பஸீனா என்ற இரண்டு இளைய சகோதரிகளும், பாரூக், பர்சான் எனும் இரண்டு சகோதரர்களும் இருக்கிறார்கள். ஏ.எல்.பாரூக் எனும் எனது சகோதரர் ஆசிரியராக அரச பாடசாலைகளில் கடமையாற்றி வருகிறார். மற்றைய சகோதரர் பர்சான் கட்டட நிர்மாணத்துறையில் கற்கைநெறிகளை பூர்த்திசெய்துள்ளார். நான் காணிகளை வாங்கியும் விற்றும் கொடுக்கும் தொழிலை இப்போது வாழ்வாதாரமாகக்கொண்டுள்ள அதேவேளை, ஏனைய வியாபாரிகளுடன் இணைந்து வியாபார நடவடிக்கைகளுடன் ஈடுபடுவதனூடாகவும் வருமானமீட்டி வருகின்றேன். கடந்த 25 வருடங்களாக இத்தகைய வியாபார தொழில்களிலேயே ஈடுபட்டு வருகின்றேன்.

எனக்கு முதல் திருமணத்தின் மூலம் 12 பிள்ளைகளும், 2014ஆம் ஆண்டில் ஒரு விதவைப் பெண்னை திருமணம் முடித்ததன் மூலம் ஒரு பிள்ளையுமாக மொத்தம் 13 பிள்ளைகள் உள்ளனர். இதில் 10 பெண்பிள்ளைகள் என்பதனால் அவர்களது கல்வி, பாதுகாப்பு மற்றும் திருமணம் என பாரிய பொறுப்புகளை சுமந்தவண்ணம் வாழ்ந்து வருகின்றேன்.

**உங்களின் குடும்பத்தினரை பற்றி கூறுங்கள்:**

18 குடும்ப அங்கத்தவர்களைக்கொண்ட மிகப்பெரிய குடும்பம் என்னுடையது. நான் முதல் திருமணம் செய்த என்னுடைய மனைவியின் பெயர் அப்துல் வஹாப் சித்தி ஸாபிரா. கிழக்கில் புகழ்பெற்ற முத்தலிபு வைத்தியரின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்னே என்னுடைய முதல் மனைவி. அடுத்ததாக காத்தான்குடியில் ஒரு விதவைப் பெண்ணை திருமணம் செய்துள்ளேன். 43 வயதான ஆதம்லெப்பை சம்ஸா வேகம் என்பது என்னுடைய இரண்டாவது மனைவியாவார். இருவருடனும் சந்தோஷமாக வாழ்ந்து வருகிறேன்.

எனது முதல் மனைவிக்கும் எனக்குமான மொத்த குழந்தைகள் பதின்மூன்று. அதில் மூத்த மகள் பாத்திமா சுமையா - அவர் இலங்கை தென்கிழக்குக் பல்கலைக் கழகத்தில் கலைமாணி பட்டத்தை முடித்து அக்கரைப்பற்று பதுரியா வித்தியா லயத்தில் ஆசிரியையாக பணியாற்றி வருகிறார். அவரது கணவர் ஆங்கில ஆசிரியராக சம்மாந்துறை மத்திய கல்லூரியில் பணியாற்றி வருகிறார். சட்டக்கல்வியை முடித்துக்கொண்டு இப்போது சட்டத்தரணியாக பிரமாணம் செய்ய சகல முயற்சிகளையும் செய்து வருகிறார். இரண்டாவது மகள் பாத்திமா அஸ்மா - தன்னுடைய மருத்துவக் கல்வியை ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் முடித்துக்கொண்டு இப்போது கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வைத்தியராக கடமையாற்றி வருகிறார். அவரது கணவரும் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வைத்தியராக கடமையாற்றி வருகிறார். மூன்றாவது மகள் பாத்திமா ஆயிஷா - கொழும்பு பல்கலைக்கழகத்தில் யுனானி மருத்துவக் கல்வியை கற்றுவருகிறார். அவர் பொறியியலாளரை திருமணம் செய்துகொண்டுள்ளார். நான்காவது பிள்ளையான என்னுடைய மகன் முஹம்மட் யாஸீர் - மாவடிப்பள்ளி மற்றும் அக்கரைப்பற்று அரபுக் கலாசாலைகளில் தன்னுடைய உலமா கற்கைகளை முடித்து இன்று அல்ஹாபிழாகவும், மௌலவியாகவும் இருந்துவருகிறார் அவரும் திருமணம் செய்துகொண்டுள்ளார். ஐந்தாவது பிள்ளை பாத்திமா - சம்மாந்துறை தொழில்நுட்பக் கல்லூரியில் பயின்று ஆங்கில பயிற்சி ஆசிரியையாக கடமையாற்றி வருவதுடன், அரச வர்த்தகக் கூட்டுத்தாபன உத்தியோகத்தரை திருமணம் செய்துகொண்டுள்ளார். ஆறாவது பிள்ளையான மகன் முஹம்மட் உஸாமாவும் மாவடிப்பள்ளி அரபுக் கலாசாலையில் தன்னுடைய உலமா கற்கைகளை முடித்து இன்று அல்ஹாபிழாக இருந்துவருகிறார். என்னுடைய இரண்டு மகன்களும் உலமாக்களாக இருந்தாலும் கூட என்னுடைய தொழில் மற்றும் வியாபார நடவடிக்கைகளில் கண்ணியத்துடன் இணைந்து பணியாற்றி வருகிறார்கள்.

ஏழாவதாக பிறந்தது பாத்திமா ஜுவைரியா எனும் மகள். அவர் இறுதியாக வெளியான பெறுபேறுகளின் அடிப்படையில் சித்த மருத்துவத்துறையில் கல்வி பயிலும் வாய்ப்பை கிழக்கு பல்கலைக்கழகத்தில் பெற்றுள்ளார். இருந்தாலும் மற்றுமொரு தடவை முயற்சிசெய்து பார்க்க எண்ணியுள்ளார். எட்டாவதாக பிறந்த மகன் முஹம்மட் உமைர் காலமாகிவிட்டார். ஒன்பதாவது குழந்தை பாத்திமா ருஹய்யா எனும் மகள். இப்போது கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியில் உயர்தரம் கற்று வருகிறார். பத்தாவது பிள்ளையான மகள் பாத்திமா ஜெய்னப் கடந்த சாதாரண தரப் பரீட்சையில் 09 (A ) திறமை சித்திகளை பெற்று இப்போது விஞ்ஞானப் பிரிவில் உயர்தரம் கற்று வருகிறார். பதினோராவது பிள்ளை முஹம்மட் ஹுபைப் என்பவர். இன்னும் சில மாதங்களில் சாதாரண தரப் பரீட்சை எழுதத் தயாராகி வருகிறார். பன்னிரண்டாவது பிள்ளை பாத்திமா அம்மாரா எனும் மகள். அவர் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் திறமை சித்தி பெற்றுள்ளதுடன் மட்டுமன்றி குர்ஆனை மனனமிட்ட அல்-ஹாபிழாகவும் திகழ்கிறார். பதின்மூன்றாவது குழந்தை பாத்திமா ஹாஜரா. அந்த குழந்தையும் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றை பெற்றுள்ளது.

காத்தான்குடியில் நான் திருமணம் செய்த என்னுடைய மனைவிக்கு ஏற்கனவே இரண்டு பெண்பிள்ளைகள் இருக்கிறார்கள் அவர்களுக்கு நான் வளவுகளை வாங்கி வீடுகட்டி கொடுத்து திருமணமும் செய்து வைத்துள்ளேன். அதில் எனக்கு பிறந்த சொந்த மகள் ஒன்று இருக்கிறது. அதன் பெயரும் பாத்திமா ஹாஜரா என்றே வைத்துள்ளேன். இப்போது அந்த குழந்தை பாலர் பாடசாலைக்கு சென்று கொண்டிருக்கிறது. நான் ஐந்தாம் தரம் வரை மட்டுமே கல்விகற்றுள்ளேன். ஆனால், இவ்வாறு என்னுடைய சகல குழந்தைகளும் இறைவனின் உதவியினால் நல்ல திறமையான பிள்ளைகளாக உருவாகியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

**சமகாலத்தில் உள்ள நெருக்கடி நிலைகளை சமாளித்துக்கொண்டு 13 திறமையான பிள்ளைகளை உருவாக்கியது கஷ்டமாக தெரியவில்லையா?**

இறைவனை பயந்தவனாக நான் முன்னெடுத்த என்னுடைய வியாபாரம் எனக்கு உறுதுணையாக இருந்தது. என்னுடைய புடவை வியாபாரமாக இருந்தாலும் சரி, காணி வியாபாரமாக இருந்தாலும் சரி எந்த வியாபாரத்திலும் சரி நான் யாரையும் பொய் கூறி ஏமாற்றுவதில்லை. நீண்டநேரம் அர்ப்பணிப்புடன் என்னுடைய வியாபார நடவடிக்கைகளை செய்தமையினால் என்னுடைய தொழிலில் வெற்றி இருந்தது. என்னுடைய பிள்ளைகளின் இவ்வளவு திறமையான வளர்ச்சிக்கு காரணமாக என்னுடைய மனைவியின் திறமையை கூறுவேன். சிறந்த தாயாக தன்னுடைய கடமையை சிறப்பாக செய்திருக்கிறார் என்பதே உண்மை.




**உங்களினால் சாய்ந்தமருது பொலி வேரியன் கிராமத்தில் உருவாக்கப் பட்ட தாருஸ்ஸலாம் சிட்டி தொடர்பில் கூறுங்கள்...**

கடந்த 2004.12.26ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக நான் உட்பட எனது குடும்பத்தினரும் பெரும் பாதிப்புக்குள்ளானோம். அந்த வகையில், கடற்கரையிலிருந்து 200 மீற்றர் எல்லைக்குள் அமைந்திருந்த எனது வீடும் அதனோடு ஒட்டிய சிறியளவிலான புடவைக் கடையும் , சில்லறைக் கடைகளும் முற்றாக அழிந்து விட்டன . அக்காலகட்டத்தில் எனக்கு ஏழு பெண்களும் இரண்டு ஆண்களுமாக ஒன்பது பிள்ளைகள் காணப்பட்டார்கள். எனது உறவினர்களில் 22 பேர் குறித்த ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக மரணமடைந்த நிலையில் நானும் எனது சிறுபிள்ளைகளும் தொடர்ச்சியாக ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்படுமோ என்ற பீதியுடனேயே வாழ்ந்துவந்தோம்.

எனவே, தொடர்ந்தும் குறித்த 200 மீற்றர் எல்லைக்குள் வசிக்க விரும்பாத நாங்கள் அயலவர்கள் மற்றும் குடும்பத்தினர் சகிதம் அரசினால் சுனாமியால் பாதிக்கப்பட்டோர் குடியமர்த்தப்பட்ட சாய்ந்தமருதின் வொலிவேரியன் கிராமத்துக்கு மேற்குப் பகுதியில் 2005ஆம் ஆண்டு காலப்பகுதியில் எங்களது பிள்ளைகளின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு காணித்துண்டுகளை கொள்வனவுசெய்ய விரும்பினோம். குறித்த கரைவாகுப்பற்று குடாக்கரைக்கிழல்க் கண்டத்தில் விவசாயம் செய்ய பொருத்தமற்றதென செய்கைபண்ணப்படாது காணப்பட்ட 200 ஏக்கர் காணியை அரசு சுனாமியால் பாதிக்கப்பட்டோரை மீளக்குடியமர்த்தும் நோக்கில் நில அளவை செய்தது. இருப்பினும், கடற்கரையிலிருந்து 65 மீற்றர் பரப்புக்குள் வாழ்ந்த மக்கள் மாத்திரம் நிலஅளவை செய்யப்பட்ட 200 ஏக்கரில் 50 ஏக்கர் காணிக்குள் குடியமர்த்தப்பட்டனர் . இதுவே இன்று வொலிவேரியன் கிராமம் என அழைக்கப்படுகின்றது .

மீதியாக காணப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் குறித்த காணிகளை விற்பனைசெய்ய முற்பட்ட வேளையில் குறித்த காணிகளை சுனாமியால் பாதிக்கப் பட்ட என் போன்றவர்கள் எங்கள் பிள்ளை களின் எதிர்கால வாழிடத் தேவைகளை பூர்த்திசெய்யும் நம்பிக்கையோடும் எதிர்பார்ப்புடனும் கொள்வனவுசெய்து குடியேற்றத்துக்காக அரசின் முழுமை யானதும் முறையானதுமான அனுமதியை பெறுவதற்காக விவசாய அமைச்சு மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் ஆகியவற்றினூடாக கடந்த 16 வருடங் களாக முயற்சித்து வருகின்றோம்.



தாருஸ்ஸலாம் சிட்டி என்பது சாய்ந்தமருது பொலிவேரியன் பிரதேசத்தில் 35 ஏக்கர் பரப்பளவை கொண்டது. சாய்ந்தமருது 14ஆம் கிராம நிலதாரி பிரிவிலும், மாளிகைக்காடு மேற்கு பிரதேசத்திலும் அதன் எல்லைகள் அமைந்துள்ளன. பல மில்லியன் ரூபாவை செலவழித்து சுனாமியினால் இடங்களை இழந்தவர்களுக்காகவும், சனத்தொகை பரம்பலினால் காணிகள், இல்லிடங்கள், வதிவிடங்கள் இல்லாதோருக்கவும் உருவாக்கியுள்ளோம். நாங்கள் இந்தப் பணியை ஆரம்பிக்க முன்னர் விரல்விட்டு எண்ணக்கூடியவர்களே காணி வாங்கி விற்பனை செய்வதை தொழிலாகச் செய்தார்கள். இப்போது நான் தேவையுடைய பலரையும் என்னுடன் இணைத்து அவர்களுக்கு நன்றாக இந்த தொழிலை கற்றுக் கொடுத்துள்ளேன். பல ரும் இப்போது இதனால் முன்னேறி வருகிறார்கள். அது எனக்கு திருப்தியாக இருக்கிறது.

உண்மையை கூறப்போனால், சமூக சேவையாக ஆரம்பித்த பணியே இது. சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் ஒன்றியம் என்றே நாங்கள் இந்த செயற் பாட்டை ஆரம்பித்தோம். 800 - 900 குடும்பங்களைக்கொண்ட அந்த ஒன்றியத்தில் தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகத்தின்படி நானே அந்த ஒன்றியத்தை தலைமை தாங்கினேன். அப்போது என்னுடைய குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் பக்கபலமாக இருந்தார்கள். அதுவே இப்போது விரிவடைந்து பெரிய வரலாறாக உருப்பெற்றுள்ளது.

**சமூக சேவைகளில் நீங்கள் முந்தியடித்துக் கொண்டு முன்வரக் காரணம் என்ன ?**

நான் என்னுடைய 20 வயது முதலே சமூக சேவைகளில் ஈடுபட ஆரம்பித்துவிட்டேன். என்னுடைய தொழிலில் கிடைக்கும் சிறிய வருமானமாக இருந்தாலும் அதிலிருந்து ஒரு பகுதியை தர்மம் செய்ய பழக்கப்பட்டவன் நான். இறைவனின் பள்ளிவாசல்கள், குர்ஆன் கற்கும் மதரஸாக்களுக்கு உதவிசெய்வது என்பதை வழமையாக பழக்கத்தில் கொண்டுள்ளேன். விதவை பெண்களின் வாழ்வாதாரத்திற்கு உதவி செய்வது, ஏழை மற்றும் அனாதைகளுக்கு உதவுவதில் எப்போதும் முன்னுரிமை கொடுத்து வருகிறேன். அல்-அமானா நற்பணி மன்றம் என்ற அமைப்பை நிறுவி இப்போது அதனூடாக நிறைய உதவிகளை செய்து வருகிறேன். பாரிய நோய்வாய்ப்பட்டவர்கள், கல்வி, பிரதேச விளையாட்டுத்துறை அபிவிருத்தி, சமூக, கலை, கலாசார மேம்பாடுகளுக்கும் நாங்கள் உதவி வருகிறோம். இதன்மூலம் இறைவனின் கருணையும் மனத்திருப்தியும் கிடைப்பதே எனது சமூக சேவைகளுக்கான பிரதான காரணமாக அமைந்துள்ளது.

அதனால் என்னை பல அமைப்புகளும், அரச உயர் அதிகாரிகளும் கடந்த காலங்களில் பாராட்டி கௌரவித்துள்ளமை மகிழ்ச்சியளிக்கிறது.

என்னுடைய குழந்தைகளை இறைவன் கல்வியறிவைக்கொண்டு கௌரவப் படுத்தியதைபோன்று சாய்ந்தமருது மேற்கில் அமைந்துள்ள எங்களின் கனவு நகரமான பொலிவேரியன், தாருஸ்ஸலாம் கிராமத்திலிருந்து எங்களின் உச்சகட்ட முயற்சியை செலுத்தி நிறைய நல்ல மனிதர்களையும், சிறந்த கல்விமான்களையும் உருவாக்க வேண்டும் எனும் கனவை கொண்டுள்ளோம். எங்களுக்கு இறைவன் தந்த - தரப்போகின்ற பொருளாதார வசதிகளைக்கொண்டு நிறைய உதவிகளை எமது நாட்டுக்கும், எங்களின் பிரதேசங்களுக்கும் செய்ய தயாராக இருக்கிறோம். தேவையேற்பட்டால் உள்ளூர் அரசியலிலும் களமிறங்க தயங்கப்போவதில்லை. அப்படி களமிறங்கினால் மக்கள் எங்களை வெல்லவைப்பார்கள்.

என்னுடைய சகல முன்னெடுப்பு களுக்கும் எனது தொழில் பங்காளிகள், நண்பர்கள், குடும்பத்தினர் பக்கபலமாக இருந்துவருகிறார்கள். அவர்களின் உதவிகளையும் ஆலோசனைகளையும் கொண்டே வரலாற்றின் முக்கிய நிகழ்வு களை தடம்பதித்துள்ளோம். ஏனையோரும் எங்களை பார்த்து எங்களின் வாழ்க்கையை முன்னுதாரணமாகக்கொண்டு தங்களின் வாழ்க்கையை மேம்படுத்த வேண்டும் என்பதே எங்களின் விருப்பமாக இருக்கிறது.

**வியாபாரம், சமூக சேவைகள் தாண்டி நீங்கள் ஆத்மீக பயணங்கள் செய்பவராக இருக்கிறீர்கள் அது உங்களுக்கு எவ்வகையில் அமைந்துள்ளது ?**

இளமையிலிருந்தே பள்ளிவாசல் களுடன் நான் தொடர்பை பேணிக்கொண்டவன். குர்ஆனை முழுமையாக ஓதி முடித்துள்ளேன். ஹதீஸ்களை நான் நிறைய மனனமிட் டுள்ளேன். அதனால் இஸ்லாத்தை ஏனையோருக்கும் எத்திவைக்க விரும்பி இஸ்லாமிய பிரசாரங்களை முன்வைத்து வருகிறேன். அதனூடாக பல்லாயிரக்கணக்கான மக்களை சந்தித்துப் பேசியுள்ளேன். அந்த பணிக்காக இலங்கையிலும், இலங்கைக்கு வெளியேயும் நூற்றுக்கணக்கான பள்ளிவாசல்களில் தங்கியிருந்துள்ளேன். இதுவே பொதுமக்கள் என்னுடன் எவ்வித அச்சமுமில்லாது வியாபார நடவடிக்கை களில் ஈடுபடக் காரணம். என்னுடைய ஆத்மீக வாழ்க்கை முறைகளும் பல்லாயி ரக்கணக்கான மக்களுடன் வியாபாரம் செய்யும் எனக்கு இறைபாதையே அடை யாளமாக இருக்கிறது. மார்க்கப்பற்றுடன் இறைவனுக்கு பயந்தவராக நான் வாழ்ந்து கொண்டிருப்பதனால் மக்கள் தைரியமாக என்னுடன் வியாபாரம் செய்கிறார்கள்.

அதுமட்டுமன்றி அதிக பெண்பிள்ளை களை பெற்றவருடன் வியாபாரம் செய் தால் பரக்கத் (இலாபம்) கிடைக்கும் என்று நம்புகிறார்கள். மக்களின் நம்பிக்கையே என்னுடைய வெற்றியாக இருக்கிறது. நான் ஆத்மீக பயணங்களை மேற்கொண்டு மூன்று நாட்கள், நாற்பது நாட்கள் என இறைவனின் பாதையில் மக்களை நேர்வழிப்படுத்தவும், இஸ்லாத்தின் தத்துவங்களை பொதுமக்களுக்கு எடுத்துரைக்கவும் நாட்டினுள்ளும், நாட்டுக்கு வெளியேயும் பயணித்து கொண்டிருப்பவன். அப்போதெல்லாம் எனக்கு உறுதுணையாக என்னுடைய மனைவி இருந்துள்ளார். பிள்ளைகளையும் சிறப்பாக வளர்த்துக்கொண்டு என்னுடைய வியாபார நடவடிக்கைகளையும் கவனித்து கொள்பவராக இருக்கிறார்.

**வியாபாரிகளுக்கு நீங்கள் கூறும் ஆலோசனை என்ன?**

வியாபாரிகள் தூய சிந்தனைகொண்ட வர்களாக இருப்பதுடன் மக்களுக்கு நாம் விற்னை செய்யும் பொருள் பயனுள்ளதாக அமைந்துள்ளதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். நம்பிக்கை துரோகம் செய்வதும், அதிக இலாபத்திற்கு விற்பனை செய்வதும் கூடாது. மனசாட்சிப்படி வாங்குபவர்கள் திருப்தியடையும் விதமாக வியாபார நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும். ஏமாற்றுவது கூடாது. என்னுடைய 17 வருட கால அனுபவத்தில் பல்லாயிரக்கணக்கான காணிகள் வாங்கப்பட்டும், விற்கப்பட்டும் உள்ளது. எனது காணி வியாபாரத்தினால் கிடைக்கப்பெற்ற முத்திரை தீர்வை பணத்தினால் கல்முனை மாநகர சபைக்கு பல மில்லியன் வருமானம் கிட்டியுள்ளது.



**உரையாடல் :**
**நூருல் ஹுதா உமர்**
**மாளிகைக்காடு நிருபர்**

# நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப அரசாங்கம் செல்லும் பாதை தவறு!

## சரத் பொன்சேகா எம்.பி. சுட்டிக்காட்டு




அரசாங்கம் தற்போதைய நடைமுறைகளில் நெருக்கடி நிலைமையிலிருந்து மீளுவதற்கான செயற்பாடுகள் இருப்பது போன்று தெரியவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

சர்வதேச ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் முன்னெடுக்கப்பட்டு ஜனாதிபதி விசேட விசாரணை ஆணைக்குழுவுக்கு சாட்சியளிப்பதற்காக நேற்று முன்தினம் சென்றிருந்தார். சாட்சி வழங்கிய பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அரசாங்கம் இந்த நெருக்கடியிலிருந்து மீளுவதற்கு சரியான பாதையில் செல்வது போன்று தெரியவில்லை. சரியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் தெரியவில்லை.

அதனை உணர்த்துவதற்காக வாசுதேவ நாணயக்கார உள்ளிட்டோர் தனித்து வந்து செயற்படுகிறார்கள் என்று தெரிவிக்கப்பட்டாலும் அது உண்மை இல்லை. அவர்கள் இன்னும் அரசாங்கத்திலிருந்து வெளியேறவில்லை. இன்னும் அரசாங்கத்துக்குள்ளேயே சுற்றிச்சுற்றி வருகிறார்கள்.

நாட்டில் பல்வேறு சர்வகட்சி மாநாடுகள் இடம்பெற்றுள்ளன. அந்த மாநாடுகளினால் நாட்டுக்கு எந்த நன்மையும் கிடைக்கவில்லை. மாநாடுகளை வெறுமனே அரசியல் துருப்புச்சீட்டுகளாகவே அதனைப் பயன்படுத்துகிறார்கள். பிரதமரின் கருத்துகளை நாங்கள் கணக்கில் கொள்வதில்லை என்று குறிப்பிட்டார்.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு ஜனாதிபதி நேற்று கண்காணிப்பு விஜயம்









வெளிநாட்டு வேலைவாய்ப்பு சந்தையில் பயிற்சி தொழிலாளர்களுக்கான வாய்பை பெற்றுக் கொள்வது தொடர்பில் அதிக கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

வெளிநாட்டு பணியாளர்கள் தமது தொழிலுக்கு ஏற்ற பயற்சியுடன் இருந்தால் உயர் சம்பளம் மற்றும் தொழில் ஆகியவற்றுக்கு பாதுகாப்பு கிடைக்குமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டுள்ளார்.

பத்தரமுல்லை, கொஸ்வத்தை, டென்சில் கொப்பேகடுவ மாவத்தையிலுள்ள இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதான அலுவலகத்துக்கு நேற்று கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டிருந்தார்.

அதன்போது ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தேசிய பொருளாதாரத்துக்கு ஒத்துழைப்பு வழங்குதல் மற்றும் சகல துறையினரதும் நன்மை கருதி, மக்களுக்கு அவர்களின் திறமைக்கு ஏற்ற தொழில் வாய்ப்பை உருவாக்குதல் என்பன வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் முக்கிய குறிக்கோளாகும்.

உரிமம் பெற்ற வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிறுவனங்களின் பங்களிப்புடன் நாடளாவிய ரீதியில் உள்ள தொழில் சந்தை குறித்து பொதுமக்களுக்கு அறிவூட்டுவதற்கு பணியகம் மேற்கொண்ட முயற்சிகளுக்கு ஜனாதிபதி பாராட்டு தெரிவித்துள்ளார்.

பணியகக் கட்டிடத்திலுள்ள அனைத்துப் பிரிவுகளையும் பார்வையிட்ட ஜனாதிபதி, சேவைகளைப் பெற வந்திருந்த மக்களிடம் தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு அதிகாரிகளை இதன்போது ஊக்குவித்துள்ளார்.

# மத்துகமவிலுள்ள பாடசாலைகளுக்கு கணினிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு திங்களன்று

(பேருவளை நிருபர்)

களுத்துறை மாவட்டத்திலுள்ள மத்துகம வெலிப்பன்னை ரஹ்மானிய்யா முஸ்லிம் மகா வித்தியாலயம், புலத்சிங்கள தொகுதியில் உள்ள வியங்கல்லை முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆகிய இரு பாடசாலைகளுக்கும் கணினி உபகரணத் தொகுதி கையளிக்கும் நிகழ்வு எதிர்வரும் 14 ஆம் திகதி காலை நடைபெறும்.

நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் பிரதம அதிதியாக கலந்து கொண்டு அவற்றை கையளிக்கவுள்ளார்.

வெளிப்பன்னை ரஹ்மானிய்யா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் காலை 10 மணிக்கும் வியங்கல்லை முஸ்லிம் மகாவித்தியாலயத்தில் காலை 11 மணிக்கு இடம்பெறும்.

நாடாளுமன்ற உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் இந்த இரு பாடசாலைகளுக்கும் கணினி உபகரணத் தொகுதி பெற்றுக் கொடுக்க தனது 2021 ஆம் ஆண்டு வரவு - செலவுத் திட்ட நிதியில் இருந்து தலா ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கல்வி அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் விபத்து ஒருவர் உயிரிழப்பு: இருவர் படுகாயம்



தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் தொடங்கொட பிரதேசத்தில் கடவத்தை பிரதேசத்திலிருந்து மாத்தறை வரை பயணித்த கோழி குஞ்சுகளை எடுத்துச் செல்லும் லொறி, அதே திசையில் பயணித்துகொண்டிருந்த சீமெந்து ஏற்றிச்சென்ற இன்னுமொரு லொறியை முந்திச் செல்ல முயற்சித்தபோது இரு வாகனங்களும் மோதி இடம்பெற்ற விபத்தில் நபரொருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் இருவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக அதிவேக நெடுஞ்சாலை வீதி அபிவிருத்தி பொலிஸ் பிரிவு தெரிவித்துள்ளது.

நோர்வூட் பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதுடைய நபரொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று (11) காலை 1.34மணியளவில் தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் 29.7 மைல்கல் பகுதியிலுள்ள தொடாங்கொட பொலிஸ் பிரிவில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இரு லொறிகளும் கடவத்தை பகுதியிலிருந்து மாத்தறை நோக்கி பயணித்துள்ளதுடன், அவற்றில் ஒரு லொறி சீமெந்து ஏற்றிச் சென்றுள்ளது. இன்னுமொரு லொறி முட்டை ஏற்றிச் சென்றுள்ளது.

இதன்போது கோழிக் குஞ்சுகளை ஏற்றிச் சென்ற லொறி முன்னால் பயணித்த சீமெந்து லொறியை முந்திச் செல்ல முயற்சித்தபோது, சீமெந்து ஏற்றிச் சென்ற லொறி மீது கோழிக் குஞ்சுகளை ஏற்றிச்சென்ற லொறி மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது, குறித்த லொறியில் மூவர் பயணித்துள்ளதுடன் விபத்தில் மூவரும் பலத்த காயமடைந்த நிலையில் நாகொட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். லொறியின் இடது பக்கத்தில் கதவோரத்தில் அமர்ந்திருந்த நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபரின் சடலம் நாகொட மாவட்ட வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பிரேத பரிசோதனைகள் இடம்பெறவுள்ளன.

இந்த விபத்தில் சீமெந்தி ஏற்றிச் சென்ற லொறியில் பயணித்த எவருக்கும் பாதிப்பு ஏற்படவில்லை என பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் மகளிர் தின நிகழ்வு நாளை

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு கொழும்பு விவேகானந்தா கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் மகளிர் பிரிவு ஏற்பாடு செய்துள்ள நிகழ்வு நாளை 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கல்லூரி அதிபர் திருமதி. சி. ரவிச்சந்திரிக்கா தலைமையில் நடைபெறவுள்ளது.

கொட்டாஞ்சேனையிலுள்ள கல்லூரி வளாகத்தில் காலை 8.30 மணி முதல் மாலை 4 மணி வரை பல்வேறு மனங்கவர் நிகழ்ச்சிகள் இடம்பெறுவதுடன், பழைய மாணவிகளுக்கிடையே வலைப்பந்தாட்ட போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

கல்லூரியின் பழைய மாணவிகள் மட்டுமன்றி அனைத்து மகளிரும் இந்நிகழ்வுக்கு வருகைதருமாறு விவேகானந்தா பழைய மாணவிகள் பிரிவு அழைப்பு விடுக்கின்றது.

# அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவை சங்கம் தொழிற்சங்க நடவடிக்கை

## வடமாகாண அதிகாரிகளும் ஒத்துழைப்பு


(யாழ். நிருபர்)

தேசிய ரீதியில் செயற்படும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சேவை சங்கத்தினால் நாடுதழுவிய ரீதியில் எதிர்வரும் 14ஆம் திகதி முன்னெடுக்கப்படவிருக்கும் தொழிற்சங்க நடவடிக்கைக்கு வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் தனது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்க தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக வடமாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நீண்ட கால அடிப்படையில் காணப்படும் சம்பள முரண்பாடுகள், மேலதிக கொடுப்பனவுகள், பதவியுயர்வு மற்றும் ஏனைய தீர்க்கப்படாத பிரச்சினைகளை முன்னிறுத்தி மேற்கொள்ளப்படும் தொழிற்சங்கப் போராட்டத்திற்கு வடமாகாணத்தை சேர்ந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களாகிய நாம் பூரண ஒத்துழைப்பை வழங்கி குறித்த போராட்டத்தை வெற்றிபெற செய்வோம்.

எனவே குறித்த தினத்தில் வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தமது திணைக்களங்களுக்கு சுகயீன விடுமுறையை உரிய முறையில் அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்கி இதை வெற்றிபெறச் செய்யுமாறு கேட்டுக்கொள்கின்றோம் – எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


Northern Province Development Officers' Union

10.03.2022

PRESIDENT Northern Province Development Officers' Union

SECRETARY

# முஸ்லிம் மீடியா போரத்தின் வருடாந்த மாநாடு இன்று

(அஷ்ரப் ஏ சமத்)

ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் இருபத்தைந்தாவது வருடாந்த மாநாடு இன்று (12) காலை 09.00 மணிக்கு இடம்பெறவுள்ளது. மருதானை அல் - ஹிதாய மகா வித்தியாயலத்தில் உள்ள பஹார்த்தீன் கூட்ட மண்டபத்தில் நடைபெறும் என ஏற்பாட்டாளார் குழுவினர் அறிவித்துள்ளனர்.

இரு அமர்வுகளாக நடைபெறும் இந்த மாநாட்டில் முதல் அமர்வில் பிரதம அதிதியாக ஊடக அமைச்சர் டலஸ் அலகப்பெரும கலந்து கொள்ளவுள்ளார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன் தலைமையில் நடைபெறும் இந்த மாநாட்டில் இந்திய லோக்சபா நாடாளுமன்ற உறுப்பினர் நவாஸ் கனி, அதிதியாகக் கலந்து சிறப்பித்ததோடு கலாநிதி எம்.சி.ரஸ்மின் முஸ்லிம்களும் ஊடக எதிர்காலமும் என்ற தலைப்பில் சிறப்புரையாற்றுவார்.

இரண்டாவது அமர்வில் வருடாந்தப் பொதுக் கூட்டம் நடைபெறும்.

புதிய உத்தியோகத்தர்கள் தெரிவும் யாப்புத்திருத்தம் பற்றிய செயற்குழு பிரேரணையும் இதன்போது ஆராயப்படும். சுகாதாரத்தை முழுமையாகப் பேணி இம்மாநாடு நடத்தப்படவிருப்பதாக இம்மாநாடு போரத்தின் செயலாளர் என்.ஏ.எம் சாதிக் சிஹான் தெரிவித்தார்.

5ஆவது முறையாக வெளியிடும் முஸ்லிம் மீடியா அங்கத்தவர்களும் மற்றும் ஊடக தகவல்கள் அடங்கிய நூல் வெளியிடப்பட்டு முதற்பிரதி அமைச்சருக்கு வழங்கி வைக்கப்படும்.

ஏனைய ஊடக சங்கங்கள் மற்றும் ஊடக சம்பந்தமான தொழிற்சங்கங்களது பிரதிநிதிகளும் இம் மாநாட்டில் கலந்து கொள்வார்கள்.

# உலக நீர்த்தினத்தை முன்னிட்டு எல்லகந்த நீர்த்தேக்கப் பகுதியில் மரக்கன்று நடும் நிகழ்வு







(பேருவளை நிருபர்)

அனுஷ்டிக்கப்படவுள்ள உலக நீர்த் தினத்தை முன்னிட்டு தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பு சபை நாடளாவிய ரீதியில் பல்வேறு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்துள்ளது.

உலக நீர்த் தினம் எதிர்வரும் 22ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த வேலைத்திட்டத்தின்கீழ் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் (மேற்கு - தெற்கு) அலுவலகம் மற்றும் பாணந்துறை ஹொரணை முகாமையாளர் அலுவலகங்களின் ஏற்பாட்டில் மரக்கன்று நடும் வைபவம் ஹொரணை எல்லகந்த நீர்த்தேக்க பகுதியில் இடம்பெற்றது.

பிரதேச அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் பங்குபற்றலுடன் மரம் நடும் வைபவம் நேற்று (11) சிறப்பாக நடைபெற்றது.

தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் (மேற்கு - தெற்கு) அலுவலக பிரதிப் பொது முகாமையாளர் எச்.எம். ராஸில், ஹொரணை நகர சபைத் தலைவர் உட்பட நீர்வழங்கல் சபையின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

பாடசாலை மாணவர்களால் நடப்பட்ட மரங்களை அந்த மாணவர்களே மரம் வளரும் வரை பராமரிக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.









ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாவட்ட மாநாடு நேற்று முன்தினம் (10) கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது. (படப்பிடிப்பு – சமன் அபேசிறிவர்தன)

# மதுரங்குளி எரிவாயு மொத்த விற்பனை நிலையத்தில் பதற்றம்






(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம் பகுதிகளுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகம் செய்கின்ற மதுரங்குளி 10ஆம் கட்டைப் பகுதியிலுள்ள மொத்த விற்பனை நிலையத்தில் நேற்று முன்தினம் (10) பதற்றநிலை காணப்பட்டது.

எனினும், மதுரங்குளி பொலிஸார் அங்கு வருகை தந்து நிலைமைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

குறித்த மொத்த விற்பனை நிலையத்திலுள்ள களஞ்சியசாலையில் 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு சிலிண்டர்கள் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக தெரிவித்து, அங்கு எரிவாயு கொள்வனவு செய்ய வருகை தரும் நூற்றுக்கும் மேற்பட்டோர் தமது கடும் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இதனால், புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் 10ஆம் கட்டைப் பகுதியில் சுமார் 30 நிமிடங்கள் வரை பதற்றநிலை காணப்பட்டது.

புத்தளம் மாவட்டத்தில் சமையல் எரிவாயுவுக்கு தொடர்ந்தும் தட்டுப்பாடு நிலவி வருவதனால் பொதுமக்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இதனால், பேக்கரி உரிமையாளர்கள், ஹோட்டல் உரிமையாளர்கள் உட்பட பொதுமக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

புத்தளம் மாவட்டத்திலுள்ள சமையல் எரிவாயு விற்பனை நிலையங்களில் "சமையல் எரிவாயு இல்லை" என்கின்ற பதாதைகள் தொங்கவிடப்பட்டுள்ளதை அவதானிக்க முடிந்தது. இதனால், சமையல் எரிவாயு கொள்வனவு செய்வதற்காக முடிந்த சமையல் எரிவாயு சிலிண்டர்களை எடுத்து வரும் மக்கள் ஏமாற்றத்துடன் வீடுகளுக்கு திரும்பிச் செல்வதை அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, புத்தளம் பகுதிகளுக்கு சமையல் எரிவாயு சிலிண்டர்களை விநியோகம் செய்கின்ற மதுரங்குளி 10ஆம் கட்டைப் பகுதியில் உள்ள மொத்த விற்பனை நிலையத்தில் 2.3 கிலோ கிராம் மற்றும் 5.0 கிலோ கிராம் எடையுடைய சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மாத்திரம் விநியோகிக்கப்படுவதாகவும் மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனால் புத்தளம், கற்பிட்டி, கருவலகஸ்வெவ, முந்தல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்கள் சமையல் எரிவாயுவை பெறுவதற்காக முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள்கள் என்பவற்றில் ஒவ்வொரு நாளும் நேரகாலத்துடன் வருகை தந்து வரிசையில் காத்திருப்பதை அவதானிக்க முடிந்தது.

இந்நிலையில், களஞ்சியசாலையில் 12.5 கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயு இருப்பதை அவதானித்த சிலர் அங்கிருந்த ஏனையோருக்கும் தெரியப்படுத்தி, சமையல் எரிவாயு பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக கூறி அங்கிருந்த எரிவாயு மொத்த விற்பனை நிலைய ஊழியர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து, அந்த மக்கள் புத்தளம்-கொழும்பு பிரதான வீதியின் மதுரங்குளி 10 ஆம் கட்டைப் பகுதியிலுள்ள சமையல் எரிவாயு மொத்த விநியோக நிலையத்துக்கு முன்னால் வீதியை மறித்து எதிர்ப்பை தெரிவித்தனர்.

இதனால், சில நிமிடங்கள் போக்குவரத்துக்கும் தடை ஏற்பட்டது. இதனையடுத்து, மதுரங்குளி பொலிஸ் நிலைய போக்குவத்து பொலிஸாரும் சம்பவ இடத்துக்கு வருகை தந்தனர்.

இதன்போது, வீதியின் நடுவில் இருந்துகொண்டு எதிர்ப்புகளை தெரிவித்த பொதுமக்களுடன் கலந்துரையாடி போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்த வேண்டாம் எனக் கேட்டுக்கொண்டதை அடுத்து, அவ்வீதியுடனான போக்குவரத்து வழமைக்கு கொண்டு வரப்பட்டது. இதனையடுத்து, அங்கு வருகை தந்த மதுரங்குளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொதுமக்களுடன் கலந்துரையாடினார்.

இதனையடுத்து, எரிவாயு மொத்த விற்பனை நிலையை பொறுப்பாளர்களுடன் நடந்த கலந்துரையாடல் பற்றி, மக்களுக்கு தெரியப்படுத்திய மதுரங்குளி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொண்டார்.

# உயர்கல்வி - துறைசார் வழிகாட்டல் யாழ்ப்பாண கல்விக் கண்காட்சி – 2022








(யாழ். நிருபர்)

உயர்கல்வி மற்றும் துறைசார்வழிகாட்டல் யாழ்ப்பாண கல்விக்கண்காட்சி 2022 நேற்று வெள்ளிக்கிழமை வலம்புரி ஹோட்டலில் இடம்பெற்றது.

இக்கண்காட்சியின் நோக்கமாக கல்விப் பொதுத் தராதர உயர்தரத்தில் கல்வி கற்றவர்களுக்கான தொழில்முயற்சிக்கான வழிகாட்டல் கண்காட்சியாக உள்ளது.

இதில் தென் இலங்கையைச்சேர்ந்த 36 கல்வித்துறைசார்ந்த தனியார் நிறுவனங்களும் 15 அரசத் திணைக்களத் துடன் இணைந்த அலுவலகமும் முழுமையான ஒத்துழைப்பினை வழங்கி துறை சார்ந்தவர்களினால் கண்காட்சிக்கான தெளி வூட்டல்கள் அறிவிக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், யாழ். மத்திய கல்லூரி அதிபர் எ.எழில்வேந்தன் மற்றும் அரச, தனியார்துறைசார்ந்த கல்விக்கான துறைசார்ந்த நிபுணர்கள் பிரதிநிதித்துவ அலுவலர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இக்கற்கைநெறியில் NVQ டிப்ளோமா சான்றிதழ் 1, 2, 3, 4 உள்ளடக்கப் பட்டுள்ளது. இக்கண்காட்சி இன்றும் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டுத்துறையில் இராணுவ வீரர்களின் சாதனை






தேசிய விளையாட்டு தேர்வுக்குழுவின் தலைவராக இராணுவ தளபதி ஜெனரல் ஷவேந்திர சில்வா செயற்பட்டு வருகின்ற நிலையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டங்களிலான விளையாட்டு போட்டிகளில் இராணுவ விளையாட்டு வீரர்களின் பங்களிப்பு இன்றியமையாததாக அமைந்துள்ளது.

அதன்படி கிரிக்கெட், கூடைப்பந்து, கரப்பந்து, கராத்தே, மோட்டார் பந்தயம், ரைடிங் மற்றும் டிரைவிங், பில்லியர்ட்ஸ், மல்யுத்தம், வலைப்பந்து, எல்லே, பூப்பந்தாட்டம், டேபிள் டெனிஸ், வில்வித்தை, ஸ்குவாஷ், ரக்பி, கயிறு இழுத்தல், உயரம் பாய்தல், பேஸ்பால் மற்றும் பிற தடகளப் போட்டிகள் ஆகியவற்றில் இராணுவ வீரர்கள் பங்குபற்றி சிறப்பான சாதனைகளை பதிவு செய்துள்ளனர்.

அதற்கமைய தேசிய தடகள சங்கத்துடன் இணைந்து அமெரிக்க டெக்சாஸ், லுபோக்கில் உள்ள டெக்சாஸ் டெக் ஸ்போர்ட்ஸ் பெர்பார்மன்ஸ் நிலையத்தில் பெப்ரவரி 25 முதல் 26 வரை நடத்தப்பட்ட இன்டோர் லோன் ஸ்டார் உயரம் பாய்தல் போட்டிகளில் பங்குபற்றிய இலங்கை இராணுவ பொதுச் சேவை படையணியின் சிப்பாய் எச்.டி.யூ.டி. பெரேரா தனது சொந்த சாதனையை முறியடித்து 2.27 மீற்றர் என்ற புதிய சாதனையை பதிவு செய்துள்ளார்.

சிங்கப்பூரில், சில நாட்களுக்கு முன்பு நடைபெற்ற சர்வதேச பளுதூக்கும் சாம்பியன்ஷிப் - 2022 போட்டிகளில், இராணுவ பளுதூக்கும் வீரர்கள் 67 கிலோ எடைப்பிரிவில் தங்கப்பதக்கத்தையும் 57 கிலோ எடைப்பிரிவில் வெண்கலப் பதக்கத்தினையும் வென்றனர். மேலும் இங்கிலாந்தின் பர்மிங்ஹாமில் நடைபெறவிருக்கும் பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கான தகுதியினையும் இவர்கள் பெற்றுக் கொண்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

கடற்படை, விமானப்படை, பொலிஸ் மற்றும் நாட்டிலுள்ள பல முன்னணி கராத்தே அணிகளின் பங்கேற்புடன் அண்மையில் நடைபெற்ற இலங்கை கராத்தே பிரீமியர் லீக் – 2022 போட்டிகளில் 16 அணிகளை தோற்கடித்து இராணுவ அணி முதலிடத்தை பிடித்துக்கொண்டது.

இலங்கை கிரிக்கெட் அணிக்கு இலங்கை இராணுவ கிரிக்கெட் அணியினர் வழங்கிவரும் பங்களிப்பு இன்றியமையாதவையாக காணப்படுகின்றது. அந்த வகையில் இராணுவ வீரர்களான மேஜர் சந்திமால் மற்றும் சாதாரண சிப்பாய் மகேஷ் தீக்ஷன ஆகியோர் தேசிய கிரிகெட் அணியினை பிரதிநிதித்துவம் செய்கின்றமை சிறப்பம்சமாகும்.

இராணுவ ரக்பி வீரர்களுக்கு நிகராக இராணுவத்தின் கால்பந்தாட்ட வீரர்களும் தங்களுக்கென தனியொரு இடத்தை பிடித்துக்கொண்டுள்ளனர். இராணுவ கால்பந்தாட்ட கழகத்தில் உள்ள நான்கு வீரர்கள் தற்போது இலங்கை தேசிய கால்பந்தாட்ட அணியில் அங்கம் வகிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும், நீர்கொழும்பில் அண்மையில் நடைபெற்ற 10ஆவது திறந்த சர்வதேச சக்கர நாற்காலிப் போட்டியின் ஆண்கள் திறந்த ஒற்றையர் பிரிவில் இலங்கை பீரங்கி படையணியின் சார்ஜென்ட் டி.எஸ்.ஆர். தர்மசேன பங்குபற்றி வெற்றிபெற்றார். கடந்த காலங்களில் சக்கர நாற்காலி டென்னிஸ் மற்றும் பேட்மிண்டன் போட்டிகளில் பங்குபற்றி நாட்டுக்கும் இராணுவத்துக்கும் பெருமை சேர்த்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை, சர்வதேசப் போட்டிகளில் நடுவர்களாக அங்கத்துவம் வகிக்கும் வாய்ப்புகளையும் இலங்கையின் இராணுவத்தின் விளையாட்டுத்துறை பயிற்றுனர்கள் பெற்றுக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாறு இராணுவ வீரர்கள் விளையாட்டு துறையில் அர்ப்பணிப்பு சேவைகளை வழங்கி தாய்நாட்டுக்காகவும் இராணுவத்துக்காகவும் பெருமை சேர்த்துள்ளமையானது, இலங்கை மக்கள் மத்தியில் பெரிதும் வரவேற்பினை பெற்றுள்ளது.

# அடுத்த வாரத்தில் எரிபொருள் பிரச்சினைக்கு தீர்வு

## எரிசக்தி அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு



தற்போது நாட்டில் நிலவும் எரிபொருள் விநியோகம் தொடர்பான பிரச்சினைகள் இன்று சனிக்கிழமைக்குள் தீர்க்கப்பட்டு, திங்கட்கிழமை முதல் வழமைக்குத் திரும்பும் என எரிசக்தி அமைச்சின் செயலாளர் திருமதி கே.டி.ஆர். ஒல்கா தெரிவித்தார்.

"வலு சக்தி நாட்டுக்கு ஒரு பலம்" என்ற தொனிப்பொருளில் நேற்று முன்தினம் (10) ஜனாதிபதி ஊடக மையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக சந்திப்பிலேயே செயலாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஏற்கனவே டீசல் கப்பல் ஒன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளதுடன், இந்த மாதம் நான்கு கப்பல்களிலிருந்து ஒரு இலட்சத்து 72 ஆயிரம் மெற்றிக் தொன் டீசல் கிடைக்கவுள்ளது. அவ்வாறு கிடைக்கும் எரிபொருள் விரைவாக விநியோகிக்கப்படும்.

மின் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவையான பல மசகு எண்ணெய்க் கப்பல்கள் (30,000 மெட்ரிக் தொன்) பெறப்பட்டுள்ளன. எரிபொருள் எண்ணெய் பயன்படுத்தும் வெஸ்ட் கோர்ட் போன்ற மின் உற்பத்தி நிலையங்கள் முழுமையாக இயங்க முடியும். எதிர்வரும் 20ஆம் திகதி அளவில் மேலும் சில கச்சா எண்ணெய்க் கப்பல்கள் வரவுள்ளன.

எரிபொருள் கையிருப்பு கிடைத்ததும், தற்போதைய எரிபொருள் மற்றும் மின்சார பிரச்சினைகள் மிக விரைவாக தீரும். எங்களின் திட்டங்களின்படி தேவையான டொலர்களைப் பெற்றுக்கொள்வது குறித்தும் உரிய தரப்பினருக்குத் தெரியப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் செயலாளர், திறைசேரியின் செயலாளர் மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் ஆகியோர் நிலைமையைத் தொடர்ந்து கண்காணித்து, இந்த வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்குத் தேவையான ஆதரவை வழங்கி வருகின்றனர்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை நவீனமயப்படுத்தியதன் பின்னர் கொழும்பு வழியாகச் செல்லாமல் வடக்கு, வட மத்திய, பதுளை போன்ற பகுதிகளுக்கு திருகோணமலை ஊடாக எண்ணெய் விநியோகம் மேற்கொள்ள முடியும். இதன் மூலம் மாதாந்தம் சுமார் 800 மில்லியன் ரூபா சேமிக்கப்படும்.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இருக்கவில்லை. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் எரிபொருள் விநியோகம் சாதாரணமாக நடைபெற்றது.

உலக சந்தையில் எரிபொருளின் விலை அதிகரித்துள்ளதால், உள்நாட்டிலும் விலை உயரலாம் என்ற அச்சத்தில் நுகர்வோர் எரிபொருளை சேமிக்க ஆரம்பித்துள்ளனர்.

இறக்குமதி செய்யப்படும் எரிபொருளுக்கு மிக அதிக டொலர்கள் செலுத்த வேண்டியுள்ளது. இந்த நேரத்தில் எரிபொருள் பாவனையை சரியான முறையில் முகாமைத்துவப்படுத்தினால் நாட்டுக்கு நல்லது என்றார்.

# காணி உரிமையாளரை தாக்கி மோட்டார்சைக்கிளுக்கும் தீ வைத்த மணல் கொள்ளையர்கள்

(யாழ். நிருபர்)

தனது காணிக்குள் அத்துமீறி நுழைந்து மணல் கொள்ளையில் ஈடுபட்ட நபர்களை தடுக்கச் சென்ற காணி உரிமையாளர் தாக்கப்பட்டு, அவரது மோட்டார்சைக்கிளும் எரிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து தெரியவருவதாவது,

கொடிகாமம், பாலாவி தெற்கு கடற்கரைப் பகுதியிலுள்ள தனியார் காணி ஒன்றுக்குள் அத்துமீறி நுழைந்த மணல் கொள்ளையர்கள், காணிக்குள் மணல் கொள்ளையில் ஈடுபட்டுள் ளனர்.

இதனை அறிந்த காணி உரிமையாளர் மணல் கொள்ளையை தடுக்கச் சென்றபோது, கொள்ளையர்கள் காணி உரிமையாளரைத் தாக்கி, அவரது மோட்டார்சைக்கிளையும் தீ மூட்டி எரித்துவிட்டுச் சென்றுள்ளனர்.

கொள்ளையர்களின் தாக்குதலுக்கு இலக்கான காணி உரிமையாளர் சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்ட நிலையில், பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# யாழில் ஓடுகளை திருடி விற்பனைசெய்த குற்றச்சாட்டில் கைதானவர் விளக்கமறியலில்!

(யாழ். நிருபர்)

யாழில் ஓடுகளைத் திருடி விற்பனை செய்துவந்த நபரை எதிர்வரும் 23ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க யாழ். நீதவான் நீதிமன்ற நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியைச் சேர்ந்த 30 வயதான சந்தேகநபர் நகர்ப்பகுதியிலுள்ள வீடுகளுக்குள் நுழைந்து ஓடுகளைத் திருடி விற்பனை செய்துவந்த நிலையிலேயே குறித்த நபர் யாழ். குற்றத்தடுப்புப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேக நபரை விசாரணைகளின் பின்னர் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தியபோதே நீதவான் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

# வரலாற்று தொன்மை வாய்ந்த நல்லூர் மந்திரிமனை யன்னல்கள் திருட்டு






(யாழ். நிருபர்)

வரலாற்று தொன்மை வாய்ந்த நல்லூர் மந்திரி மனை யன்னல் மற்றும் யன்னல் கம்பிகள் என்பன களவாடப்பட்டுள்ளன.

மந்திரி மனையின் பின்பக்கமாக காணப்பட்ட யன்னல் கம்பிகள் மற்றும் யன்னல் என்பவை பெயர்த்தெடுக்கப்பட்டு திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட் டுள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கட்டடத்தின் வரலாற்றுப் பின்னணி மந்திரி மனை என்பது இலங்கையின் வடபகுதியில் இருந்த - யாழ்ப்பாண மாவட்டத்தின் தலைநகராக இருந்த நல்லூரில் அரச காலத்தோடு சம்பந்தப்படும் ஒரு கட்டடமாகும். போர்த்துக்கேயரால் யாழ்ப்பாண அரசு கைப்பற்றப்படுவதற்கு முன்னுள்ள காலப்பகுதிவரை அமைச்சரின் இருப்பிடமாக இருந்துள்ளது. இது 13ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டது. இக்கட்டடம் செங்கட்டி, சுண்ணாம்பு சாந்து, மரங்கள், ஓடுகள் கொண்டு கட்டப்பட்டுள்ளது.

# வவுனியா பொலிஸாரால் இளைஞன் ஒருவர் கைது


(வவுனியா நிருபர்)

வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸாரால் 22 வயது இளைஞன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, சந்தை உள்வட்டவீதியில் அமைந்துள்ள நகை விற்பனையகம் ஒன்றில் கடந்த 4ஆம் திகதிசங்கிலி ஒன்று திருடப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டுக்கமைவாக வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி யின் வழிகாட்டலில் குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் மேற்கொண்ட விசாரணைகளின்போது அநுராதபுரம் பகுதியைச் சேர்ந்த 22 வயது இளைஞர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை களில் திருடப்பட்ட சங்கிலி மீட்கப்பட்டுள் ளதுடன், மேலதிக விசாரணைகளின் பின் நீதிமன்றில் முற்படுத்த நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.



# அரை மணிக்கு ஒரு முறை ரஷ்யா தொடர் குண்டுவீச்சு!

## மரியுபோல் நகரம் நரகமாகிவிட்டதாக மேயர் வேதனை

உக்ரைன் மீதான ரஷ்யத் தாக்குதல் இன்றுடன் 17ஆவது நாளை எட்டியுள்ளது. துறைமுக நகரான மரியுபோலில் ரஷ்யப் படைகள் அரை மணி நேரத்துக்கு ஒரு முறை குண்டு வீசுவதால் அங்குள்ள 4 இலட்சம் மக்களும் கடந்த இரண்டு நாட்களாக நரகத்தில் சிக்கியுள்ளதுபோல் தத்தளிக்கிறார்கள் என அந்நகர மேயர் தெரிவித்துள்ளார்.

மரியுபோலை கிட்டத்தட்ட தனது முழுமையான கட்டுப்பாட்டில் வைத்துள்ளன ரஷ்யப் படைகள். சுமி நகரிலிருந்து 12,000 பேர் வெளியேற்றப்பட்டனர். ஆனால், மரியுபோலிலிருந்து யாரும் வெளியேற ரஷ்யப் படைகள் அனுமதிக்கப்படவில்லை.




**கீவிலிருந்து 20 இலட்சம் பேர் வெளியேறினர்:**

உக்ரைனின் கார்சன், ஒடேசா, செர்னிஹிவ், செனோபில், மரியுபோல், சுமி எனப் பல நகரங்களை தன்வசப்படுத்தியுள்ள ரஷ்யப் படைகள் தற்போது தலைநகர் கீவை குறிவைத்து முன்னேறி வருகின்றன. கீவின் வடகிழக்குப் பகுதியிலிருந்து தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ளது. இதனால் கீவ் நகரிலிருந்து 20 இலட்சம் மக்கள் வெளியேறியதாக அந்நகர மேயர் தெரிவித்துள்ளார். கீவ் நகரிலிருந்து 2இல் ஒருவர் வெளியேறிவிட்டனர் என அவர் தெரிவித்தார். உக்ரைன் மீதான ரஷ்யத் தாக்குதல் தொடங்கியதிலிருந்து இதுவரை 40 இலட்சம் மக்கள் அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

**பேச்சுவார்த்தைக்கு உதவ வேண்டும்:**

சீனா - ரஷ்யா - உக்ரைன் இடையேயான சூழல் குழப்பமானதாக மாறியுள்ளதால் அந்நாடுகள் பேச்சுவார்த்தையை சுமுகமாக நடத்த மத்தியஸ்தம் தேவை என சீனப் பிரதமர் லீ கருத்து தெரிவித்துள்ளார். ஆனால், உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யா மீது சீனா தடை விதிக்குமா? ரஷ்யாவின் செயல்களுக்கு வெளிப்படையாக கண்டனம் தெரிவிக்குமா? போன்ற கேள்விகளுக்குப் பதிலளிக்க அவர் மறுத்துவிட்டார்.

**உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரிக்கை:**

உக்ரைன் இரசாயன ஆயுதங்களை தயாரிக்கிறது என ரஷ்யாவும், ரஷ்யாதான் தயாரிக்கிறது என அமெரிக்கா உள்ளிட்ட உலக நாடுகளும் சொல்லிவரும் நிலையில், உக்ரைனிலுள்ள சோதனைக் கூடங்களில் பரிசோதனைக்காக வைக்கப்பட்டிருக்கும் நோய்க்கிருமிகளை அழித்துவிடுமாறு உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.


**30 நிமிடங்களுக்கு ஒரு முறை தாக்குதல்:**

4 இலட்சம் மக்கள் தொகையைக்கொண்ட மரியுபோல் துறைமுக நகரத்தில் ரஷ்யப் படைகள் அரை மணிநேரத்துக்கு ஒரு முறை குண்டு வீசுவதால் அங்குள்ள 4 இலட்சம் மக்களும் கடந்த இரண்டு நாட்களாக நரகத்தில் சிக்கியுள்ளதுபோல் தத்தளிக்கிறார்கள் என அந்நகர மேயர் வாடிம் பாய்சென்கோ தெரிவித்துள்ளார்.

மேயரின் ஆலோசகர் பெட்ரோ ஆண்ட்ருஷென்கோ கூறுகையில், ரஷ்யா எங்கள் மக்களை அழிக்க வேண்டும் என முடிவு செய்துவிட்டது. அதனாலேயே மீட்புப் பணிகளை முடக்குகிறது என்று வேதனை தெரிவித்தார்.

# உக்ரைனில் ரஷ்யா இரசாயன ஆயுதங்களை பயன்படுத்த வாய்ப்பு

## அமெரிக்கா எச்சரிக்கை



உக்ரைனில் ரஷ்யா இரசாயன ஆயுதங்களை (Biological Weapons) பயன்படுத்தும் வாய்ப்புள்ளது என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்க வெளியுறவுத்துறை செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் தனது ட்விட்டர் பக்கத்தில்,

"உக்ரைனும், அமெரிக்காவும் இரசாயன ஆயுதத் திட்டங்களில் ஈடுபடுவதாக பொய்ப் பிரசாரத்தை ரஷ்யா வேண்டுமென்றே பரப்புகிறது. உக்ரைனில் தாங்கள் நடத்தும் கொடுமையான செயல்பாடுகளை மறைக்க ரஷ்யா, இந்தப் பொய்யை பரப்புகிறது. உக்ரைனில் உயிரி ஆயுதங்களை ரஷ்யாதான் பயன்படுத்த வாய்ப்பிருக்கிறது. இதில் நாம் கவனமாக இருக்க வேண்டும்" என்று பதிவிட்டுள்ளார்.


இதனிடையே, மரியுபோல் மருத்துவமனையில், ரஷ்யா நடத்திய வான்வழித் தாக்குதலில் 17 பேர் காயமடைந்ததாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்புடன் சேரவும், ஐரோப்பிய நாடுகளுடன் நெருங்கிய உறவு வைத்துக்கொள்ளவும் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி மிகவும் பிடிவாதமாக இருந்துவந்தார். இது ரஷ்யாவுக்கு பாதகமான விஷயம் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தொடர்ந்து எச்சரித்து வந்தார். எனினும், நேட்டோவில் சேர்வதற்கு ஜெலன்ஸ்கி தீவிரம் காட்டிவந்தார். இதையடுத்து, கடந்த மாதம் 24ஆம் திகதி உக்ரைன் மீதான இராணுவத் தாக்குதலை ரஷ்யா தொடங்கியது.

இந்தத் தாக்குதலில் இரு தரப்பிலும் உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டன. இலட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக உக்ரைனிலிருந்து அண்டை நாடுகளுக்கு சென்றடைந்துள்ளனர்.

இந்நிலையில், அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பின் உறுப்பினராக சேர மாட்டேன். ரஷ்ய ஜனாதிபதி புட்டினுடன் நேரடியாக சமரச பேச்சுவார்த்தை நடத்தத் தயார் என்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி பகிரங்கமாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# உலகளவில் உணவுப் பொருட்களின் விலை உயரக்கூடும் - புட்டின் எச்சரிக்கை!



உலகளாவிய உர உற்பத்தி நாடான ரஷ்யா மீது மேற்கத்திய நாடுகளின் பொருளாதாரத் தடைகளை தீவிரப்படுத்தினால் உலகளவிலான உணவுப் பொருட்களின் விலைகள் மேலும் உயரக்கூடும் - என்று ரஷ்ய ஜனாதிபதி புட்டின் எச்சரித்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யப் படைகள் தொடர்ந்து தாக்குதல் நடத்திவரும் நிலையில், மேற்கத்திய நாடுகள் ரஷ்யா மீது பொருளாதார ரீதியான தடைகளை விதித்துள்ளது. பல்வேறு நாடுகளை சேர்ந்த நிறுவனங்களும் ரஷ்யாவுக்கான தங்களது சேவையை நிறுத்துவதாக அறிவித்துள்ளன.

இந்நிலையில், ரஷ்ய மீது மேற்கத்திய நாடுகள் விதித்துள்ள பொருளாதாரத் தடைகளால் உலகளவிலான உணவுப் பொருட்களின் விலை உயரக்கூடும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஜனாதிபதி புட்டின் எச்சரித்துள்ளார்.

இதுதொடர்பாக ரஷ்ய முக்கிய அரசதுறை அதிகாரிகளுடனான உயர்மட்ட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில் பேசிய புட்டின், ரஷ்யா மீதான பொருளாதார ரீதியான தடைகள் சட்டவிரோத மானது. மேற்கத்திய நாடுகள் தங்கள் மக்களை ஏமாற்றுவதாகவும், பொருளாதாரத் தடையால் ஏற்படும் பிரச்சினைகளை ரஷ்யா அமைதியாக தீர்க்கும். ரஷ்ய உணவுப் பாதுகாப்பு உறுதிசெய்யப் பட்டுள்ளதாகவும், உலகளாவிய உர உற்பத்தியாளரான ரஷ்யா, உலகளாவிய விவசாயச் சந்தைகளுக்கான ஏற்றுமதி சேவையை ரஷ்யா தொடர்ந்து செய்யும். எரிவாயு விநியோகம் ஒப்பந்தங்களின் அடிப்படையில் தொடர்ந்து வழங்கப்படும் - என்றார்.

மேலும் ரஷ்யா மற்றும் பெலாரஸ் நாடுகளிலிருந்து பெரும்பாலான உரம் மற்றும் வளங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதால் விரைவில் உலகளவிலான உணவுப்பொருட்கள் மற்றும் இறுதிக்கட்ட பணிகளுக்குத் தேவையான பொருட்களின் விலை உயரும் என்று புட்டின் எச்சரித்துள்ளார்.

உக்ரைனில் ரஷ்யாவின் இரண்டு வாரமாக நடைபெற்றுவரும் தாக்குதலில் ஆயிரக்கணக்கான வீரர்கள் மற்றும் பொதுமக்கள் கொல்லப்பட்டனர் மற்றும் 20 இலட்சத்துக்கும் அதிகமான மக்கள் நாட்டைவிட்டு வெளியேறவேண்டிய கட்டாயத்தில் உள்ளனர். போரால் 20 இலட்சம் மக்களை நாட்டைவிட்டு வெளியேற கட்டாயப்படுத்தியுள்ளது. அவர்களில் அதிகளவில் குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

# அவுஸ்திரேலிய கல்விக் கண்காட்சி 2022: மார்ச் 12,13 ஆம் திகதிகளில் உலக வாய்ப்பை பெறுங்கள்

உலகின் சிறந்த இளம் பல்கலைக்கழகங்களின் தரவரிசையில் இருக்கும் Edith Cowan University (ECU) Australian College of Business and Technologyயுடன் இணைந்து இந்த ஆண்டு கொழும்பில் நடைபெறவிருக்கும் அவுஸ்திரேலிய கல்விக் கண்காட்சி (AEE) One Galle Face Mall Atrium இல் 2022 மார்ச் 12 மற்றும் 13ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் மாலை 7.00 மணிவரை பங்குகொள்கின்றது.

Edith Cowan Universityயின் இலங்கை வளாகத்தின் ஊடாக இலங்கை மாணவர்கள் இலங்கையில் கல்வி கற்றவாறே அவுஸ்திரேலிய பட்டம் பெறுவது பற்றி அனுபவத்துடன்கூடிய ஒரு கண்ணோட்டத்தை வருங்கால மாணவர்களுக்கும் அவர்களது பெற்றோருக்கும் இந்நிகழ்வு வழங்கும்.

Edith Cowan Universityயின் இணைப் பேராசிரியரும் அதன் சர்வதேச உறவுகள் பிரிவின் பீடாதிபதியுமான ஹெலன் வெல்லா பொனவிடா இது தொடர்பாக கருத்து தெரிவிக்கையில், "மேற்கு அவுஸ்திரேலியாவில் உள்ள Edith Cowan பல்கலைக்கழகம் கொழும்பில் நடைபெறும் அவுஸ்திரேலிய கல்வி கண்காட்சியில் கலந்துகொள்வதில் மகிழ்ச்சியடைகிறது. எங்களுடன் உங்கள் கல்விப் பயணத்தை ஆராய்ந்து வெற்றிக்கான உங்கள் பாலத்தை உருவாக்க உங்கள் அனைவரையும் நாங்கள் வரவேற்கிறோம்."

Edith Cowan University யானது அவுஸ்திரேலியாவில் 30,000 இளங்கலை மற்றும் முதுகலை மாணவர்களைக் கொண்ட சிறந்த, அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் ஒன்றாகும். மேலும், 100 நாடுகளிலிருந்து ஆண்டுதோறும்




படம்: (இடமிருந்து வலம்) மனிஷா குணசேகர - ஆட்சேர்ப்பு மேலாளர், Edith Cowan பல்கலைக்கழகம் இலங்கை, சமிந்த ரணசிங்க - இணை முதல்வர், ACBT & Edith Cowan College இலங்கை, கொழும்பு, டியோன் கிரிகோரி - பகுதி மேலாளர் இலங்கை, Navitas, டேவிட் மேத்யூஸ் - பொது மேலாளர், Edith Cowan பல்கலைக்கழகம் இலங்கை, Dr. சஜானி டயஸ் - கல்வித் திட்டங்கள், Edith Cowan பல்கலைக்கழகம் இலங்கை, சரத் பெரேரா - சந்தைப்படுத்தல் மற்றும் சேர்க்கைத் தலைவர், Edith Cowan பல்கலைக்கழகம், இலங்கை.

6,000 சர்வதேச மாணவர்களையும் இப்பல்கலைக்கழகம் இணைக்கின்றது. இப்பல்கலைக்கழகம், கலை மற்றும் மனிதநேயம், வணிகம் மற்றும் சட்டம், கல்வி, பொறியியல், மருத்துவம் மற்றும் சுகாதார அறிவியல், செவிலியர் மற்றும் மருத்துவச்சி கற்கைநெறி, அறிவியல் மற்றும் கலை ஆகிய பிரிவுகளில் பரந்த அளவிலான கற்கை நெறிகளை வழங்குகிறது.

Edith Cowan University – Sri Lanka (ECU Sri Lanka) என்பது Edith Cowan Universityயின் நான்காவது வளாகமாகும். இது இலங்கையில் முழுப் பட்டங்கள் உட்பட உலகத் தரம் வாய்ந்த அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத் தகுதிகளை வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.

தற்போது, கொழும்பு வளாகமானது வணிகம், இளங்கலை கணினி அறிவியல், அறிவியல் (Cyber Security), அறிவியல் (Biomedical Science), வடிவமைப்பு (விளையாட்டுகள் மற்றும் ஊடாடும் வடிவமைப்பு) மற்றும் அறிவியல் (செவிலியர் படிப்புகள்) ஆகிய பிரிவுகளில் இளங்கலை பட்டங்களை வழங்குகின்றது.

கொழும்பில் நடைபெறவுள்ள அவுஸ்திரேலிய கல்விக் கண்காட்சியில் பங்குபெறவுள்ளமை குறித்து ECU Sri Lankaவின் பொது முகாமையாளர் டேவிட் மேத்யூஸ் மேலும் தெரிவிக்கையில், "அவுஸ்திரேலிய கல்விக் கண்காட்சியில் அனைவரையும் சந்திப்பதற்கும், எமது அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தின் இலங்கை வளாகத்திலுள்ள அற்புதமான வாய்ப்புகள் பற்றிய பெறுமதியான தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்கும் நான் ஆவலுடன் உள்ளேன்."

அவுஸ்திரேலிய கல்வி கண்காட்சியில் Edith Cowan Universityயுடன் Australian College of Business and Technology (ACBT) மற்றும் Edith Cowan College (ECC) உம் பங்குபற்றுகின்றது. இவ்விரு தனியார் கல்வி நிறுவனங்களும் இரண்டு தசாப்த கால வரலாற்றைக்கொண்டவை என்பது குறிப்பிடத்தக்க அமிசமாகும்.

ACBT மற்றும் ECC ஆகியவை பல்கலைக்கழக முதல்நிலை திட்டங்கள் (UFPs) மற்றும் டிப்ளோமா தகுதிகளை வழங்குகின்றன, அவை கொழும்பு மற்றும் அவுஸ்திரேலியாவிலுள்ள Edith Cowan பல்கலைக்கழகத்தின் இளங்கலைப் பட்டப்படிப்புகளை கற்க ஒரு பாதையை வழங்குகிறது.

உங்கள் எதிர்கால கல்வித் திட்டங்களை பற்றி எங்களுடன் கலந்துரையாடுவதற்கு நாங்கள் உங்களை வரவேற்பதோடு இசைவிணக்கம் கொண்ட முறையில் மற்றும் உங்களுக்கு கட்டுப்படியாகும் விதத்தில் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகக் கல்விக்கான உங்கள் கனவை அடையவும் நாம் உதவுவோம். உங்கள் கனவுப் பாதை மற்றும் வாய்ப்பினை உறுதிசெய்துகொள்ள எங்கள் பல்கலைக்கழத்தில் உட்சேர்க்கும் ஊழியர்களிடம் நேரடியாகப் பேசுங்கள்.

இலங்கை மற்றும் பிராந்தியத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு இலங்கை மற்றும் அவுஸ்திரேலியாவிலுள்ள அவுஸ்திரேலிய தொழில், இளங்கலை மற்றும் முதுகலை தகைமைகள் பற்றிய தகவல்களை வழங்குவதற்காக உலகின் மிகப்பெரிய கல்வி வழங்குனர்களில் ஒன்றான Navitas நிறுவனமானது அவுஸ்திரேலிய கல்வி கண்காட்சியை ஏற்பாடு செய்துள்ளது. Navitas நிறுவனமானது உலகளாவிய கல்வித்துறையில் முன்னணியில் உள்ளதோடு மட்டுமல்லாது, தலைமுறை தலைமுறையாகக் கற்பவர்களின் வாழ்க்கையை கல்வியின் மூலம் மாற்றியமைக்க உதவியுள்ளது.

அவுஸ்திரேலிய கல்விக் கண்காட்சியில் எங்களை கண்டுகளியுங்கள். உங்கள் அவுஸ்திரேலிய பட்டப்படிப்புக்கான வாய்ப்புகள் மற்றும் வெற்றிக்கான பாதைகளைப் பற்றி ஆராய்ந்து கண்டறியுங்கள்!

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7